இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்

VI-ஆம் வகுப்புக்கேற்றது

கி. பி. 1500 தொடக்கம் 1800 வரை

நூலாசிரியர்:

எஸ். எவ். டி சில்வா

உதவி வித்தியாதிபதி, வித்தியா பகுதி

பிரசுரம்

ஸ்ரீலங்கா பப்ளிஷிங் கொம்பனி

111, டாம் தெரு, கொழும்பு

இலங்கைச் சரித்திரமும்
உலக சரித்திரமும்

VI-ஆம் வகுப்புக்கேற்றது

கி. பி. 1500 தொடக்கம் 1800 வரை

ஸ்ரீ லங்கா புத்தக சாலை
No. 221,
கே.கே.எஸ்.ரோட்டு,
யாழ்ப்பாணம்.

நூலாசிரியர்:

எஸ். எவ். டி சில்வா

உதவி வித்தியாதிபதி, வித்தியா பகுதி.

பிரசுரம்

ஸ்ரீலங்கா பப்ளிஷிங் கொம்பெனி

111, டாம் தெரு, கொழும்பு.

முதற் பதிப்பு ஏப்ரல் 1953.

சகல உரிமைகளும் பிரசுரிப்பவர்களுக்கே.

பொருளடக்கம்

அதிகாரம்,		பக்கம்.
1	போர்த்துக்கீசரின் வருகை	1
2.	இலங்கையில் போர்த்துக்கீசர்	11
3.	கண்டி இராச்சியம்	36
4.	டச்சுக் குடியரசின் எழுச்சி	50
5	இலங்கையில் டச்சுக்காரர்	61
6.	கிறிஸ்தவ சக்கராதிபத்தியம் சின்னுபின்னப்படல்	78
7	புதிய முடியாட்சிகளின் எழுச்சி	89
8.	யதேச்சாதிகார முறைக்கு விரோதமான கிளர்ச்சிகள்	104
9.	யதேச்சாதிகார மன்னர் — நல்லாட்சி புரிந்த யதேச்சாதிகாரிகள்	114
10.	குடியேற்ற நாடுகளைப் பெறும் முயற்சிகள்	140

முன்னுரை.

ஆறும் வகுப்புக் கேற்றதாக " இலங்கைச் சரித்திர மும் உலக சரித்திரமும்" எனும் இச் சிறுநூலை எழுதப் புகுந்தமைக்கு நோக்கம் ஒன்றுண்டு கி. பி. 1500 தொடக்கம் 1800 வரையுள்ள பிரதான உலக நிகழ்ச்சி களைச் சிறுவர் சிறுமியர்க்குச் சுலபமான முறையில் விளக்குவதே அது என்க

சரித்திர சம்பந்தமான மிதமிஞ்சிய விஷயங்களைக் கற்பிப்பதால் மாணவர்கள் அவற்றை மனனம் செய்வ தில் தம் சக்தி முழுவதையும் செலுத்தி இடர்ப்படுவது கண்கூடு. அவர்கள் நிகழ்ச்சிகளைப் பாடமாக்குகிறார் களேயன்றி அந் நிகழ்ச்சிகளின் கருத்துக்களை—நோக்கங் களை—அறிய முடிகிறதில்லை.

கி. பி. 1500-ம் ஆண்டு தொடக்கம் 1800-ம் ஆண்டு ஈறுகவுள்ள காலத்துப் பிரதான நிகழ்ச்சிகளை மாத்திரம் எடுத்துக்கூறி அவற்றின் தன்மைகளையும் விளக்குவது தான் இந் நூலின் நோக்கம். இவ்வாறு பிரதான நிகழ்ச்சிகளைப் பிள்ளைகள் அறிந்து, வயது ஏற ஏற இன்னும் பல விஷயங்களைச் சேகரித்துத் தம் சரித்திர அறிவைத் தாமாகவே விருத்திசெய்ய முடியும். **மித மிஞ்சிய** விஷயங்களைச் சரித்திரப் பாடத்தில் கற்பிக் கப்புகுவதால்தான் அப்பாடத்தில் பிள்ளைகள் அதிகம் சிரத்தை கொள்ளாமல் இருக்கிறார்கள் என்று கூறினால் அது மிகையாகாது.

முதலாம் பாகம்

இலங்கை

1-ம் அதிகாரம்.

போர்த்துக்கீசரின் வருகை.

12-ம் 13-ம் நூற்றுண்டுகளிலே ஐரோப்பிய வர்த்தகர்கள் இந்தியாவிற்கும், தூரகிழக்கு நாடுகளுக்கும் தரைமார்க்கமாகச் சென்று தம் வியாபாரத் தொழிலை நடாத்தினர் என்று நீங்கள் ஏற்கெனவே படித்திருப்பீர்கள். மத்தியதரைக் கடல் அல்லது கருங்கடல் துறைமுகங்களில் இருந்துதான் இவர்கள் புறப்பட்டுச் சென்றனர். அக்காலம் மத்தியதரைக் கடல் துறைமுகங்களில் அன்ரியோக் போன்ற பிரதானமான துறைமுகங்களில் இருந்து வர்த்தகர்கள் புறப்பட்டு பஸ்ரா, ஓர்மஸ் என்னும் பட்டினங்களை அடைந்து அங்கிருந்து இந்தியா, இலங்கை என்னும் நாடுகளுக்கும், தூரகிழக்கு நாடுகளுக்குத் தானும் கடல் மார்க்கமாகச் செல்லுவர். சில வர்த்தகர் அன்ரியோக்கில் இருந்து, அக்காலத்தில் மிகவும் செல்வ வளமுற்றிருந்த தாபிறிஸ் நகரத்தையடைந்து அங்கிருந்து பாரசீகத்துக்கூடாக, பால்க், கஷ்கார் என்னும் பட்டினங்களுக்குப்போய், பின்னர் சீனதேசத்தை யடைவர். இன்னும்சில வர்த்தகர் கருங் கடல் துறைமுகமாய நானவில் இருந்து கஸ்பியன் கடல்மூலையைத் தரை மார்க்கமாக அடைந்து அங்

கிருந்து சமார்க்கன்ட் பட்டினத்தை அடைவர். பின்னர் இப்பட்டினத்திலிருந்து கிழக்கு நோக்கி கஷ்கார் வழியாகச் சீனத்துக்குப் போவர்.

மேலே காட்டிய பாதைகள் வழியாக முற்கால ஐரோப்பிய வியாபாரிகள் கிழக்கு நாடுகளுக்குச் சென்றனர். இத்தரைப் பாதைகள் மங்கோலிய சாம்ராச்சியத்துக்கூடாகவே இருந்தன. ஜெங்கிஸ்கான் என்னும் பெயர் கொண்ட அதிபராக்கிரமம் வாய்ந்த அரசனே மங்கோலிய சாம்ராச்சியத்தைத் தாபித்தவன். இச்சாம்ராச்சியத்தைப் பரிபாலித்தவர்களை கான்கள் என்று வழங்கினர். மங்கோலியர் தம் நாட்டுக்கூடாகச் செல்லும் அந்நியராகிய ஐரோப்பியருடன் பகையின்றி நேசபான்மை கொண்டேயிருந்தனர். அதுமட்டுமல்ல: அவர்களின் மன்னர்களுட் சிலர் மேலே நாட்டு இராச்சியங்களைப் பற்றியும் அவ்விராச்சியங்களில் அநுட்டிக்கப்பட்ட கிறிஸ்தவ மதத்தைப் பற்றியும் அறிய ஆவல் கொண்டுமிருந்தனர். இப்படியாக மங்கோலியர் ஐரோப்பிய வர்த்தகருடன் நேசபான்மை கொண்டிருந்ததால், பின்னவர் (ஐரோப்பியர்) செய்துவந்த கீழ்நாடு—மேல்நாடு வர்த்தகம் பலகாலமாகச் சுமுகமாக நடந்தது. ஆனால் கி. பி. 1316-ம் ஆண்டளவில் மங்கோலிய சாம்ராச்சியத்தில் ஓர் பெரும் மாற்றம் நிகழ்ந்தது. கிறிஸ்தவ மதத்தைப் பற்றி அறிய மங்கோலிய கான்கள் அவாப்பட்டனர் எனினும் அக்காலத்து ஐரோப்பாவில் இருந்த கிறிஸ்தவ சந்நியாசிகளோ குருமாரோ இவ்விஷயமாக ஊக்கம் கொண்டு மங்கோலியச் சாம்ராச்சியத்திலே கிறிஸ்தவ மதத்தைப் பிரசாரம் செய்ய முயலவில்லை. எனவே காலகதியில் சமீப கிழக்கு நாடுகளில் இருந்த மங்கோலிய மன்னர்களாகிய

கான்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவினர். முஸ்லிம்களாகிவிட்ட மங்கோலியர் இதன்பின் கிறிஸ்தவராகிய ஐரோப்பியர்பால் வெறுப்புக்கொள்ளத் தலைப்பட்டு அவர்களின் வர்த்தகப் பாதைகளை அடைத்து விட்டனர். சின்ன ஆசியா, மெஸப்பெற்ருேமியா, பாரசீகம் என்பவற்றுக்கூடாக இருந்த பாதைகளை மங்கோலியர் இவ்வாருக அடைத்துவிடவே ஐரோப்பிய வர்த்தகர் பாடு கஷ்டமாயிற்று. ஆகவே அவர்கள், விசேஷமாக இத்தாலிய வர்த்தகர், கிழக்கு நாடுகளை அடைவதற்கான வேறு பாதைகளைப் பற்றிச் சிந்திக்கலாயினர்.

அத்லாந்திக் சமுத்திரத்துக்கூடாக மேற்கு நோக்கி பிரயாணம் செய்து கிழக்கு நாடுகளுக்கு ஓர் கடற் பாதையைக் கண்டுபிடிக்க அவாவுற்ற மாலுமிகளில் கிறிஸ்தோபர் கொலம்பஸ் என்பவன் பிரசித்தி பெற்றவன். அவன் ஜெனேவா நகரத்தவன்; கப்பல் தலைவன். அவனுடைய அபிப்பிராயத்தை அக்காலத்திலிருந்த பலர் ஆதரிக்கவில்லை. ஆனல் அவன் தன் எண்ணத்தைக் கைவிடாது அதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து முயற்சி செய்தான். இந்தியாவுக்கு ஓர் கடற்பாதையைத்தான் கண்டுபிடிப்பதில் உதவி செய்ய வேண்டுமென ஸ்பெயின் மன்னனை வேண்டி அவனது உதவியைப் பெற்றுத் தன் பிரயாணத்தை ஆரம்பித்தான். ஆனல் அவன் தான் கோலிய வழிப்படி சென்று இந்தியாவைக் காணவில்லை. இந்தியாவுக்குப் பதிலாக நாம் இன்று மேற்கு இந்தியத்தீவுகள் என அழைக்கும் தீவுக் கூட்டத்துக்கே போனன்.

இந்தியாவை அடைவதற்கு எப்படியோ ஒரு கடற் பாதை இருக்கத்தான் வேண்டும் என ஐரோப்பி

யர் திடமாக நம்பினர். ஆபிரிக்காக் கரையோரமாகக் கடலிற் பிரயாணம் செய்து அக்கண்டத்தின் தென் கோடிக்கு வந்து அதிலிருந்து சுற்றிச் சென்றால் இந்து சமுத்திரத்தை யடையலாம். அதிலிருந்து மிகச் சுலப மாக இந்தியாவுக்குப் போகலாம் என்பது அவர்களு டைய சித்தாந்தம். கடலோடி ஹென்றி என்பவன் இவர்க ளிற் சிறந்தவன். இவன் ஓர் போர்த்துக்கீச இளவரசன். புதுப் புதுத் தேசங்களைக் கண்டு பிடிப்பதில் பேரார்வம் கொண்டவன். பூகோள ஆராய்ச்சித் துறையில் அவன் ஈடுபட்டுப் பல உலகப் படங்களைச் சேகரித்து வைத்தி ருந்தான். உலகத்தைப் பற்றியும் ஆங்குள்ள பல்வேறு மக்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றைப் பற் றியும் அறியப் பெரிதும் விழைந்தான். முன்பின் தெரி யாத தேசங்களைப் புதிதாகக் கண்டு பிடித்தால் அவற்று டன் வர்த்தகம்செய்வதுமூலம் தனது நாட்டுக்குப் பெருஞ் செல்வம் உண்டாகும் என்றும் அவன் நினைத்தான். அத் துடன் கிறிஸ்தவ சமயத்தை "அஞ்ஞானிகள்" மத்தியிற் பிரசாரம் செய்து அவர்களை மனம் திருப்பவேண்டும் எனவும் அவன் அவாவுற்றான். இப்படியான பல வித காரணங்களினால் உந்தப்பெற்ற கடலோடி ஹென்றி புதுப்புது நாடுகளைக் கண்டு பிடிப்பவர்களுக்குத் தன் னால் இயன்ற உதவிகள் அனைத்தும் புரிந்துவந்தான்.

கடலோடி ஹென்றியின் தலைமையிலும் அவன் ஆத ரவினாலும் போர்த்துகீச மாலுமிகள் ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமாக முன்னேறிச் சென்று பல குடி யிருப்புக்களை ஏற்படுத்தினர். அஸோர்த்தீவுகள், மடெய் ராத் தீவுகள் என்பன இவற்றுட் பிரதானமானவை. செழிப்பான இத்தீவுகளிற் குடியேறிய போர்த்துக்கீசர்

திராட்சைகளையும் கரும்பினையும் சாகுபடி செய்து பெரும் இலாபம் ஈட்டினர். இதன்பின் போர்த்துக்கீச மாலுமிகள் ஆபிரிக்காவின் மேற்குக் கரைப்பிரதேசத்துக்குள் இறங்கி அடிமைகளையும் பொன்னையும் பெற்றனர். "அடிமைக்கரை[1]", 'பொன்கரை[2]" எனக் கருத்துக்கொண்ட ஆங்கிலப் பெயர்கள் இப்போதும் வழங்கப்படுவது போர்த்துக்கீசர் செய்த பழைய வர்த்தகத்தினை எமக்கு ஞாபகமூட்டுகிறது. 1482-ம் ஆண்டில் டியகோ காம்[3] என்பவன் கொங்கோ ஆற்றின் முகத்துவாரத்தை அடைந்தான். 1488-ம் ஆண்டில் பர்தலோமியூ டயஸ்[4] என்பவன் ஆபிரிக்காவின் அதி தெற்கு முனையைக் கடந்து சென்றான். அக்காலத்தில் வீசிய பெரும் புயற் காற்றில் அகப்பட்ட அவன் பயந்து மீண்டும் போர்த்துக்கல்லை அடைந்தான். ஆபிரிக்காவைக் கடந்து இந்து சமுத்திரத்தை அடைய மார்க்கம் இருப்பதாகத் தனது மன்னனுக்குத் தெரிவித்தான். அவன் கடந்த முனை "நன்னம்பிக்கை முனை" என வழங்கப்பட்டது. இந்தியாவுக்குப் போவதற்கான ஓர் மார்க்கம் உண்டு என்ற நம்பிக்கையை அது ஊட்டியமையினாலேயே அதற்கு இப்பெயர் இடப்பட்டதென்க.

1498-ம் ஆண்டு மே மாதம் 23-ம் திகதிதான் வாஸ்கொ ட காமா[5] என்பவன் இந்துசமுத்திரத்தைக் கடந்து இந்தியாவின் கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தையடைந்தான். வாஸ்கொ ட காமா அஞ்சா நெஞ்சம் கொண்ட மாலுமி. அவன் நன்னம்பிக்கை முனையைக்

---

1. Slave Coast 2. Gold Coast 3. Diego Cam
4. Bartholamew Diaz 5. Vasco de Gama

கடந்து 1497-ம் ஆண்டு நத்தார் தினத்தன்று (டிசம்பர் மாதம் 25-ந் திகதி) நேற்றுலே அடைந்தான். இதன்பின் அவன் கிழக்குக் கரைப் பக்கமாகக் கடற்பிரயாணம் செய்வதைக் கண்ட அரபு வர்த்தகர் அஞ்சினர். மாலிந்தி என்னும் இடத்தில் காமா ஓர் வழிகாட்டியின் உதவியுடன் இந்துசமுத்திரத்தை யடைந்து அதன் பின் கள்ளிக்கோட்டைக்குப் போனுன். அக்காலத்திலே கள்ளிக்கோட்டைத் துறைமுகம் வர்த்தகத்துக்குப் பேர்போனதாக இருந்தது. பல தேசப் பொருள்கள் அத்துறைமுகத்தில் வந்திறங்கின. இலங்கையில்இருந்து கறுவா, இரத்தினக் கற்கள், நீலக் கற்கள் என்பனவும், மலாக்கா, சுமாத்ரா, சியம் என்னும் நாடுகளிலிருந்து கராம்பு முதலிய வாசனைத் திரவியங்களும், பேகு என்னும் நாட்டிலிருந்து கஸ்தூரியும், வங்காளத்தில் இருந்து பலவகைத் தானியங்களும் மதிப்புள்ள புடைவைகளும் கள்ளிக்கோட்டைக்கு வந்து விற்பனையாகின. இவற்றை எல்லாம் காமா கள்ளிக்கோட்டையில் அறிந்து தனது ஊருக்கு மீண்டான்.

இவ்வாருக காமா இந்தியாவுக்கு வந்து மீண்டமை ஒரு விஷயத்தைப் போர்த்துக்கீசருக்கும் ஏனைய ஐரோப்பிய சாகியத்தார்க்கும் தெற்றெனப் புலப்படுத்தியது. அதாவது, வர்த்தகம் செய்வதற்காக இந்தியாவுக்குக் கப்பல்கள் ஒழுங்காகப் போய் மீளலாம் என்பதே. இதன் பின் போர்த்துக்கல்லின் லிஸ்பன் துறைமுகத்தில் இருந்து கப்பல்கள் ஆண்டுதோறும் புறப்பட்டு இந்தியத் துறைமுகங்களுக்குப் போய்ப் பெரும் வர்த்தகம் நடத்தின. இப்படியாகப் போர்த்துக்கீசர் திரைகடலோடித் தம் திரவியத்தைப் பெருக்கிப் பிரக்கியாதியுடைந்தமையி

ஞல், 1500-ம் ஆண்டளவில் அவர்களது அரசனுக இருந்த இம்மானுவல் என்பான் "இந்தியா, எதியோப்பியா என்பவற்றுக்குச் செல்லும் கடற் பாதையை வெற்றி கொண்டு வர்த்தகக் கொடியை நிலைநாட்டிய மகாவீரன்" எனப் புகழப்பட்டான்.

கீழைப்பிரதேசத்தில் போர்த்துக்கீசர் தம் செல்வாக்கை அபிவிருத்தியாக்கிய இரண்டாவது கட்டம் 1500-ம் ஆண்டுக்குப் பின் ஆரம்பமாயது. 1506-ம் ஆண்டளவில் கிழக்காபிரிக்க முஸ்லிம் அரசர்களது அதிகாரத்தைப் போர்த்துக்கீசர் முறியடித்து சோபலா, மொஸாம்பிக், மொம்பாஸா என்னும் இராச்சியங்களைத் தமதாக்கினர். 1510-ம் ஆண்டில் அவர்கள் இன்னும் முன்னேறி கோவையைக் கைப்பற்றி பம்பாய்த் துறைமுகம் இருக்கும் ஸால்ஸெற் தீவைத் தம்முடையதாக்கினர். பம்பாய் என்பது பொம்—பாஹியா (நல்ல துறைமுகம்) என்னும் பெயரில் இருந்து வந்தது. ஆனுல் வாசனைச் சரக்கு வியாபாரத்தைத் தாம் ஏகபோக உரிமையாக வைத்துக்கொள்ள வேண்டுமாஞல் இந்து சமுத்திரத்தில் உள்ள கேந்திரத் தானங்களைத் தாம் கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்பதைப் போர்த்துக்கீசர் அதிசீக்கிரத்தில் உணர்ந்தனர். அராபியக் கடலில் உள்ள ஏடென், ஓர்மஸ், வங்காள விரிகுடாவில் உள்ள மலாக்கா, இந்துசமுத்திரத்துக் கூடாகவுள்ள கடற் பாதைகளைக் கண்காணிக்கும் இலங்கை என்பனவே இந்தக் கேந்திரத் தானங்கள். போர்த்துக்கீசர் இந்தத் தானங்களைக் கைப்பற்றினர். அதன் காரணமாகவே இலங்கையும் போர்த்துக்கீச சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியானது. இலங்கையைக் கைப்பற்றி அதிலேயே பரி

பாலனத் தலைமைத் தானத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்று போர்த்துக்கல் அரசன் கோவையில் இருந்த தனது இராஜப் பிரதிநிதிக்குக் கட்டளையிட்டு ஓர் கடிதம் எழுதியிருந்தான். அக்கடிதம் இன்னும் உண்டு." இலங்கை மத்தியத் தானமாக விளங்குகிறது போலத் தோற்றுகிறது. மலாக்கா வங்காளம் என்னும் இடங்களில் இருந்து வரும் கப்பல்களும், அங்கு போகுங் கப்பல்களும் இலங்கையைக் கடந்தே போக வேண்டியுள்ளன. இலங்கைக்குத் தெரியாமல், இலங்கையில் உள்ளார் அறியாமல் எந்தக் கப்பலும் அப்பாதையாற் போக முடியாது. ஆகவே கடல் வர்த்தகத்தைத் தக்கவாறு கண்காணிக்க இலங்கையைத் தலைமைத் தானமாகக் கொள்ள வேண்டும்" என்னும் கருத்துப்படப் போர்த்துக்கீச மன்னன் எழுதினான். இலங்கைக்குப் போர்த்துக்கீசர் வந்த விதத்தைப் பற்றி இன்னோர் அதிகாரத்தில் விபரமாகக் கூறுவாம்.

தாம் கைப்பற்றிய மலாக்காவைப் போர்த்துகீசர் தக்கவாறு அரண் செய்து, அங்கிருந்துகொண்டே கீழ் பர்மா, லிகோர் என்னும் நாடுகள் மீதும் சீயத்தின் மீதும் தம் செல்வாக்கைப் பரப்பி அங்கே சென்றனர். ஆனால் இந்நாடுகளை நிரந்தரமாக வெற்றிகொண்டு அவர்கள் தம் ஆட்சியை அங்கே நிறுவவில்லை. சீனக் கடலிலும் போர்த்துக்கீச வீரரும் வர்த்தகரும் தம் செல்வாக்கை நிலைநாட்டினர். அவர்களின் கப்பல்கள் சீனத்தின் கான்ரன் துறைமுகத்துக்கு ஒழுங்காகச் சென்று வியாபாரம் செய்தன. 1542-ம் ஆண்டளவில் ஜப்பானிலும் போர்த்துக்கீசர் தம் செல்வாக்கை நாட்டத் தலைப்பட்டனர். அவர்கள் தம் வர்த்தகத்தை விருத்தியாக்குவதுடன் தம் சமயமாகிய கத்தோலிக்க கிறிஸ்துவத்தையும்

பரப்பி "அஞ்ஞானிகளை" "மெய்ஞ்ஞானிக"ளாக்க அவாப்பட்டனர். அதன் பொருட்டு அவர்கள் பல மிஷனரிமாரைக் கீழை நாடுகளுக்கு அனுப்பினர். இத்தகைய மிஷனரிமாரில் பிரான்சிஸ்க திருச்சபையைச் சேர்ந்தவர்களும் யேசு சபையைச் சேர்ந்தவர்களும் அதிபிரபல்யமானவர்கள். அவர்களிலும் **அர்ச். பிரான்சிஸ் சவேரியார்** என்பவர் அதிபிரபலமானவர். அவர் கீழைத்தேச அப்போஸ்தலர் எனப் போற்றப்பட்டார். அவர் சீன தேசத்தில் இறந்தார். அவருடைய பூதவுடம்பு போர்த்துக்கீசருக்குரியதாயுள்ள கோவையில் இன்றும் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

போர்த்துக்கீச மன்னர்களின் விடாமுயற்சியினுலேயே போர்த்துக்கீச சாம்ராச்சியம் நிறுவப்பட்டது. ஆகவே அச்சாம்ராச்சியத்தின் சகல வர்த்தகமும் அரசர்களது ஏகபோக உரிமையாக இருந்தன. சாம்ராச்சியத்தின் இன்ன இன்ன பகுதியிலே யார் யார் வர்த்தகம் செய்வது என்பதைப் போர்த்துகீச மன்னன் ஆண்டுதோறும் வகுத்துக் கொடுப்பான். அதன் பொருட்டு இந்த ஏகபோக உரிமையைப் பெறும் வர்த்தகர் ஓர் தொகைப்பணத்தை அரசனுக்கு இறுப்பர். இப்படியிருந்தும், வாசனைத் திரவியங்கள், இரத்தினக் கற்கள் என்பவற்றின் வியாபாரம் அரசனுக்கு மட்டுமே உரியதாயிருந்தது.

போர்த்துக்கல் மன்னன் கீழைத்தேச சாம்ராச்சியத்துப் பரிபாலனத்தைக் கோவையில் இருந்த இராஜப் பிரதிநிதிகள் பொறுப்பில் ஒப்படைத்தான். இராஜப் பிரதிநிதிகளுக்குக் கீழ் **கப்பின் ஜெனரல்**[1] எனப்படும்

1. Captain General

பல அதிகாரிகள் இருந்தனர். சாம்ராச்சியத்துப் பிரதான பிரதேசங்களை கப்ரின் ஜெனரல்கள் பரிபாலித்தனர். போர்த்துக்கீசரது பரிபாலனம் பலகாலம் உறுதியாக நின்று அநுகூலம் அடைந்தமைக்கு அவர்களுக்கு வாய்த்த பல சிறந்த இராஜப்பிரதிநிதிகளின் திறமையே காரணம் என்று கூறலாம். 1505-ம் ஆண்டு தொடக்கம் 1509-ம் ஆண்டுவரை பிரான்சிஸ்கோ டி அல்மேடா[1] என்பவன் இராஜப் பிரதிநிதியாக இருந்தான். அவனுடைய மகன் தான் 1505-ம் ஆண்டில் இலங்கைக்கு விஜயம் செய்தவன், டி அல்மேடாவுக்குப் பின் இராஜப்பிரதிநிதியாக வந்த அல்புகேர்க்[2] என்பவனே போர்த்துக்கீச இராஜப்பிரதிநிதிகளில் மிகத் திறமைவாய்ந்தவன் எனலாம். முஸ்லிம்களின் கடல் ஆதிக்கத்தைக் கெடுத்து கோவை, மலாக்கா என்பவற்றைக் கைப்பற்றியவன் அவனே.

வினாக்கள்

1. ஓர் உலகப் படம் வரைந்து அதில் போர்த்துக்கீசப் பிரதேசங்களைக் காட்டுக.

2. பின்வருவோரைப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக;— கடலோடி ஹென்றி; வாஸ்கொ ட காமா; அல்புகேர்க்; பிரான்சிஸ்கோ டி அல்மேடா.

---

1. Francisco de Almeida 2. Albuquerque

2-ம் அதிகாரம்

இலங்கையில் போர்த்துக்கீசர்.

1505-ம் ஆண்டில் போர்த்துக்கீசர் காத்திராப்பிரகாரமாக இலங்கைக் கரையை அடையவேண்டி நேர்ந்தது. கோவையில் இருந்த போர்த்துக்கீச இராஜப்பிரதிநிதியான பிரான்சிஸ்கோ டி அல்மேடாவின் மகன் ஓர் முஸ்லிம் கடற்படையைத் தாக்குதற்காக மாலைதீவுக் கணித்தாகத் தன் கப்பற் கூட்டத்துடன் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது ஓர் பெரும் புயற் காற்றுக் கிளம்பி அவனுடைய கப்பலைக் காலித் துறை முகத்துக்குக் கொண்டு வந்தது அங்கிருந்து அவனும் அவன் பரிவாரத்தினரும் கரையோரமாகக் கொழும்பை அடைந்தனர். அவர்கள் வருகையைக் கோட்டை அரசன் எவ்வாறு கேள்விப்பட்டான் என்பதைப் பற்றியும் வெள்ளை நிறத்தவரான போர்த்துக்கீசரைச் சிங்களர் முதன் முதலாகக் கண்டு எப்படி அதிசயப்பட்டனர் என்பதைப் பற்றியும் இராஜாவலி என்னும் நூல் விபரிக்கிறது. போர்த்துக்கீசரைக் கண்ட சிங்களர் ஆச்சரிய வயத்தினராய்த் தம் மன்னனிடம் சென்று,'' வெண்தோலும், அழகிய தோற்றமும் உடைய ஓர் சாகியத்தார் எம் கொழும்புத் துறைமுகத்தில் வந்திருக்கிறார்கள். அவர்கள் இரும்புச் சட்டைகளும், தொப்பிகளும் அணிந்திருக்கிறார்கள்; அவர்கள் ஓரிடத்தில் ஒரு நிமிஷமேனும் தங்கியிருப்பதில்லை; அவர்கள் [1]கல்லையுண்டு [2] இரத்தத்தைப் பருகுகிறார்கள். ஒரு மீனுக்கு அல்லது எலு

---

1. விஸ்கோத்து 2. வைன்

மிச்சம்பழத்துக்குக் கிரயமாக இரண்டு அல்லது மூன்று பொற் காசுகளையும் வெள்ளிக் காசுகளையும் கொடுக்கிறார்கள். அவர்களது பீரங்கிச் சத்தம் இடி முழக்கத்திலும் பார்க்கப் பெரியது" என்றனராம்.

போர்த்துக்கீசர் இலங்கையரசனைக் காண விரும்பினர். அவ்விருப்பத்துக்கிணங்க அவர்களை மன்னன் கட்டளைப்படி ஏவலாளர் நீண்ட வளைவுப் பாதைகளால் இட்டுச் சென்றனர். இப்படிச் செய்வதால் நகரம் துறைமுகத்தில் இருந்து வெகு தூரத்தில் உளது என்று போர்த்துக்கீசர் எண்ணுவர் என ஏவலாளர் நினைத்தனர். மணித்தியாலத்துக்கொரு முறை போர்த்துக்கீசக் கப்பலிலிருந்து வெடி தீரப்பட்டது. ஆகவே போர்த்துக்கீசர் எப்படிச் சுற்றி வளைத்துச் சென்றாலும், வெடி குண்டுச் சத்தம் கேட்டமையால் தாம் துறைமுகத்தில் இருந்து வெகுதூரத்தில் இல்லை என்பதைக் கண்டு கொண்டனர். ஈற்றில் போர்த்துக்கீசர் இலங்கை மன்னன் அவைக்களத்துக்குச் சென்று அவனைக் கண்டனர். மன்னன் அவர்களுக்கு நல்வரவு கூறி உபசரித்தான். இதனால் போர்த்துக்கீசர் மனமகிழ்ந்தனர். இதன்பின் அவர்கள் கொழும்பை விட்டு அகலமுன் தமது போர்த்துக்கீச மன்னனது இராஜ சின்னங்களைத் துறைமுகத்துக்கு மிக அணித்தாக இருந்த பாறை ஒன்றிற் செதுக்கி வைத்தனர். மகாதேசாதிபதியின் மாளிகைக்கருகில் உள்ள கோர்டன் நந்தவனத்தில்[1] இப்பாறையை இன்றும் காணலாம்.

போர்த்துக்கீசர் இலங்கைக்கு விஜயம் செய்த காலத்திலே இந்நாடு எந்த நிலையில் இருந்தது என்பதை

1. Gordon Gardens

இனிச் சிறிது ஆராய்வாம். போர்த்துக்கீசர் இரண்டாம் முறையும் இலங்கைக்கு வந்தனர். 1518-ம்ஆண்டளவில் அவர்கள் கொழும்பிலே ஓர் கோட்டையையும் கட்டிவிட்டனர். போர்த்துக்கீசர் இவ்வாறுகக் கொழும்பில் இடம் கோலியமை, அக்கால இலங்கை வர்த்தகத்தைப் பெரும்பாலும் நடாத்திவந்த முஸ்லிம் வியாபாரிகளுக்குப் பிடிக்கவில்லை. போர்த்துக்கீசர் தம் வர்த்தகத்தைப் பிடுங்கிக் கொண்டு தம்மையும் கலைத்துவிடுவரோ என்று முஸ்லிம்கள் அஞ்சினர். எனவே போர்த்துக்கீசருடன் எவ்வித உறவும் வைத்துக்கொள்ள வேண்டாம் என்று இம் முஸ்லிம்கள் சிங்களரைத் தூண்டினர். ஏழாவது விஜயபாகு (1509–1521) போர்த்துக்கீசரைத் தாக்கித் துரத்துவதற்குத் தனக்குப் படைத்துணை புரியும்படி கள்ளிக்கோட்டை ஸமோரினின் அல்லது சுல்தானின் உதவியைக் கூட நாடினுன். விஜயபாகு போர்த்துக்கீசரைக் கலைக்கச் செய்த முயற்சி பிரதிகூலமடைந்தது. அத்துடன் அவனுக்கு எதிரிடையாகத் தோன்றியவர்கள் அவனைக் கொன்று இராச்சியத்தையும் கைப்பற்றினர். இதன் பின்னர் ஏழாம் புவனேகவாகு (1521–1550) அரசனுனன்.

ஏழாம் புவனேகவாகுவுக்கு இரண்டு சகோதரர் இருந்தனர். அவனும் அவர்களுமாகக் கோட்டை இராச்சியத்தைப் பங்கு போட்டுப் பரிபாலித்தனர். இப்போது சப்பிரகமுவ மாகாணம் என வழங்கப்படும் பிரதேசத்தையும் வலல்லாவிற்றி, றைகம், பஸ்துன் கோறளைகளையும் ஒழிந்த ஏனைய தென்மேற்குப் பிரதேசங்களை ஏழாம் புவனேகவாகு அரசாண்டான். மாயாதுன்னை என்பவன் சீதாவக்கையைத் தலைநகராகக் கொண்டு சப்பிரகமுவ இராச்சியத்தை அரசாண்டான். வலல்லா

விற்றி, றைகம், பஸ்துன் கோறளைகளை **றைகம்பண்டாரன்** என்ற மூன்றாவது சகோதரன் ஆண்டான். இம்மூவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளேனும் பரஸ்பரம் நல்லெண்ணமும் சமாதானமும் கொண்டிராது ஒருவருக்கொருவர் பகைகொண்டு பொருதனர். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு வசதியல்லவா? இச்சகோதரர்களின் பிரிவினையால் போர்த்துக்கீசர் மெல்ல மெல்லவாகத் தம் செல்வாக்கை அபிவிருத்தியாக்கி ஈற்றில் இலங்கையின் தென்மேற்குப் பகுதியில் தம் அதிகாரத்தை நிலைநாட்டினர். மேலே சொல்லிய சகோதரர்களைவிட வேறு பல அரசர்களும் இலங்கையின் பல்வேறு பகுதிகளைச் சுதந்திரமாகப் பரிபாலித்தனர். உடரட்டை என்பது ஓர் தனி இராச்சியமாக ஓர் மன்னனால் பரிபாலிக்கப்பட்டது. இப்போது வடமாகாணம் என வழங்கப்படும் பகுதியை யாழ்ப்பாண அரசன் ஆண்டு வந்தான். வன்னி, திருக்கோணமலை, மட்டக்களப்பு, யாலா, பனமா என்னும் குறிச்சிகளைக் குறுநில மன்னர் அரசு புரிந்தனர். இப்படியாக இந்தச் சின்னஞ்சிறு இலங்கையிலே பல மன்னர் தனித்தனி சுதந்திரமாக அரசு புரிந்து பரஸ்பரம் மாறுபட்டுக் கருமம் ஆற்றியமையினால், இந்நாடு வலியற்றது; அந்நிய சத்துருவை எதிர்த்து வெற்றி பெறுவதும் அசாத்தியமானது.

சிங்கள மன்னர்களுக்கிடையே பரஸ்பரம் பகைமை சீக்கிரமே உண்டானது. மாயாதுன்னை கோட்டை அரசனைப் பேரவாக் கொண்டதே இதற்குக் காரணம். கோட்டையை அப்போது ஆண்ட புவனேகவாகுவுக்கு ஆண் சந்ததியில்லை. ஒரு மகள் இருந்தாள்: அவளை **வீதியேபண்டாரன்** வதுவை செய்திருந்தான். இவ்விவாகத்தின் பயனாக **தர்மபாலன்** என்ற ஒரு பிள்ளை பிறந்தது, தன

க்குப் பின் தன் பௌத்திரனான தர்மபாலனே கோட்டை இராச்சியத்தை அரசாள வேண்டும் என்று விரும்பிய புவனேகவாகு தனது எண்ணத்தை நிறைவேற்றுதற்குப் போர்த்துக்கீசரின் உதவியை நாடினான். இதனைக் கண்ட மாயாதுன்னை போர்த்துக்கீசரின் வைரியான கள்ளிக்கோட்டை ஸமோரினின் படைத் துணையை வேண்டினான். ஆனால் ஸமோரினின் கப்பற் படையை இராமேஸ்வரத்துக்கப்பால் போர்த்துக்கீசர் முறியடித்துவிட்டதால் மாயாதுன்னைக்கு ஸமோரினின் உதவி கிடைக்கவில்லை. கோட்டை இராச்சியத்துக்கு முறையான உரித்தாளி தர்ம்பாலனே என்று பிரகடனப்படுத்திவிடவேண்டும் என்ற வேண்டுகோளுடன் புவனேகவாகு ஓர் இராஜரீகத் தூதக்கோஷ்டியைப் போர்த்துக்கல் தலைநகரான லிஸ்பனுக்கு 1543-ம் ஆண்டில் அனுப்பினான். புவனேகவாகுவின் வேண்டுகோளைப் போர்த்துக்கல் அரசன் அங்கீகரித்தான். ஆனால் அதற்குப் பிரதி உபகாரமாக கிறிஸ்தவக் குருமார் வந்து இலங்கையில் தம் மதத்தைப் பிரசாரம் செய்யப் புவனேகவாகு அநுமதிக்க வேண்டும் என்று கேட்டு அவ்வுரிமையையும் பெற்றான். இதன் பின் கோவையில் இருந்த போர்த்துக்கீச இராஜப்பிரதிநிதியான அப்போன்கோ[1] என்பவனும் இலங்கைக்கு விஜயம் செய்தான். ஆனால் அவன் இங்கு நடந்துகொண்ட கர்வமான முறை புவனேகவாகுவுக்குத் தானும் வெறுப்பைக் கொடுத்தது. இதன் பின் புவனேகவாகு கொலை செய்யப்பட, அப்பொன்கோவின் உத்தரவின் பேரில்தான் அக்கொலை நிகழ்ந்தது என்று சந்தேகித்த ஜனங்கள் போர்த்துக்கீசரை மிகவும் வெறுக்கத் தலைப்பட்டனர். இதன் பின் தர்மபாலன் அரசனானான்.

---

1. Affonco

ஆனால் அவன் அரச பதவியில் இருப்பதற்குப் போர்த்துக்கீச உதவி இன்றியமையாததாக விருந்தது. அவர்களின் உதவியுடன் தர்மபாலன் 1551-ம் ஆண்டு தொடக்கம் 1597-ம் ஆண்டுவரை கோட்டை இராச்சியத்தைப் பரிபாலித்தான். அவனுக்காகப் போர்த்துக்கீசர் சீதாவக்கையரசன் மாயாதுன்னையுடன் போர் தொடுத்தனர். அவர்கள் சீதாவக்கையைக் கைப்பற்றி அதனை அக்கினிக் கிரையாக்கினர். சீதாவக்கையில் மாத்திர மன்றி வேறிடங்களிலும் போர்த்துக்கீசர் வெற்றி கண்டனர். மன்னாரில் மனந் திரும்பிய கத்தோலிக்கர் பலரை 1544-ம் ஆண்டில் யாழ்ப்பாண அரசன் கொலை செய்வித்தான். 1560 ம் ஆண்டு போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்து அவ்விராச்சியத்து அரசனைக் கலைத்தனர். ஆனால் அவன் தன் இராச்சியத்தை மீண்டும் பெற்றான். மன்னாரை மாத்திரம் போர்த்துக்கீசர் தம் வசம் வைத்திருந்தனர்.

1557-ம் ஆண்டில் தர்மபாலன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி டொன் ஜுவான் தர்மபாலன் என்னும் பெயரைச் சூட்டிக்கொண்டான். இந்தச் சம்பவம் அவனுக்கே கெடுதியைக் கொண்டுவந்தது என்லாம். தமது அரசன் முன்னோர் அநுட்டித்து வந்த மதத்தைப் புறக்கணித்து அந்நியர் மதத்தை அநுசரித்துவிட்டபடியினால் அவன் இனித் தம் பௌத்த மதத்துக்கு உதவி செய்ய மாட்டான் எனவும் அந்நியர் கைப்பிள்ளையாகவே அவன் இருப்பான் எனவும் சிங்களர் எண்ணத் தலைப்பட்டனர். இப்படியான நிகழ்ச்சிகள் யாவும் சீதாவக்கை அரசனுக்குச் சாதகமாகவே இருந்தன. சீதாவக்கை இராச்சிய எழுச்சிக்கும் அவை துணை செய்தன. 1562-ம் ஆண்டில் மாயாதுன்னையின் மகன் முல்லேரியாவ யுத்த முனை

யில் போர்த்துக்கீசரை முறியடித்துத் துரத்தினான். இவனே பிற்காலத்தில் சீதாவக்கை இராஜசிங்கன் எனப் பிரபல்யம் பெற்றவன். இதன்பின் சீதாவக்கைப் படைகள் கோட்டையை முற்றுகையிட அதனை நிர்வகிக்க மாட்டாத போர்த்துக்கீசர் தர்மபாலனையும் அழைத்துக் கொண்டு கொழும்புக்கு ஓடினர். தர்மபாலன் அங்கே கொஞ்சக்காலம் வாழ்ந்து சஞ்சலம் நிறைந்தவனாய் இறந்தான்.

இதன்பின் இராஜசிங்கன் கொழும்பை முற்றுகையிட்டு இருபத்திரண்டு மாதகாலமாக அப்பட்டினத்துக்குள் இருந்த போர்த்துக்கீசரை வாட்டினான். போர்த்துக்கீசர் சொல்லொணுக் கஷ்டம் அடைந்தும் இராஜசிங்கனுக்குப் பணியவில்லை. ஆனால் இராஜசிங்கனுக்குத் தக்க ஓர் கடற்படையில்லாமற் போனதால், கோவையிலிருந்து கடல் மார்க்கமாகப் போர்த்துக்கீசருக்கு உதவி வந்ததை அவனால் தடுக்க முடியவில்லை. ஆகவே அவன் 22 மாத காலத்துக்குப்பின் முற்றுகையைக் கைவிட்டுத் தன் படைகளுடன் நீங்கினான். 1581-ம் ஆண்டில் இராஜசிங்கன் சீதாவக்கைக்கு அரசனானான். இதன்பின் அவன் உடரட்டை மீது படை எடுத்து அதனைத் தனது இராச்சியத்துடன் இணைத்தான். உடரட்டையில் இருந்த அரசனுடைய மகள் போர்த்துக்கீசரிடம் தஞ்சம் புகுந்தாள். போர்த்துக்கீசர் அவளுக்குத் தஞ்சம் அளித்து கிறிஸ்தவ சமயத்தினளாக்கி டோனா கதெரினா என்னும் பெயரையும் சூட்டித் தம் பாதுகாப்பில் வைத்திருந்தனர்.

இவ்வாறாக இலங்கையின் ஏறக்குறைய சகலபாகங்களுக்கும் அரசனாகிய இராஜசிங்கன் கொழும்பை எப்படியாவது கைப்பற்றிவிடவேண்டும் என்ற ஆர்வ

முடையவனாய் 1587-ம் ஆண்டில் அதனை மீண்டும் முற்றுகையிட்டான். ஆனால் இம்முறையும் கடல் மார்க்கமாகப் போர்த்துக்கீசருக்கு உதவி கிடைத்ததால் 1588-ம் ஆண்டில் இராஜசிங்கன் முற்றுகையைக் கைவிட்டுப் பின்வாங்கினான். இனியும் அவனைவிட்டுவைத்தால் தம்மை இலகுவில் விடமாட்டான்; ஆகவே அவனை அடக்க வேண்டும் என்று நிச்சயித்த போர்த்துக்கீசர், கோனப்பு பண்டாரன் என்பவனை ஓர் பெரும் சேனையுடன் கண்டிக்கு அனுப்பினர். கோனப்பு பண்டாரன் கண்டிக்குப் போய் கண்டி இராச்சியத்துக்கு உரிமைக்காரனாக இருந்த டோன் பிலிப்பு என்னும் இளவரசனை அரசனாக்க வேண்டும் என்று போர்த்துக்கீசர் கட்டளை யிட்டிருந்தனர். கோனப்பு பண்டாரன் இதற்கு முந்தி இராஜசிங்கனின் இராச்சியத்தில் இருந்த ஓர் பிரதானி. அவனை இராஜசிங்கன் ஒறுத்ததால் அவன் போர்த்துக்கீசரிடம் சரண் புகுந்து கிறிஸ்தவனாகி டோன் ஜுவான் கோனப்பு பண்டாரன் எனப் பெயர் கொண்டான்

போர்த்துக்கீசர் கட்டளைப்படி கண்டிக்குச் சென்ற கோனப்பு பண்டாரன் டொன் பிலிப்புவை மன்னனாக்கி, இராஜசிங்கனின் தாக்குதலைத் தடுப்பதற்காக கன்னொருவாவில் ஓர் கோட்டையையும் கட்டினான். சில நாட்களின் பின் டொன் பிலிப்பு திடீரென மரணமானான் உடனே கோனப்பு பண்டாரன் தன் துணைவராக இருந்த போர்த்துக்கீசருக்கு விரோதமாகக் கிளம்பி கன்னொருவாவில் அவர்களை நாசம் செய்து தானே கண்டியரசன் எனப் பிரகடனம் செய்து முதலாம் விமல தர்மசூரியன் எனப் பெயர் சூட்டிக்கொண்டான். 1592-ம் ஆண்டில் இராஜசிங்கன் விமலதர்மன் மீது படை எடுத்

துச் சென்முன். ஆனல் அவன் போரில் காயமுற்றுத் தோல்வியுமடைந்தான். 1593-ம் ஆண்டு ஆரம்பத்தில் அவன் இறக்க சீதாவக்கை இராச்சியமும் அழிந்தது.

கண்டி மன்னனுகிய விமலதர்மன் ஒருபுறமாகவும் கோட்டை இராச்சியத்தில் இருந்த போர்த்துக்கீசர் இன்னேர் புறமாகவும் எதிரிடைகட்டியிருந்த நிலைமை 1593-ம் ஆண்டில் இருந்தது. 1597-ம் ஆண்டில் டொன் ஜுவான் தர்மபாலன் இறக்க, கோட்டை இராச்சியத்துக்குப் போர்த்துக்கீசர் உரிமைக்காரராஞர்கள்.

தர்மபாலனின் அந்திய காலம் போர்த்துக்கீசரின் பராமரிப்பிலேயே கழிந்தது. சில சமயங்களில் அவனைப் போர்த்துக்கீச அதிகாரிகள் உதாசீனமாகவும் நடத்தினர். ஆனல் போர்த்துக்கீச குருமார் அவன்பால் அநுதாபம் கொண்டு அவனுடன் அன்பு பாராட்டி நடந்தனர். அவன் இறந்துவிட்டால் தம்மத வளர்ச்சி நின்றுவிடுமோ என்று அஞ்சிய அவர்களே, கோட்டை இராச்சியத்தைப் போர்த்துக்கல் மன்னனுக்கு எழுதி வைக்கும்படி அவனுக்குப் புத்தி கூறியும் இருக்கலாம். எது எப்படியிருந்த போதிலும் தர்மபாலன், தனக்குப் பின் போர்த்துக்கல் அரசனே கோட்டை இராச்சியத்துக்கு உரிமைக்காரன் என ஓர் சாதனம் எழுதி வைத்து இறந்தான்.

தர்மபாலன் இறந்ததும் போர்த்துக்கீச மன்னனே கோட்டை இராச்சியத்து மன்னன் எனப் போர்த்துக்கீசர் கொழும்பில் பிரகடனம் செய்தனர். கோட்டை இராச்சியத்தில் உள்ள ஒவ்வொரு கோறளையில் இருந்

தும் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு போர்த்துக்கல் அரசன் கோட்டை அரசனுனதை அறிவிக்க கப்ரின் ஜெனரல் நிச்சயித்து அவ்வாறே மல்வானையில் ஓர் சமாசத்தைக் கூட்டினுன். அப்போது கப்ரின் ஜெனரலாக இருந்தவ னின் பெயர் அஸவெடோ என்பது, இவ்வாறு கூடிய மல்வானைச் சமாசத்திலே அஸவெடோ, தர்மபாலன் தனது இராச்சியத்தைப் போர்ந்துக்கல் மன்னனுக்கு நன்கொடையாக எழுதியதை அறிவித்தான். சிங்களரின் சட்டப்படி ஆட்சி நடத்துவதா, போர்த்துக்கீசச் சட்டப் படி ஆட்சி நடத்துவதா என்று அஸவெடோ ஆங்குக் கூடிய பிரதிநிதிகளைக் கேட்டான். தம் சிங்களச் சட் டப்படியே பரிபாலனம் நடக்க வேண்டுமெனப் பிரதி நிதிகள் கூற, அவ்வாறே செய்விப்பதாக அவன் உறுதி மொழி கொடுத்தான்.

கண்டி இராச்சியத்தின் புதிய மன்னனுக வந்த விமலதர்மனுக்கும் போர்த்துக்கீசருக்குமிடையே இரு ந்த தொடர்பு பற்றிய வரலாற்றை இனி ஆராய்வாம். விமலதர்மன் தமக்குச் செய்த துரோகத்தைப் போர்த் துக்கீசர் மறக்கவும் இல்லை; மன்னிக்கவும் இல்லை. எனவே அவனை எப்படியாவது கலைத்துவிட்டு, அவனு டைய இடத்துக்கு டோனு கதெறினுவை அரசியாக்க வேண்டும் என்பதுதான் போர்த்துக்கீசரது வேணவா. டோனு கதெறினுவின் தகப்பன் உடரட்டை என்னும் கண்டி இராச்சியத்தின் அரசன் என்பதை நாம் மறந்து விடவொண்ணுது.

1594–ம் ஆண்டு லொப்பெஸ் டிசௌஸா[1] என்பவன், கண்டியைக் கைப்பற்றுதற்காக ஓர் பெரும் சேனையுடன்

1. Lopez de Souza

கொழும்பிலிருந்து கண்டியை நோக்கிப் புறப்பட்டான். பொல்காவலையில் டோனு கதெறினு இன்னேர் சேனையு டன் டி சௌஸாவின் சேனையைச் சந்தித்து இரு சேனைக ளுமாகக் கண்டியை நோக்கிச் சென்றன. பகைவரது சேனைகள் வருவதைக் கண்ட விமலதர்மன் சங்கேதப் படி பின் வாங்கினுன்; எனவே போர்த்துக்கீசப் படை கள் எதிர்ப்பின்றி கண்டியைச் சுலபமாக அடைந்தன. இதற்கிடையில் போர்த்துக்கீசருக்குக் கெடுதி சூழக் கூடிய ஓர் சம்பவம் நிகழ்ந்துவிட்டது. போர்த்துக்கீசப் படையிலே ஜெயவீரன் என்ற சிங்கள இளவரசன் இருந் தான். அவன்பால் சந்தேகம் கொண்ட போர்த்துக்கீசர் அவனைக் கொன்றுவிட்டனர். இதனைக் கண்ட சிங்களச் சேனுவீரர் சீற்றமடைந்து விமலதர்மன் பக்கம் போய்ச் சேர்ந்தனர். உணவுப் பஞ்சமும் இதற்கிடையில் போர் த்துக்கீசரை வாட்டியது. இனியும் கண்டிக்குள் இருந் தால் ஆபத்து என்பதைக் கண்ட அவர்கள் பின்வாங்க நிச்சயித்துக் கண்டியை விட்டுக் கன்னெருவாவில் வரும் போது விமலதர்மன் படைகள் அவர்களைப் பொறி யில் பிடித்ததுபோலச் சூழ்ந்து கொலை செய்தன. டி சௌஸாவும் யுத்த களத்தில் அடைந்த ஊறுகளின் பயனுக மரணம் அடைந்தான். டோனு கதெறினுவை விமலதர்மன் சிறையாக்கி பின்னர் அவளையே தனது இராணியாக மணமுடித்தான். இதனுல் அவனுக்குக் கண்டி இராச்சிய உரிமை வலுப் பெற்றது.

தனது படைகள் இவ்வாறு நாசஞ் செய்யப்பட்ட தைக் கேள்விப்பட்ட போர்த்துக்கீச அரசாங்கம் **ஜெரோனிமோ டி அஸவெடோ**[1] என்பவனை கப்ரின் ஜெனர

1. Jeronimo de Azevedo

லாக இலங்கைக்கு அனுப்பியது. அஸவெடோ கொடியவன்; ஈவிரக்கமற்றவன்; ஆனால் மிகத் திறமை வாய்ந்தவன். தர்மபாலனின் மரணத்துக்குப்பின், கோட்டை இராச்சியத்திலே அமைதியை நிலைநாட்டிவிட்டு கண்டி மீது படையெடுத்து வெற்றிகொள்ள வேண்டும் என அவன் திட்டம் இட்டு இருந்தான். 1597-ம் ஆண்டுக்கும் 1603-ம் ஆண்டுக்கும் இடையில் கண்டியைப் போர்த்துக்கீசர் அடிக்கடி தாக்கிச் சொல்லொணு இடுக்கண் விளைத்தனர். டச்சுக்காரர் கண்டியரசனுக்குத் துணை செய்ய முயற்சி செய்கிறார்கள் என்பதை 1602-ம் ஆண்டில் அறிந்த அஸவெடோ, உடனே கண்டி மீது படை எடுக்க நிச்சயித்து சீதாவக்கைக்குத் தனது சேனைகளை இட்டுச் சென்று அங்கிருந்து கேகாலை வழியாக வலனையை அடைந்தான். வலனைக் கோட்டையையும் போர்த்துக்கீசர் கைப்பற்றி கண்டிக்குள் மீண்டும் பிரவேசித்தனர். ஆனால் அங்கிருந்த உணவுப் பொருள்கள் யாவற்றையும் அழித்துவிட்டு விமலதர்மன் முன்போலச் சங்கேதப்படி பின்வாங்கியிருந்தான். உணவுப் பஞ்சம் போர்த்துக்கீசரைப் பீடிக்கவே அவர்கள் கண்டியை விட்டு நீங்கிப் பின்வாங்கினர். உடனே விமலதர்மனின் படைகள் கனேத்தென்ன என்னும் இடத்தில் போர்த்துக்கீசர் படைகள் மீது பாய்ந்து அழித்தன தப்பிய சில போர்த்துக்கீச வீரர் ஒருவாறு கீழ்நாடுகளுக்கு வந்தனர். இதற்கிடையில், ஏற்கெனவே போர்த்துக்கீசரை வெறுத்த சிங்களர் கீழ் நாடுகளிலும் கலகம் செய்து அவர்களுக்கு விரோதமாகக் கிளம்பினர். இதன் பயனாக கொழும்புப் பட்டினம் ஒன்றைவிட ஏனைய பகுதிகளை எல்லாம் போர்த்துக்கீசர் இழக்கவேண்டி ஏற்பட்டது.

இவ்வாருகத் தனது இராச்சியத்தைப் பகைவரிடம் இருந்து காப்பாற்றிய விமலதர்மன் 1604-ம் ஆண்டில் இறந்தான். அவன் மன உறுதி வாய்ந்தவன். எடுத்த கருமத்தை நிறைவேற்றும் பெற்றியன். அவன் ஐரோப்பிய மக்களைப் பற்றியும் அவர்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தான். அக்காலத்து இலங்கை மன்னர் இவற்றை அறியார். போர்த்துக்கீசருடன் பல காலமாகச் சீவித்து வந்தபடியால் அவர்களின் பாஷையிலும் அவன் நல்ல பரிச்சயம் பெற்று இருந்தான். "உறுதியான, அங்கலட்சணம் பொருந்திய நெட்டையன்; புத்திக்கூர்மையுடையவன். எதுதான் வந்தாலும் தைரியத்தையும் மன உறுதியையும் தளரவிடாதவன் என்பது யாவரும் அறிந்த விஷயம்" என குவேரேஸ் சுவாமியார் 1 என்னும் போர்த்துக்கீச சரித்திர நூலாசிரியர் விமலதர்மனைப் பற்றி எழுதியிருக்கிருர்.

விமலதர்மனுக்குப் பின் சேனரதன் அரசனுனன். இவன் ஒரு காலத்தில் பௌத்த சந்நியாசியாகவும் இருந்தவன்; எனவே சமாதான நாட்டமும் நூல்களில் விழைவும் கொண்டிருந்தான். ஆனல் அவனைச் சமாதானமாக இருக்க அஸவெடோ விடவில்லை. கண்டி இராச்சியத்துக்கு விரோதமாக அஸவெடோ அக்கிரமமான ஓர் போரைத் தொடுத்தான். 1611-ம் ஆண்டில் அவன் மீண்டும் ஒருமுறை படை எடுத்து கண்டியை எரித்தான். 1614-ம் ஆண்டில் அவன் கோவை இராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான். ஆனல் அவன் பதவியை விட்டுப் போகமுன், கண்டிக்கு விரோதமான யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டுமெனப் படைத்தலை

1. Fr. Queyroz

வர்களுக்குக் கண்டிப்பான கட்டளை விதித்தான். போர்த்துக்கீச வீரரும் தம் இலட்சிய பூர்த்தியின் பொருட்டுப் பலவிதமான அக்கிரமங்களை ஈவிரக்கமின்றிப் புரிய ஊரவர்கள் அவர்கள் பால் வெறுப்பும் துவேஷமும் கொண்டனர். போர்த்துக்கீசவீரர் தம் எண்ணப்படி அக்கிரமங்களைச் செய்து கட்டுக்கடங்காது திரிந்தனர்.

1618-ம் ஆண்டில் **கோன்ஸ்தாந்தைன் டி ஸா**[1] என்பவன் இலங்கைக்கு வந்தான். இவன் பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒழுக்க சீலன். சேனையைத் திருத்தி அக்கிரமங்களைக் குறைக்க அவன் முற்பட்டான். இதனால் போர்த்துக்கீச சேனாவீரரிற் பலர் அவனை வெறுத்தனர். அக்கிரமம் விளைத்த போர்த்துக்கீசரை டி ஸா தண்டித்து நீதி வழங்கினான். சிங்களர்பால் நீதியும் அன்பும் கொண்டு நடந்தான். இதனால் ஊரவரான சிங்களர் அவனை நேசித்தனர்.

இது இவ்வாறாக, டச்சுக்காரர் இலங்கை விஷயத்திற் சிரத்தை கொள்ளத் தொடங்கினர். அவர்களிடம் இருந்து எவ்விதமான உதவியும் கண்டி இராச்சியத்துக்குக் கிடைப்பதைத் தடுக்கவேண்டும் என்று எண்ணிய போர்த்துக்கீசத் தளபதியான டி ஸா மட்டக்களப்பு, கற்பிட்டி, திருக்கோணமலை, காலி என்னும் துறைமுகங்களைக் கைப்பற்றி அவற்றை டச்சுக்காரருக்கு விரோதமான அரண்களாக்கினான். *1620*-ம் ஆண்டில் டி ஸாவை போர்த்துக்கீச அதிகாரிகள் திருப்பியழைத்தனர். எனினும் *1623*-ம் ஆண்டில் அவன் கப்ரின் ஜெனரல் பதவியுடன் மீண்டும் இலங்கைக்கு வந்தான். கண்டி இராச்சி

1. Constantine de Saa

யத்துக்கு விரோதமான யுத்தத்தை விடாது நடாத்த வேண்டுமென்று அவனுக்கு உத்தரவிடப்பட்டது. *1627*-ம் ஆண்டிலும் *1628*-ம் ஆண்டிலும் கண்டி மீது அவன்படையெடுத்தான். மூன்ருவது படையெடுப்புக்கும் ஆயத்தம் செய்யப்பட்டது. ஆனுல் சிங்களப்பிரதானிகள் போர்த்துக்கீசரின் மீது அதி துவேஷம் கொண்டவர்களாய் கொழும்பிலே ஒரு சதியில்ஈடுபட்டனர். மூன்ருவது முறை டி ஸா கண்டியைத் தாக்கி வதுளையை அடைந்ததும் அவனுடன் இருந்த சிங்கள வீரர் கண்டிப் படைகளுடன் சேர்ந்து அவனுக்கு விரோதமாக நின்றனர். நாலு பக்கமாகப் பகைவர் தன்னைச் சூழ்ந்ததைக் கண்ட டி ஸா தெற்குப் பக்கமாகப் போய்க் கரையை அடையலாம் என்று நிச்சயித்துப் போர் செய்துகொண்டே தெற்கு நோக்கிப் புறப்பட்டான். ஆனுல் ரன்டெனிவெல என்னும் இடத்தில் பகைவர் அவனையும் அவனது சேனைகளையும் சுற்றி வளைத்து அவனது வீரர்களைக் கொன்றனர். டி ஸாவும் அப்போரில் புறங்காட்டாது வீரத்துடன் போர் புரிந்து மாண்டான். வீரனுகிய அவனுடைய பிரேதத்தை சேனரதன் தக்க மரியாதையுடன் அடக்கம் செய்வித்தான். டி ஸாவின் மரணத்துடன் போர்த்துக்கீச ஆட்சியின் அந்திய காலமும் சமீபித்தது.

கண்டி இராச்சியத்துடன் இவ்வாருகப் போர்த்துக்கீசர் அடிக்கடி போரிட்டதால் அவர்களின் படைப்பலம் குறைந்து மிகவும் கேவல நிலையுற்றது. இந்தியாவில் இருந்தோ போர்த்துக்கல்லில் இருந்தோ புதுப் படைகள் வருவதும் கஷ்டமாக இருந்தது. இன்னும் அவர்கள் பலவிதங்களில் கொடுங்கோலாட்சி புரிந்தபடியால் அவர்கள்பால் விசுவாசமோ பக்தியோ கொண்டிருக்க சிங்க

ளர் மனம் கொள்ளவில்லை. இப்படியான நிலையிருந்த அந்தக் காலத்திலே சிங்கள மன்னருக்குக் கடற்படை இருந்திருந்தால், அவர்கள் மிகச் சுலபமாகப் போர்த்துக்கீசரை இலங்கையிலிருந்து கலைத்திருப்பர். கடற்படையில்லாதிருந்த சிங்கள அரசர்கள் டச்சுக்காரர் வருகையைக் கண்டு அவர்களின் உதவியைப் போர்த்துக்கீசருக்கு விரோதமாகப் பயன்படுத்த எண்ணினர். ஆனால் டச்சுக்காரரும் அவ்வுதவியைச் சும்மா அளிக்கத் தயாராக இருக்கவில்லை. தங்களுக்குத் தக்க கைம்மாறு கிடைத்தால்தான் அவ்வுதவியை அளிக்க அவர்கள் சித்தமாயிருந்தனர்.

1602-ம் ஆண்டில் ஸ்பீல்பேர்கன் [1] என்னும் டச்சுக் கடற்படைத் தளபதி விமலதர்மனிடம் சென்று, போர்த்துக்கீசருக்கு விரோதமாகச் செய்யவேண்டிய முயற்சிகளைப் பற்றிக் கலந்து பேசினான். இவனுக்குப்பின் சீ போல்ட் டிவேர்ட் [2] என்பவன் படை உதவிக்கான பேச்சுக்களை விமலதர்மனுடன் தொடர்ந்து நடத்தி வந்தான். ஆனால் ஒரு நாள் குடிவெறியில் இருந்த அவன் மன்னனை அவதூறாகப் பேச, அவனும் அவன் சகாக்கள் பலரும் கொலை செய்யப்பட்டனர்.

1612-ம் ஆண்டில்—அதாவது சேனரதன் அரசனாக இருந்த காலத்தில்— டி பொஸ்கோவர் [3] என்னும் டச்சுத் தளபதி அவனைக் கண்டியில் சந்தித்து டச்சு கிழக்கிந்தியக் கொம்பனியிடம் இருந்து படை உதவி பெற்றுத் தருவதாகக் கூறினான். 1635-ம் ஆண்டில் சேனரதன் இறக்க

---

1. Spilbergen 2. Seebald de Wert
3. De Boschouwer

இரண்டாவது இராஜசிங்கன் அரசனுனன். இரண்டாவது இராஜசிங்கன் பிரான்சிஸ்க திருச்சபைக் குருமாரிடம் கல்வி கற்று லத்தீன் போர்த்துக்கீச பாஷைகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தான். மற்றும் கண்டி மன்னரிலும் பார்க்க அவன் பரந்த நோக்கம் கொண்டவன்; ஐரோப்பியரையும் அவர்களின் இராஜதந்திரங்களையும் நன்கு அறிந்தவன்; எனவே அவன் தனது நீண்டகால ஆட்சியின் போது தான் சந்திக்க நேர்ந்த ஐரோப்பியர்களது இராஜதந்திரங்களை யெல்லாம் சமாளித்து நிர்வகிக்க முடிந்தது.

1638-ம் ஆண்டில், டச்சுக்காரருடன் ஓர் சமாதான உடன்படிக்கை செய்ய இராஜசிங்கன் ஒழுங்குகள் செய்தான். சில சொந்த விஷயங்களின் பொருட்டு இராஜசிங்கனுடன் பகைமைபாராட்டிய போர்த்துக்கீச கப்ரின் ஜெனரல் கண்டி மீது படை எடுத்து வந்தான். ஆனுல் அவன் கன்னெருவாவில் தோல்வியுற்று மரணமடைந்தான். இதன் பின் அவ்வாண்டு மே மாதம் இராஜசிங்கன் டச்சுக்காரருடன் ஓர் உடன்படிக்கை செய்தான். இவ்வுடன்படிக்கையினுல் இலங்கையின் கறுவா வர்த்தகத்தை டச்சுக்காரர் நடத்த வேண்டும் என்றும் அதற்குப் பிரதியுபகாரமாக போர்த்துக்கீசரைத் துரத்துவதில் அவர்கள் உதவிசெய்ய வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. இன்னும், போர்த்துக்கீசரிடம் இருந்து பிடிக்கப்படும் கோட்டைகளை அரசன் இடிக்காது போனுல் அவற்றை டச்சுக்காரர் தம்தளங்களாக்கிக் கொள்ளலாம் என்றும் ஓர் நிபந்தனை இவ்வுடன்படிக்கையில் கூறப்பட்டது. போர்த்துக்கீச பாஷையில் எழுதப்பட்டு அரசன் கையொப்பமிட்ட உடன்படிக்கைப் பிரதியிலே இந்நிபந்தனை காணப்பட்டது. ஆனுல் டச்சுப் பாஷையில் எழுதப்பட்ட பிரதியில் இது காணப்

படவில்லை. இதன் பயனாக, பிற்காலத்தில் அரசனுக்கும் டச்சுக்காரர்க்குமிடையில் பல பிணக்குகள் ஏற்பட்டன.

இவ்வாருக இரண்டாவது இராஜசிங்கனுக்கும் டச்சுக்காரர்க்குமிடையில் பரஸ்பரம் உதவி செய்வதற்கான உடன்படிக்கை ஏற்பட்ட பின் போர்த்துக்கீசருக்கு விரோதமான யுத்தம் இலங்கையில் ஆரம்பமாயது. போர்த்துக்கீசரின் கடற்படைகளை டச்சுக்காரர் கண்ட கண்ட இடங்களில் முறியடித்து அவர்களுக்கிருந்த துறைமுகங்களை ஒவ்வொன்ருகக் கைப்பற்றினர். 1642-ம் ஆண்டில் போர்த்துக்கல் ஸ்பெயினில் இருந்து பிரிந்து, டச்சுக்காரருடன் தனியாக 10 வருட காலத்துக்கு யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டது. இதன் காரணமாக டச்சுக்காரர்க்கும் போர்ச்துக்கீசருக்குமிடையே இலங்கையிலும் சமாதானம் உண்டாயது. இதனைக் கண்ட இராஜசிங்கன் வெகுண்டான். தன்னை டச்சுக்காரர் ஏமாற்றிவிட்டார்கள் என எண்ணினுன். ஆனல் டச்சுக்காரர் தாம் போர்த்துக்கீசருடன் செய்துகொண்ட உடன்படிக்கையினுல் சப்தகோறளைகளையும் வெங்தோட்டை ஆற்றுக்குத் தென்பாரிசத்தில் இருந்த பிரதேசங்களையும் அவர்களிடம் இருந்து பெற்றுத் தமதாக்கினர். யுத்த நிறுத்த உடன்படிக்கைக் காலமாய 10 வருஷம் முடிந்ததும் 1652-ம் ஆண்டில் போர்த்துக்கீசருக்கும் டச்சுக்காரருக்கு மிடையில் மீண்டும் போர் மூண்டது. வான் கோயன்ஸ்[1] என்ற டச்சுக் கடற்படைத் தளபதி போர்த்துக்கீசரின் கடற்படையை முறியடித்தான். அதன் பயனுக மேலும் பல டச்சுப் படைகள் இலங்கையில் வந்து

1. Van Goens

இறங்கின. இன்னும், காலி, களுத்துறை, மொரட்டுவ, நீர்கொழும்பு என்னும் இடங்களில் இருந்த போர்த்துக்கீசக் கோட்டைகள் டச்சுக்காரருக்காயின. 1655-ம் ஆண்டில் டச்சுக்காரர் கொழும்பை முற்றுகை யிட்டனர். போர்த்துக்கீசர் அந்நகரத்தைக் காக்க மிகவீரத்துடனும் உறுதியுடனும் போராடினர். ஆயினும் 1655 ம் ஆண்டு மே மாதம் கொழும்பு நகரம் டச்சுக்காரர்க்குச் சரணுகதியடைந்தது. இலங்கையில் போர்த்துக்கீசரது ஆட்சியும் அத்துடன் அழிந்தது.

போர்த்துக்கீசர் தம் பரிபாலனக் கருமத்தைத் திறம்பட நடத்தவில்லை என்றே கூறவேண்டும் சிங்கள மக்களின் பாரம்பரிய சட்டதிட்டங்களுக்கமைந்தே நாட்டைப் பரிபாலிப்பதாக அஸவெடோ வாக்குறுதி செய்துகொடுத்தும், இச்சட்டங்கள் என்ன, அவற்றை எவ்வாறு அன்ருடம் அநுட்டிப்பிற் கொண்டு வர வேண்டும் என்றும் இன்னோரன்னவற்றைப் பற்றி போர்த்துக்கீசர் முயற்சிகள் செய்யவில்லை. இதன் பயனுக அவர்களின்கீழ் கடமையாற்றிய போர்த்துக்கீச அதிகாரிகளும் சிங்கள அதிகாரிகளும் தம் மனம்போனவாறு கருமம் ஆற்றி ஊரவர்களை வருத்தினர். போர்த்துக்கீச நூலாசிரியரான குவேரேஸ் சுவாமியாரே தம்மவரான அதிகாரிகளின் தகாத கருமங்களைக் கண்டித்து எழுதியுள்ளார். அவர் எழுதியது வருமாறு:- "சிங்கள மக்களின் சட்டங்கள் என்ன? பாரம்பரிய வழக்கங்கள் என்ன என்பதை அறிய போர்த்துக்கீசர் சிரத்தை கொள்ளவில்லை. இச்சட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் எழுத்துமூலமாகப் பொறிக்கவும் இல்லை. எல்லாரும் அவற்றை அறிந்து கொள்வதன் பொருட்டு அவற்றை அச்சிட்டுப் பிரசுரிக்கவும் இல்லை. கப்ரின்மார், திஸாவைமார் என்பவர்களின் நல் எண்ண

த்தின்படிக்கோ, தீய எண்ணத்தின்படிக்கோ நடக்க சகல கருமங்களும் விடப்பட்டன. சிலர் போரைக் காரணமாகக் கொண்டும், இன்னும் சிலர் தாம் குத்தகைக்காரர் என்று சொல்லிக் கொண்டும், வேறும் சிலர் தாம் அரசனுக்கு இறை சேகரிப்பவர் அல்லது ஊழிய வரி சேகரிப்பவர் எனச் சொல்லிக்கொண்டும் ஊரவர்களை வருத்தினர். பழிக்கஞ்சாப் பாவக் கருமங்களையே அவர்கள் செய்தனர். பேராசையினால் உந்தப்பட்ட அவர்கள் சட்டம் என்பதை மதிக்கவில்லை.'' போர்த்துக்கீசரான குவேரோஸ் குருவானவர் எழுதிய இக்கூற்றில் இருந்தே போர்த்துக்கீச பரிபாலனம் எவ்வளவு தகாததாக இருந்தது என்பதும், சிங்களர் அவ்வாட்சியை எவ்வளவு தூரம் வெறுத்தார்கள் என்பதும் புலப்படும்.

கத்தோலிக்க குருமாராக விருந்தோர் தம் மதத்தவரைப் போர்த்துக்கீச அதிகாரிகளின் கொடுமைகளிலிருந்து காப்பதற்கு எவ்வளவோ அரும்பாடுபட்டனர். ஆனால் வன்கணாளரான போர்த்துக்கீச அதிகாரிகள் தம் கிறிஸ்தவ குருமார் விஷயத்தில்கூட அக்கிரமங்கள் செய்தனர். கிறிஸ்தவ தேவாலயங்களுக்குச் சேரவேண்டிய வருமானங்களைத் தானும் அவர்கள் அபகரித்தனர்.

கிறிஸ்தவ குருமார் சிங்கள மக்களுக்கிடையே கத்தோலிக்க மதத்தை வெகுவாகப் பரப்பினர். மதம் சம்பந்தமான பல நூல்கள் சிங்களத்திலும் தமிழிலும் எழுதப்பட்டன. பல பாடசாலைகளையும் குருமார் ஆரம்பித்து வைத்தனர். அவற்றில் யேசு சபைக் குருமாரால் கொழும்பில் தாபிக்கப்பட்ட உயர்தரக் கலாசாலை விசேஷமானது.

போர்த்துக்கீசரின் பரிபாலனத்தில் இருந்த பிரதேசங்களை அடுத்த பக்கத்தில் உள்ள படத்தில் நீங்கள் காணலாம்.



போர்த்துக்கீச மாகாணங்கள்

கொழும்புப் பட்டினத்தை "கமரா" [1] என வழங்கப் பட்ட பட்டினசபை ஒன்று பரிபாலித்தது. பட்டினத்திலே 1,500 வீனரும், 900 உயர்குல போர்த்துக்கீசக் குடும்பத்தவரும் வசித்தனர். பலதேவாலயங்களும் கன்னிகாஸ்திரி மடங்களும், ஏழைகட்கு உதவும் ஓர் ஆதுலர் சாலையும், ஆஸ்பத்திரியும் அங்கு இருந்தன.

போர்த்துக்கீசரின் பரிபாலனத்திருந்த மாகாணங்கள் பின்வருவனவாம்:-

(I) சப்தகோறளைகள்

(II) நாலு கோறளைகள்

(III) சப்பிரகமுவா

(IV) மாத்தறை

(V) யாழ்ப்பாணமும் மன்னாரும்.

ஒவ்வொரு மாகாணமும் ஓர் திஸாவையின் பரிபாலனத்தில் இருந்தது. திஸாவையாகப் போர்த்துக்கீசரே இருந்தனர். திஸாவையின்கீழ் கோறளைகள், விதானைமார், அத்துக்கோறளைகள் என்பவர்கள் இருந்தனர். இவர்களிற் சிலர் போர்த்துக்கீசர்; ஆனால் பெரும்பான்மையினர் சிங்களராகவே இருந்தனர். யாழ்ப்பாணமும் மன்னாரும் திஸாவை என்பவனின் கீழ் இராது, கப்ரின் மேஜர் [2] எனப்படும் அதிகாரியின் பரிபாலனத்தில் இருந்தன. ஒவ்வொரு திஸாவையும் தன் கீழ் உள்ள மாகாணத்தின் பரிபாலனத்துக்குப் பொறுப்பாக இருந்தான். அவன் கீழ் பல சிறு அதிகாரிகள் இருந்தனர். இப்போது மாகாண அரசாங்க ஏசண்டர் என நாம் வழங்கும்

1. Camara 2. Captain Major

மாகாணத் தலைவர், உதவித் தலைவர், பிரிவுக் காரியாதிகாரி, விதானைமார் என்பவர்களின் உதவியுடன் மாகாண பரிபாலனத்தை நடத்துகிற மாதிரியே அக்காலத் திஸாவைமாரும் போர்த்துக்கீச பரிபாலனத்தை நடத்தினர். தல பரிபாலன விஷயத்தில் போர்த்துக்கீசர் பழைய சிங்கள தலத்தாபன முறையைப் பின்பற்றினர் என்று கூறலாம்.

மத்திய அரசாங்கத்துக்கு கப்ரின் ஜெனரல் என்பவன் பொறுப்பாக இருந்தான். கப்ரின் ஜெனரல், கோவையில் இருந்த இராஜப்பிரதிநிதியிடம் இருந்து கட்டளைகளைப் பெற்றான். நிதிநிர்வாகம் வெடோர் டி வஸெண்டா[1] என்னும் நிதி அதிகாரி பொறுப்பிலும் நீதிபரிபாலனம் ஓர் பிரதம நீதியரசர் பொறுப்பிலும் இருந்தன. அரசாங்க வருமானத்தின் ஓர் பகுதி பொருளாகவும் ஓர் பகுதி பணமாகவும் வந்தது. (போர்த்துக்கீச) அரசன் தனக்குச் சேரவேண்டிய இறையைச் சேகரிக்கும் உரிமையை ஒரு சிலர்க்கு விற்றுவிட, அவர்கள் உரொக்கப் பணம் அரசனுக்குக் கொடுப்பர். இரத்தினங்கள், முத்து, கறுவா, யானை, பாக்கு, மிளகு என்பவற்றை விற்பதாலும் பெருந்தொகைப் பணம் அரசிறையாகக் கிடைத்தது, பூதல் வரி அல்லது மரலபத்த என்ற இன்னோர்வித மரண வரியாலும் போர்த்துக்கீச அரசாங்கத்துக்கு அதிக வருமானம் கிடைத்தது. இவ்வரியால் கிறிஸ்தவரல்லாதாரே மிகவும் கஷ்டப்பட்டனர். கிறிஸ்தவரல்லாதார் ஒருவர் இறந்துவிட்டால் அவரது உரிமைக்காரர் தமக்குக் கிடைக்கும் ஆதனத்தின் பெறுமதியின் மூன்றில் ஒரு பாகம் வரியாகச் செலுத்த வேண்டும் என விதிக்கப்பட்

1. Vedor de fazenda 2. Death duty cr Marala Badde

டது. ஊரவர்கள்மீது விதிக்கப்படும் அபராதப்பணம் மூலமாகவும் போர்த்துக்கீச அரசாங்கம் வருமானம் பெற்றது.

இறை விஷயத்திலும் அதனைச் சேகரிக்கும் விஷயத்திலும் போர்த்துக்கீசர் பழைய சிங்கள முறையினையே அதிகமாகத் தழுவினர் எனலாம். பூதல் வரி விஷயத்தில் அவர்கள் சிங்கள முறையைக் கொள்ளவில்லை. முற்காலத்தில் இவ்வளவு பண்டங்கள், இவ்வளவு உரொக்க வரி, இப்படியான தேக ஊழியம் என்று வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால் போர்த்துக்கீசரது பரிபாலனத்தில் அவர்களின் பேராசை பிடித்த உத்தியோகத்தர் வரையறையில்லாது தம் மனம் போனபடி அறவிட்டு ஊரவர்களை வருத்தினர்.

போர்த்துக்கீசர் தம் ஆட்சியின் நிரந்தரமான சின்னங்கள் பலவற்றை இந்நாட்டில் விட்டுப் போயிருக்கிறார்கள். உரோமன் கத்தோலிக்க சமயத்தைப் பெருந்தொகையான சிங்களரும் தமிழரும் இப்போதும் அநுட்டித்து வருகிறார்கள். விசேஷமாக திருச் சபை ஆராதனை விஷயத்தில் சிங்களத்திலும் தமிழிலும் புது நூல்கள் எழுதப்பட்டு, அம்மொழிகளில் இலக்கிய வளர்ச்சிக்கு உதவின. சில்வா, பெரேரா, பர்னாண்டோ முதலாம் போர்த்துக்கீசப் பெயர்களை இப்போதும் பல சிங்களர் பூண்டிருக்கிறார்கள். மேசை, தொப்பி, வீதுரு என்பனவும் போர்த்துக்கீச அடியாகப் பிறந்த சொற்களே.

வினாக்கள்

1. மாயாதுன்னே, கோட்டையின் தர்மபாலன், சீதாவக்கை இராஜசிங்கன், முதலாவது விமலதர்மசூரியன், அஸவெடோ, கொன்ஸ்தாந்தைன் டி ஸா, சீபோல்ட் டி வேர்ட் என்பவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் சிறு குறிப்பு எழுதுக.

2. இலங்கையின் தென்மேற்குப் பகுதியைப் போர்த்துக்கீசர் வெற்றி கொண்டு அதற்கு எஜமானர்களாகிய காரணத்தை விளக்குக.

3 கண்டி இராச்சியத்தைப் போர்த்துக்கீசர் வெற்றி கொள்ளத் தவறியமைக்குக் காரணம் என்ன?

4. இலங்கையில் போர்த்துக்கீசரது ஆட்சியைப் பற்றி ஓர் சிறு கட்டுரை எழுதுக. அவர்கள் ஏன் தம் பரிபாலன விஷயமாக அநுகூலமடையவில்லை என்பதை விளக்குக.

5. இலங்கையில் போர்த்துக்கீசரது ஆட்சியை நினைவூட்டும் சில விஷயங்களை எடுத்துக் காட்டுக.

3-ம் அதிகாரம்

கண்டி இராச்சியம்.

அந்நியராட்சிக்குள் வெகுகாலமாக அகப்படாதிருந்தது கண்டி இராச்சியம்; இலங்கையின் மற்றெல்லாப் பாகங்களும் அந்நியர்க்கடிமைப்பட்ட பிறகும் பலகாலமாக இவ்விராச்சியம் தனது சுவாதீனத்தைப் பாதுகாத்து கடைசியிலேயே வீழ்ச்சியுற்றது. அப்படியான ஓர் இராச்சியத்தின் மக்களைப் பற்றியும் அதன் சரித்திரத்தைப் பற்றியும் அறியவேண்டியது இன்றியமையாததாகும்.

கந்த உடரட்டை என்பது தான் கண்டி இராச்சியத்தின் சரியான பெயர். புராதன காலத்தில் அது மலையரட்டை எனவும் வழங்கப்பட்டுப் பெரும் அடவிகளால் சூழப்பட்டிருந்தது. அநுராதபுரத்திலும் அதற்குப் பின் பொலநறுவையிலும் இருந்த இராச்சியங்கள் ஒழிந்த பின் சிங்களர் அப்பகுதிகளை விடுத்துத் தென்மேற்கே சென்று அங்கு இராஜதானிகளை அமைத்தனர். யாப்பாஹுவ, தம்பதேனிய, குருநாகல், கோட்டை என்பன இவ்வாறே இராசதானிகளாயின என நாம் அறிகிறோம். இவ்வாறாகவே, வடபகுதிச் சமவெளியில் இருந்த சிங்களர் நாலந்தைக் கூடாகவும் மகாவலி ஓரமாகவும் கந்த உடரட்டைச்குச் சென்றார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இன்னும் உமா ஓயா, வதுளை ஓயா என்பவை ஓரமாகவும் அவர்கள் ஊவா வடிநிலங்களை இவ்வாறே அடைந்திருக்கவேண்டும்.

சிங்களர் விவசாயிகள்: தாழ்ந்த நிலங்களில் அவர்கள் நெல்லையும் மேட்டு நிலங்களில் குரக்கன், எள்ளு சாமை போன்ற தானியங்களையும் பயிரிட்டு வந்தனர். சிறுதானியங்களை விதைக்கும்போதும் அவை பயிராகும் போதும் ஈரலிப்புச் சுவாத்தியமும், தானியங்கள் முற்றும் காலத்திலும் அறுவடை செய்யும் காலத்திலும் உஷ்ணசுவாத்தியமும் இருக்கவேண்டும். இப்படியான ஓர் சுவாத்தியம் கந்த உடரட்டையின் கீழ்ப்பாதிப் பாகத்தில் உண்டு. மாத்தளை, கண்டி, நுவரெலியா, அப்புத்தளை என்பவற்றைச் சேர்ப்பதற்கான ஓர் கோட்டினைக் கீறிப் பார்த்தால் அது உடரட்டையை இரண்டாகப் பிரிப்பதைக் காண்பீர்கள். கிழக்குப் பாகத்தில் ஐப்பசி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரைதான் மழையுண்டு. மீதிக் காலத்தில் மழையில்லாது வரண்டிருக்கும். இங்கே நெல்லும் சிறுதானியங்களும் நன்கு விளையும். ஆனால் இங்கேயும் மேட்டு மலைப்பாங்கரில் அதிக குளிர் இருப்பதால் தானியங்கள் காலத்துக்கு முற்று. உடரட்டையை நோக்கி இவ்வாறு வந்த சிங்களர் கண்டிச் சமவெளியிலும் ஊவா ஆற்றுவடி நிலத்திலும் குடியேறினர். அங்கே யிருந்த நிலங்கள் நெற்செய்கைக்கு ஏற்றவையாக இருந்த போதிலும் மலைச்சரிவுகளில் இருந்த அந்நிலங்களைச் சிறு சிறு வயல்களாக்க வேண்டிய கஷ்டம் ஏற்பட்டது. உடரட்டையின் உஷ்ணப் பிரதேசத்தின் எப்பகுதிக்காவது—அதிலும் விசேஷமாக தெல்தெனியாவுக்குக் கிழக்கேயுள்ள மகாவலிப் பள்ளத்தாக்குப் பகுதிக்கு—நீங்கள் விஜயம் செய்தால் மலைநாட்டு விவசாயிகளின் மிகச் சிறந்த கைத்திறமையைக் காண்பீர்கள். பரந்த மலைச் சரிவுகளை அவர்கள் எவ்வளவு திறமையுடன் ஒப்புரவு செய்து அங்கே நெல் விளைவித்து

வருகிறுர்கள் என்பதை நீங்கள் அவதானிப்பீர்கள். மாரிக் காலத்தில் வேண்டிய தண்ணீர் அபரிமிதமாகக் கிடைக்கிறது. புரட்டாதி—ஐப்பசியில் விதைத்து மாசி மாதத்தில் அறுவடை செய்வர். இதன் பின் இன்னெரு தரம் அவ்வாண்டில் வேளாண்மை செய்வர். உயர்ந்த மலேகளில் இருந்து வரும் ஆற்று நீரை வயல்களுக்குப் பாய்ச்சியே அவர்கள் இவ்விரண்டாம் போக வேளாண்மையைச் செய்வர். உதாரணமாக, ஹோட்டன் சம வெளியில் இருந்து வரும் ஆற்றுநீர் வெளிமடைவரை யுள்ள வயல்களுக்குப் பிரயோசனப்படத்தக்க ஊவா வடி நிலத்துக்கு விடப்படுகிறது. இவ்வாருக நீர்பாய்ச்சப் படும் வயல்களில் சித்திரை மாதத்தில் நெல்லே விதைத்து ஆவணி மாதத்தில் அறுவடை செய்வர்.

இப்படியாக எல்லா மிருந்தும் கந்த உடரட்டை, முன்பிருந்த இராச்சியங்களேப் போல அதிக குடிசனங்களேக் கொண்டிருக்கவில்லே. குடியிருந்த சொற்ப தொகையினரும் வறியவர்களாக இருந்தனர் என்று ருேபெட் நொக்ஸ்[1] என்ற ஆங்கிலேயர் எழுதியிருக்கிருர். இவர் இரண்டாவது இராஜசிங்கன் காலத்தில் கந்த உடரட்டையில் 18 வருஷ காலமாக ஓர் சிறையாளன் போல வாழ்ந்தவர்.

நாம் இப்போது எடுத்துக்கொண்ட காலத்தில் உடரட்டை பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மாத்தளே, வதுளே என்பவற்றை மன்னனின் மக்களாய இளவரசர்களே அதிகமாகப்பரிபாலித்தனர். மகாநுவரை அல்லது செங்கடகலநுவரை என்னும் இராஜதானியிலே அரசன் இருந்தான். பகைவர் தாக்கும் காலம் ஒதுக்கிட

1. Robert Knox

மாக ஹங்குராங்கெத்த, மெதமகாநுவரை என்னும் இட ங்களை அவன் அரண்செய்துவைத்திருந்தான். மன்னனும் பரிவாரங்களும் உல்லாசமாகப் பொழுது போக்குதற் கான இடங்களாக குண்டசாலை, நிலாம்ப என்னும் ஊர்கள் அமைந்திருந்தன. உடரட்டை இராச்சியத்தின் பெரும் பட்டினங்களில் அலுத்நுவரை ஒன்று. திருக் கோணமலை, மட்டக்களப்பு என்னும் இடங்களில் இரு ந்து அரிசி, உப்பு, மீன் என்பவற்றைக் கொண்டுவரும் தவளக்காரர் (கால்நடை வியாபாரிமார்) அலுத்நுவரை க்கு வந்து பின் மகாவலியைக் கடந்து மகாநுவரைக்குப் போவர். இவர்களின் பாதை மெத மகாநுவர இடை வெளிக்கூடாகச் சென்றது. மெதமகாநுவரைக்கோட்டை அந்நியர் உள்நாட்டுக்குட் செல்வதைத் தடுக்கும் அர ணாக அமைந்திருந்தது. வதுளையில் இருந்து ஓர் பாதை ஹங்குராங்கெத்தையைக்கடந்து இராஜதானிக்குச் சென் றது. வடக்கே, மாத்தளைக்கு வடக்கே நாலந்த இடை வெளி இருந்தது. வடமேற்கே கலகெதரை கணவாய் இருந்தது. இதற்கூடாக, மேற்குத் துறைமுகமாய புத் தளத்துக்கு ஓர் பாதை சென்றது. இப்பாதை வழியாகவே பாக்கு, மிளகு, சாதிக்காய் முதலாம் வாசனைத் திரவிய ங்கள் அனுப்பப்பட்டன. தவளக்காரர் மீன், உப்பு, புடைவை என்பவற்றையும் அந்நிய நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களையும் உடரட்டை இரா ஜதானிக்குக் கொண்டு வந்தனர். மேற்குப் பக்கத்திலே பிரசித்திவாய்ந்த வலனைக் கணவாய் இருந்தது.

தெகல்தொறுவ, கல்மடுவ, தொடன்வெல, கடலதே னிய, இலங்காதிலக்க, எம்பெக்க என்பன மலைநாட்டு மக்களது நுண்ணிய சித்திரக் கலைக்கு மத்தியத் தானங் களாக இன்னும் விளங்குவன. இவை அனைத்தும் 2000

அடி சம உயரக் கோட்டுக்குக்கீழ் உள்ளவை. எனவே இங்கு நெல் நன்கு விளையும். இந்த உயரத்துக்குமேல் உள்ள பிரதேசங்களில் இரவுக் காலம் மிகக் குளிராக அமைந்திருப்பதால் அங்கு நெற் செய்கை அதிக பயன் அளிக்க மாட்டாது. மலைநாட்டின் ஈரலிப்பான பிரதேசங்களில் வனங்கள் செறிந்திருந்தன. இவ்வனங்கள் கண்டி இராச்சியத்துக்குப் பாதுகாப்பு அளிக்கும் அரண்களாகவும் விளங்கின என்று கூறலாம். இவ்வாறுய அடர்ந்த வனங்கள் கண்டி இராச்சியத்தின் வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் இருந்தன. இவ்வனங்களுக்கூடாக ரோட்டுக்கள் இடப்படவில்லை. ரோட்டுக்களை நிர்மாணித்துவிட்டால் அவை வழியாகப் பகைவர் உட்புகுந்து விடுவர் என்ற பயம் அக்காலக் கண்டி மன்னருக்கிருந்தது. மட்டக்களப்பில் இறங்குபவர்கள் நில்கலைக்கு வந்து அங்கிருந்து ஊரனியா மார்க்கமாக அலுத்நுவரையை அடைவர். வட கிழக்கில் இருப்போர் கொட்டியாரத்துக்கு வந்து அங்கிருந்து தோணிகள் மூலம் அலுத்நுவரையை அடைவர். புத்தளத்தில் இருந்து வருவோர் வனங்களுக்கூடாக கலகெதரைக்குப் போய் அங்கிருந்து கண்டியை அடைவர்.

இராச்சியத்தின் சர்வாதிகாரி அரசனாகவே இருந்தான். அவனுக்கு ஓர் ஆலோசனைச் சபை இருந்தது. ஆனால் இச்சபையின் ஆலோசனைப்படிதான் அவன் தனது கருமங்களை ஆற்றவேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கவில்லை. **அதிகாரங்கள் அல்லது அதிகாரிகள்** எனப் பெயர் கொண்ட இரு உயர் பிரதானிகள் அவனுக்கு ஆலோசனை கூறும் மந்திரிமாராக இருந்தனர். அவர்களுக்கு அடுத்தபடியாக இருந்தவர்கள் மாகாணாதிபதிக

ளான திஸாவைகள் மாகாணத்துப் பிரிவுகள் அல்லது ரட்டைகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் ரட்டே மகாதமயா வின் ஆட்சியில் இருந்தது. நுவரகலாவிய, தம்மன் கடுவை, மாத்தளை, சப்தகோறளை, நாலுகோறளை, மூன்றுகோறளை, உடபலாத்த, வலப்பனை, விந்தனை, வெல்லஸ, ஊவா என்பனவே பழைய கண்டி இராச்சிய த்து மாகாணங்களாம்; அடுத்த பக்கத்தில் உள்ள பட த்தில் இம்மாகாணங்கள் காட்டப்பட்டிருக்கின்றன.

மானிய முறை நிலவிய ஏனைய நாடுகளிற் போலவே கண்டி இராச்சியத்திலும் மாகாணப் பிரதானிகளும் பிரிவுப் பிரதானிகளும் தத்தம் புகுதிகளில் அமைதியை யும் ஒழுங்கையும் நிலைநாட்டினர். அவர்களே நீதிபரிபா லனத்தைச் செய்தனர்; அரசனுக்குச் சேரவேண்டிய இறையைச் சேகரித்தவர்களும் அவர்களே. இன்னும், யுத்தம் நிகழுங் காலத்தில் மானிய முறைப்படி யுத்தவீர ரையும் படைக்குச் சேர்த்துக் கொடுத்தனர். பிரதானி கள் யாவருக்கும் மேலாக உள்ளவன் அரசன்; அவனி டம் இருந்தே சகல அதிகாரங்களும் பிறந்தன. எனவே பிரதானிகள் கொடுமை இழைத்தால் பிரஜைகள் அக் கொடுமைகளையிட்டு அரசனுக்கு முறையிட இடம் இரு ந்தது. அரசனே சில சமயங்களில் வழக்குகளை விசா ரணை செய்வான். ஆனால் அநேகமாக மகாமடுவ என வழங்கப்பட்ட தன் சபைக்கே இப்படியான வழக்கு விசா ரணை அதிகாரத்தை ஒப்புவித்தான், மகாமடுவ என்னும் சபையில் முக்கியமான பிரதானிகள் அங்கத்தவராயிருந் தனர்.

அரசாங்க விஷயங்களை நிருவகிக்க அரசாங்கப் பகு திகள் பலவும் இருந்தன. அவற்றுட் சிலவற்றின் பெயர் வருமாறு:—



டச்சுப் பிரதேசங்களும், கண்டி இராச்சிய மாகாணங்களும்.

(I) கோட்டல்பத்தை அல்லது தொழிலாளர் பகுதி

(II) குருவே அல்லது யானைப் பகுதி

(III) மடிகே அல்லது ஏற்றுமதி இறக்குமதிப் பகுதி.

மக்கள் சாதிவாரியாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். மானிய முறையிலிருந்த ஏனைய சகல நாடுகளிலும் போல கண்டி இராச்சியத்திலும் மக்கள் தோட்டி முதல் தொண்டைமான் ஈறாகப் பல சாதிகளாகப் படிப்படியாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். நாட்டில் அரசனே அதி உயர்ந்தவன்; அவனுக்குப் பின் மத குரவர்களும் பிரதானிகளும் இருந்தனர். சாதாரண பிரஜைகளில் உயர் சாதி, குறைந்த சாதி எனப் பல சாதிப் பிரிவினைகள் இருந்தன. ஒவ்வொருவனதும் பிறப்பை ஒட்டியே அவனது சாதி அமைந்திருந்தது. ஒவ்வொருவனும் தன் தன் சாதிக்குரிய தொழிலையே செய்யவேண்டும் என்ற நியதியும் இருந்தது. சாதாரணக் குடிகள் தம் பிரதானிகளாயுள்ளார்க்கு தாம் இறுக்க வேண்டிய தானிய இறையைக் கொடுத்தும் செய்ய வேண்டிய தேக ஊழியத்தைச் செய்தும் வந்தார்கள். பிரதானிகளும் அவ்வாறே தாமும் அரசனுக்கு இறை கொடுத்தும் தேக ஊழியம் செய்தும் வந்தனர். தனக்குத் தனது அதிகாரிகள் செய்யும் ஊழியத்துக்காக அரசன் அவர்கள் எல்லாருக்கும் நிலங்களை மானியமாக வழங்கினான்.

உடரட்டையில் வாழ்ந்தவர்கள் வேளாண்மை செய்து தம் சுயதேவையைப் பூர்த்தி செய்தார்கள். எனினும் நெல் வெல்லவ, மட்டக்களப்புப் பகுதிகளில் இருந்து அவர்களுக்குக் கிடைத்தது. வியாபாரத் தொழில் அதிகமாக இருக்கவில்லை. மீன், பாக்கு, புடைவை ஆகியவற்

றில்தான் கொஞ்ச அளவுக்கு வியாபாரம் நடந்தது. ஆனால் உடரட்டையில் நுண்கலைத் தொழில்கள் மிகவும் முன்னேறிச் சிறந்த நிலையில் இருந்தன. இப்படியான வேலைகளுக்கு மரமே அதிகமாக உபயோகிக்கப்பட்டது. மரஞ் செதுக்கும் வேலையில் உடரட்டையில் இருந்தோர் மிகவும் பிரக்கியாதி அடைந்திருந்தனர். எம்பெக்க தேவாலயத்தில் இப்போதும் காணப்படும் மரத்தூண்கள் பழைய கண்டி நாட்டுச் சித்திரவினைஞரின் கைத்திறனை உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காட்டுகின்றன. அவற்றில் உள்ள வேலைப்பாடமைந்த சித்திரங்கள் எவர் மனத்தையும் கொள்ளைகொள்ளும். கண்டி தலதா மாளிகையின் மகாநூல்நிலையத்துள்ள ஓலைச் சுவடிகளின் அட்டைகளிற் செய்யப்பட்டுள்ள வேலைப்பாடுகளும் பிரமிக்கத்தக்கவை. இலண்டனிலே கென்ஸிங்டன் நூதனசாலை என ஓர் நிலையம் உண்டு. அங்கே உள்ள அரும்பொருள்களில் பழைய கண்டி அகப்பையும் ஒன்று: அவ்வகப்பை சிரட்டையாலானது அகப்பைக் காம்பு தந்தத்தினாலானது. இது ஒருவன் அகப்பையைப் பிடிக்கும் பாவனையில் செதுக்கப்பட்டிருக்கிறது. மரவேலையை விட தங்கம், வெள்ளி, பித்தளை ஆதியாம் உலோக வேலைகளிலும் புராதன கண்டியர் வல்லுநராயிருந்தனர். அவர்கள் தமது அலங்காரச் சித்திர வேலைகட்கு இயற்கைக் காட்சிகளை (உதாரணமாக; பூ வேலைப்பாடு) அல்லது பழைய ஐதிகங்களில் உள்ள விஷயங்களை எடுத்தாண்டனர். அன்னம், கிந்துர, நரிலதா, மகரம், எற்கந்த விகினியப் பறவை என்பவற்றின் சித்திரங்கள் அலங்கார வேலைகளுக்குக் கையாளப்பட்டன. நாகலோக மரமான கடுவுல், தேவலோக மரமான பாரிசாதம் என்பன கண்டிச் சித்திரத்திற் பொதுவாகக் காணப்படுகின்றன.

கண்டி நாட்டுக் கோயில்கள், ஆஸ்தானமண்டபங்கள் என்னும் இன்னோரன்னவற்றை மரத்தினாலேயே பெரிதும் நிர்மாணித்தனர். இக்கட்டிடங்களின் கூரைகள் அழகானவை. தலதா மாளிகையின் அட்டகோணத்துக் கூரை, கண்டி ஆஸ்தான மண்டபத்தின் கூரை என்பன எவ்வளவு அழகு வாய்ந்து அவற்றிற்குப் பின்னணியாக வமைந்துள்ள காடுகளுக்கு மிகப் பொருத்தமுடையனவாக இருக்கின்றன.

கண்டி ஓவியக்கலை அதற்கேயுரியதான ஓர் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்தது. இலங்காதிலக்க விகாரை, கனேகொட விகாரை போன்ற விகாரைகளின் மச்சுகளில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் இன்னும் இணையற்று விளங்குவன. அநேக கோவில்களில் இருந்த ஓவியங்கள் ஓர் கதையைத் தொடர்பாக விளக்குவது போலத் தீட்டப்பட்டிருந்தன. அதாவது கல்வி வாசனையற்றவர்களுக்குக் கதைச் சித்திரங்கள் மூலமாக நல்வினை தீவினை செய்வதால் அடையும் பயனை விளக்குவதையே அக்கால ஓவியர் நோக்கமாகக் கொண்டிருந்தனர் எனலாம். இத்தகைய ஓவியங்களில் தம்புல்ல, தெகல்தொறுவ என்னும் இடங்களில் உள்ளவை குறிப்பிடத்தக்கவை.

உடரட்டையைப் பரிபாலித்த ஒருசில மன்னர்களைப் பற்றி இனிச் சிறிது ஆராய்வாம்! இவர்களில் பராக்கிரமம் வாய்ந்த ஒருவன் விமலதர்மசூரியன் என்பவன். இவனது முதற் பெயர் டோன் ஜுவான் கோனப்பு பண்டாரன். ஆனால் அரசனாக வந்ததும் அவன் தான் அநுட்டித்து வந்த கிறிஸ்தவ மதத்தைப் புறக்கணித்து பௌத்தனாகி இப்பெயரைக் கொண்டான். அவன் ஓர் மகாவீரன். டி. சௌஸா, அஸவெடோ என்னும் போர்த்துக்கீச வீரர்

களை வென்றவன் அவனே. போர்த்துக்கீசரை இலங்கையில் இருந்து கலைப்பதற்கு டச்சுக்காரரது படைத்துணை இன்றியமையாதது என்று கண்டே அவன் ஸ்பில்பேர்கன், டிவேர்ட் முதலிய டச்சுக்காரரைக் கண்டிக்கு வரவழைத்தான். ஆனால் டிவேர்ட் கொலை செய்யப்பட்டதால் அரசனுக்கும் டச்சுக்காரருக்குமிடையே நேசபான்மை வளரவில்லை.

விமலதர்மன் டோனு கதேறினவை மணமுடித்திருந்தான். அவன் இறக்க அவனுக்குப்பின் அரசனாகிய சேனரதன் விதவையான அவளை மணந்தான். டிஸா என்னும் போர்த்துக்கீச வீரன் தோல்வியுற்று இறந்த பின் அவனுடன் சென்ற வீரர்கள் சிறையாக்கப்பட்டனர். அவர்களில் ஒரு போர்த்துக்கீசன் எழுதியுள்ள நூல் ஒன்றில் டோனு கதெறினவைப் பற்றியும் சேனரதனைப் பற்றியும் சில குறிப்புகள் காணப்படுகின்றன. "அரசன் சாந்த குணமுள்ளவன்; நூல்களிலும் இலக்கிய ஆராய்ச்சியிலும் நாட்டமுடையவன்; அவன் அநேக பாஷைகள் கற்றுத் தேர்ந்தவன்; போர்த்துக்கீச பாஷையைத் திருத்தமாக அழகாகப் பேசினான்; அத்துடன் ஏழைகள் பால் அநுதாபம் கொண்டவன்" என்னும் கருத்துப்பட அப்போர்த்துக்கீச வீரன் தனது நூலில் எழுதியுள்ளான்; டோனு கதெறினவைப் பற்றி அவன் எழுதியது வருமாறு;– "அவள் அழகி; அத்துடன் மடம் என்னும் பெண்களுக்குரிய குணத்தை அணிகலனாகக் கொண்டிருந்தாள். அவளின் குணமும் அழகும் கண்டோர் மனத்தை ஈர்த்தன. அவள் மிக்க அலாதியாகக் கவிதை புனைவாள்; எனவே அக்கவிதைகள்பால் என் மனம் மிகவும் இலயித்தது"

சேனரதனுக்குப் பின் இரண்டாவது இராஜசிங்கன் அரசனுனன். அவன் டச்சுக்காரருடன் ஓர் உடன்படிக்கை செய்து இலங்கையில் போர்த்துக்கீசரது ஆட்சிக்கு முடிவு தேடினுன். ஆனுல் போர்த்துக்கீசர் கலேக்கப்பட்டாலும் அந்நியர்களான அவர்களின் இடத்துக்கு இன்னுேர் அந்நிய சாகியத்தாரான டச்சுக்காரர் வந்துவிட்டனர்; அதனுல் தனது நிலைமை திருந்தவில்லை என்பதை அவன் பின்னர் உணர்ந்தான். இரண்டாவது இராஜசிங்கனும், சேனரதனைப் போல போர்த்துக்கீச பாஷையிலும் லத்தீன் பாஷையிலும் பரிச்சயமுடையவனுக இருந்தான். இப்பாஷைகளைத் தனக்குப் பயிற்ற ஓர் பிரான்சிஸ்க சபைக் குருவானவரைத் தனது ஆசிரியராக வைத்திருந்தான். இராஜசிங்கனுக்கும் டச்சுக்காரருக்கும் அடிக்கடி பிணக்கு உண்டாயது. போர்த்துக்கீசரைக் கலைத்துவிட்டு, அவர்களுக்கிருந்த பகுதிகளை டச்சுக்காரர் தனக்குத் தந்துவிடுவர் என இராஜசிங்கன் ஆரம்பத்தில் நினைத்தான். ஆனுல் டச்சுக்காரர் அவ்வாறு செய்யாது அப்பகுதிகளைத் தாமே சுவீகரித்துவிட்டதால் அவர்கள் தம்மை ஏமாற்றிவிட்டதாக அவன் கருதி ஆத்திரம் கொண்டான். ஆனுல் டச்சுக்காரர் போர்த்துக்கீசரைக் கலைத்தது இராஜசிங்கன் மீது கொண்டிருந்த அபிமானத்தால் அன்று. இலங்கையிலே தமது ஆதிக்கத்தைச் செலுத்தவே அவ்வாறு செய்தனர்.

இராஜசிங்கன் டச்சுக்காரருக்கு எழுதிய பல கடிதங்கள் மூலமாகவும், நொக்ஸ் என்னும் ஆங்கிலேயர் அவனைப்பற்றி எழுதியுள்ள விபரத்தாலும் அவனைப் பற்றி நாம் அறியமுடிகிறது. கண்டி இராச்சியத்தில் நொக்ஸ் பலகாலமாகச் சிறையாளன் போல வசித்தவன்.

இராஜசிங்கன் கிழவனாக இருந்தபோது நொக்ஸ் அவனைப் பன்முறை கண்டிருக்கிறான்.

1747-ம் ஆண்டு தொடக்கம் 1782-ம் ஆண்டுவரை பரிபாலித்த கீர்த்திஸ்ரீ என்பவன் கண்டி மன்னர்களில் பிரக்கியாதி பெற்றவன். அவன் விமலதர்மனைப் போல பௌத்த சமயத்தில் அதிபக்தி கொண்டு பர்மா, சீயம் முதலாம் நாடுகளில் இருந்து பௌத்த பிக்குகளை வரவழைத்து பௌத்த சங்கத்தை நல்ல முறையில் புனருத்தாரணம் செய்தவன். இவனுடைய பரிபாலன காலத்தில்தான் வெலிவித்த சரணங்கர என்னும் பிரபல பௌத்த மத குரவர் வாழ்ந்து பௌத்த மதப் புனருத்தாரணத்துக்கு அரும்பணி யாற்றினார். கண்டியில் உள்ள தலதா மாளிகையைப் புனருத்தாரணம் செய்தவனும் கீர்த்திஸ்ரீயே.

கண்டியைக் கடைசியாகப் பரிபாலித்தவன் நாயக்கர் வம்சத்து ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் என்பவன். 1815-ம் ஆண்டில் ஆங்கிலேயர் அவனைச் சிறை செய்ததுடன் கந்த உடரட்டை என வழங்கப்பட்டுவந்த கண்டி இராச்சியமும் ஒழிந்தது.

வினாக்கள்

1. கண்டி இராச்சியத்தின் படம் ஒன்றை வரைந்து அதிலே மகாநுவரை, அலுத்நுவரை, வதுளை, வலனே, கலகெதரை, மாத்தளை, மெதமகாநுவரை என்பவற்றைக் குறிக்க.

2. கண்டிச்சித்திரக் கைத்தொழில்களைக் காட்டும் விளக்கப்படம் ஒன்று வரைக.

3 கொழும்பில் அல்லது கண்டியில் உள்ள நூதன சாலைக்குப் போய், அங்குள்ள பொருள்களில் எவை எவை கண்டி இராச்சியத்துடன் தொடர்புற்றவை என்பதனை விளக்கி எழுதுக.

4-ம் அதிகாரம்

டச்சுக் குடியரசின் எழுச்சி.

ஐரோப்பாவில் இருந்த நெதர்லாந்து இராச்சியம் ஒரு காலத்தில் பராக்கிரமம் வாய்ந்த ஸ்பானிய சக்கராதிபத்தியத்தின் ஓர் பகுதியாக இருந்தது. அரகன் நாட்டு பேர்டினன்ட் அரசனதும் காஸ்ரீல் நாட்டு இஸபெலா அரசியதும் பரிபாலனத்தில் ஸ்பெயின் ஒப்பும் மிக்கும் இல்லாத வலிய ஏகாதிபத்தியமானது. காலகதியில் இவர்களின் பௌத்திரனான 5-வது சார்ல்ஸ் இச்சக்கராதிபத்தியத்துக்கு அதிபதியானான். அவன் ஸ்பெயினுக்கு மாத்திரமன்றி நெதர்லாந்துக்கும் ஆஸ்திரிய சக்கராதிபத்தியத்துக்கும் தலைவனாயினான். இப்போது நாம் ஜெர்மனி என்று அழைக்கும் பிரதேசத்தைக் கொண்ட பரிசுத்த உரோம சக்கராதிபத்தியத்துக்கும் அவனே சக்கரவர்த்தியானான்.

நெதர்லாந்தில் வாழ்ந்த தன் பிரசைகள்பால் 5 வது சார்ல்ஸ் அன்புபாராட்டி அவர்களை நீதியாகநடத்தினான். ஆனால் அவனுக்குப் பின் சக்கரவர்த்தியான அவனுடைய மகன் இரண்டாவது பிலிப்பு நெதர்லாந்து மக்களை மிகவும் கொடுமைப் படுத்தினான். எனவே அவர்கள் அவனுக்கு விரோதமாகக் கிளம்பிக் கலகம் செய்தனர். இக்கலகத்துக்குப் பிலிப்புவின் கொடுங்கோன்மையைவிட வேறு காரணங்களும் இருந்தன; பிலிப்பு மத வைராக்கியம் கொண்ட ஓர் கத்தோலிக்கன்; கத்தோலிக்கர் அல்லாதவர்கள்பால் அவன் குரோதம் கொண்டிருந்தான். தான் சக்கரவர்த்தியானபடியால் தான் சொல்லுகிறபடி தன் பிரசைகளான நெதர்லாந்து வாசிகள் மதம் மாறிக் கத்

தோலிக்கராக வேண்டும் என்று அவன் பேய்த்தனமாக நினைத்து அவ்வாறே அவர்களை மதம் மாற்றுவதற்குப் பல கொடிய நடவடிக்கைகளைக் கையாண்டான். இப்படியாக அவன் கொடிய முறைகளைக் கையாள நெதர்லாந்து வாசிகளும் அவனை அதிகமதிகமாக வெறுத்தனர். நெதர்லாந்து தேசத்து வட பகுதியில் இருந்தவர்கள் புரொட்டெஸ்தாந்தர். அவர்கள் கத்தோலிக்க திருச்சபையினையோ அதன் தலைவராகிய பாப்பரசரையோ ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

கத்தோலிக்க திருச் சபைக்கு விரோதமான கிளர்ச்சி ஜெர்மனியிலே மார்ட்டின் லூதர்[1] என்பவரால் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது. பிரான்சிலே ஜோன் கல்வின் என்பவர் உரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து வந்தார். ஆனால் பிரான்சிய அரசாங்கம் அவரைத் தேசத்திலிருந்து துரத்திவிட அவர் சுவிற்ஸர்லாந்துக்குப் போய் அங்கே கத்தோலிக்க மத கண்டனத்தில் வெகு மும்முரமாக ஈடுபட்டார். வெகு சீக்கிரத்தில் அவருடைய போதனைகளைப் பல்லாயிரவர் கேட்டு அவரின் சீடராயினர். நெதர்லாந்தின் வட பகுதியில் இருந்தவர்களும் கல்வினின் கொள்கைகளைக் கேட்டு அவற்றைப் பின்பற்றினர். வட நெதர்லாந்துப் பிரதேசங்கள் ஒல்லாந்து எனச் சாதாரணமாக வழங்கப்பட்டன. கல்வின் கொள்கைகளைப் பின்பற்றுவோரை இரண்டாவது பிலிப்பு வெறுத்து அவர்களைக் கொடுமைப்படுத்தியபடியால் அவனை ஒல்லாந்தில் இருந்த டச்சுக்காரர் வெறுத்தனர்.

---

1. Martin Luther 2. John Calvin

நெதர்லாந்தில் அநேக பெரும் பட்டினங்கள் இருந்தன. அங்கே பலவினைஞர் வாழ்ந்து அருந் தொழில்கள் பல ஆற்றினர். இன்னும், அந்நாட்டு மக்கள் பெரும் வியாபாரத் தொழில்களிலும் ஈடுபட்டுப் பாரிய செல்வராக இருந்தனர். இரண்டாவது பிலிப்பு தன் பணஆசையைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு இவர்கள் மீது அதிக வரிகளை விதித்தான். இதனாலும் நெதர்லாந்து வாசிகள் அவனை வெறுத்தனர்.

நெதர்லாந்துத் தேசத்தைப் பரிபாலிப்பதில் தனக்கு உதவி செய்ய 5 வது சார்ல்ஸ் அத்தேசப் பிரபுக்களையே அதிகாரிகளாக நியமித்தான். ஆனால் இரண்டாவது பிலிப்பு இந்த முறையினைக் கைவிட்டு ஸ்பெயினில் இருந்தே தேசாதிபதிகளை நெதர்லாந்துக்கு அனுப்பி வந்தான். இதுவும் நெதர்லாந்து மக்களுக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது.

இப்படியான காரணங்கள் எல்லாம் சேர்ந்து, நெதர்லாந்து மக்களை பிலிப்புக்கு விரோதமாகக் கலகம் செய்யத் தூண்டின. கலகம் செய்த நெதர்லாந்து மக்களும் ஸ்பானியரும் கலகத்தின் போது ஈவிரக்கமற்ற செயல்கள் பலவற்றைப் புரிந்தனர். ஆனால் ஸ்பானியரே அதி அக்கிரமங்களைப் புரிந்தனர் என்பதற்குச் சந்தேகம் இல்லை. வடக்கே டச்சுக்காரர் ஸ்பானியருக்கு விரோதமாக மிகவும் தீரத்துடன் போர் புரிந்தனர். லெயிடன் பட்டினத்தை ஸ்பானியர் முற்றுகையிட்டு அங்கிருந்தோரை உணவுப் பஞ்சத்தால் வாடச் செய்தபோது டச்சுக்காரர் வரம்புகளை உடைத்து, கடல் நீரை உள்ளுக்கு வரச் செய்து தாழ்ந்த பூமிகளைக் கடல் மயமாக்கி விட்டனர். இதன் பின்னர் டச்சுக் கப்பல்கள் லெயிடனு

க்கு உணவினைக் கொண்டுவந்து உதவின. ஒல்லாந்தில் இருந்த ஸ்பானியச் சேனுவீரருக்கு ஒழுங்கான சம்பளமும் உணவும் கிடைக்கவில்லை. எனவே அவர்கள் 1579-ம் ஆண்டில் அன்றவேர்ப் என்ற பெரிய நகரத்தையும் வேறும் சில சிறு பட்டினங்களையும் சூறையாடினர். இவை எல்லாம் நெதர்லாந்து மக்களுக்குச் சொல்லொணுக் கவலையையும் துன்பத்தையும் கொடுத்தன. இவற்ருல் பிலிப்புக்குத்தான் ஏதும் இலாபம் கிடைத்ததோவென்ருல் அதுவும் இல்லை. நேர்மாருக ஒல்லாந்து மக்களின் குரோதத்தைச் சம்பாதித்தது தான்கைமேற்பயன். 1579-ம் ஆண்டில், இப்போது பெல்ஜியம் என வழங்கப்படும் தென் நெதர்லாந்துப் பிரதேசம் ஸ்பெயினுடன் சமாதானம் செய்து கொண்டது. அங்கு வாழ்ந்து வந்தவர்கள் கத்தோலிக்கர். அவர்கள் கல்வின் கொள்கைகளைக் கொண்ட வடக்கு மக்களை அதிகம் விரும்பவில்லை. இன்னும், தென் பகுதியில் உள்ளார் பிரான்சிய மொழியைப் பேசினர்; வடபகுதியிலிருந்தோர் டச்சு மொழியைத் தம் தாய் மொழியாகக் கொண்டிருந்தனர். இப்படியான பேதங்களால் வடபகுதியினரும் தென்பகுதியினரும் ஒற்றுமை கொண்டு பொதுச் சத்துருவாகிய ஸ்பானியருக்கு விரோதமாகப் போரிட முடியவில்லை. பிலிப்பு இதற்கிடையில் தென் பகுதியினருக்குச் சுதந்திரம் வழங்குவதாக வாக்குறுதி செய்யவே அவர்கள் அவனுடன் சமாதானம் செய்து கொண்டனர்.

மௌனி வில்லியம் எனவும் வழங்கப்பட்ட ஆரஞ்சி வம்ச வில்லியம் 1 என்ற இளவரசனின் தலைமையில், வடபகுதி

1. William of Orange or William the Silent

யினர் ஸ்பெயினுக்கு அடங்காது கலகம் செய்து போர் செய்தனர். வில்லியம் சிறந்த அரசியல்வாதி; தக்க நுண்ணறிவாளன்; துணிகரம் மிக்கவன். தோல்வி தான் ஏற்பட்டபோதும் வெற்றி நமதே என்று கடைசி வரை எடுத்த கருமத்தைச் சாதிக்கும் பெற்றியன். இத் தகைய குணாளனை பிலிப்பு ஏவிவிட்ட ஒருவன் 1584-ம் ஆண்டில் சதி செய்து கொன்றுவிட்டான். வில்லியம் இறந்தாலும் அவன் ஆரம்பித்த பணியை அவனுடைய மகனான நாஸோவின் மோரிஸ் [1] என்பவன் தொடர்ந்து நடாத்தினன். டச்சுக்காரருக்கு இங்கிலாந்தும் நேசபான்மை காட்டி உதவி அளிக்கிறதென்பதை யறிந்து ஆத்திரம் கொண்ட பிலிப்பு 1588-ம் ஆண்டில் இங்கிலாந்துக்கு விரோதமாக ஆர்மடா [2] என்னும் பாரிய கடற்படையை அனுப்பினன். இப்படையை ஆங்கிலக் கடல் வீரர் சின்னபின்னப்படுத்திவிட, அன்றிருந்து ஸ்பெயின் கடல் வல்லரசு என்ற கௌரவத்தை இழந்து விட்டது. அது இதுவரை கொண்டிருந்த கடல் ஆதிக்கத்தை இங்கிலாந்தும் ஒல்லாந்தும் பெற்றன. அக்காலத்திருந்த டச்சு மாலுமிகள் உலகிற் சிறந்த கடலோடிகளாய் விளங்கி மெல்ல மெல்லவாக உறுதியான ஓர் கடற்படையை ஆக்கிக் காலகதியில் ஸ்பெயினின் வர்த்தகத்தை நாசம் செய்தனர். 1609-ம் ஆண்டில் ஒல்லாந்துக்கும் ஸ்பெயினுக்குமிடையே ஓர் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. 1648-ம் ஆண்டில் ஒல்லாந்து ஸ்பெயினின் அதிகாரத்திலிருந்தும் விலகி சுதந்திரக் குடியரசானது. ஒல்லாந்து சின்னஞ்சிறு தேசம்தான்; அப்படியிருந்தும் அதன் மக்கள் கருமமே கண்ணாகவிருந்து உறுதியாகப்

1. Maurice of Nassau 2. Armada

போராடியபடியால் தம்மை வருத்திய ஸ்பெயினின் கொடுங்கோலாட்சியிலிருந்தும் விடுதலை பெற்றனர்.

1600-ம் ஆண்டு தொடக்கம் 1700-ம் ஆண்டு ஈறுக வுள்ள நூற்றுண்டு காலத்தை டச்சுச் சரித்திரத்தின் பொற்காலம் என்று கூறலாம். ஒல்லாந்து நாட்டின் கப் பல்கள் சப்தசமுத்திரங்களிலும் சஞ்சரித்து உலகின் பல பாகங்களில் டச்சுக் குடியிருப்புக்களைத் தாபிக்க உதவின. அக்காலத்தில் பல இலக்கிய விற்பன்னர்க ளும் தோன்றி டச்சு இலக்கியத்துக்குப் புத்துயிர் கொடு த்ததுடன் மங்காப் புகழ்படைத்த பல இலக்கிய நூல்க ளையும் நவமாக இயற்றினர். குரோஷஸ் [1], ஹெயிகெ ன்ஸ் [2], டெஸ்காட்டெஸ் [3] என்பவர்கள் மகத்தான சட்ட நூல்களையும், விஞ்ஞான நூல்களையும், ஞான நூல்களையும் தொகுத்து இத்துறைகளில் டச்சுக்கார ரின் கீர்த்தியை மேலோங்கச் செய்தனர். உலகப் பிரசி த்தி பெற்ற ஓவியர்களும் ஒல்லாந்தில் தோன்றி அக்கலை க்குப் பெரும் பணியாற்றினர். றெம்பிறாண்ட் [4], பிரா ன்ஸ் ஹல்ஸ் [5], வன் கோயன் [6], ஹொபமா [7] என்பவர் கள் இத்தகையோரிற் சிலர்.

குடியேற்ற நாட்டுச் சக்கராதிபத்தியத்தை டச்சுக் காரர் எவ்வாறு தாபித்தனர் என்பதை இனி ஆராய் வாம். 1588-ம் ஆண்டளவில் அம்ஸ்ரர்டாம் துறை முகம் மிகப் பிரசித்தியடைந்திருந்த தென்றும் மூன்று நாட்களுக்கிடையில் 800 தொடக்கம் 900 கப்பல்கள் அத் துறைமுகத்துக்குச் சென்றன என்றும் சரித்திர வாயி

---

1. Grotius 2. Huyghens 3. Des Cartes
4. Rembrandt 5. Frans Hals 6. Van Goyen
7. Hobbema.

லாக அறிந்திருக்கிறோம். கிழக்குப் பிரதேசங்களுடன் வியாபாரம் நடத்துவதற்காகப் பல வர்த்தகக் கொம்பனிகள் தாபிக்கப்பட்டன. இவை ஆண்டுதோறும் தம் கப்பல்களைக் கிழக்கு நாடுகளுக்கு அனுப்பி வந்தன. இப்படியான கிழக்குப்பிரதேச வர்த்தகத்தால் இக்கொம்பனிகளுக்குப் பெரும் இலாபம் கிடைத்தது. டச்சுக் கிழக்கிந்தியக் கொம்பனி என்ற பெயருடன் ஓர் கொம்பனியை ஆரம்பிக்க டச்சுக் குடியரசின் தலைவன் 1601-ம் ஆண்டில் ஓர் அதிகாரத்தை வழங்கினான். இக்கொம்பனியிலே குடியரசின் 17 பிரதேசங்களுக்கும் ஒவ்வோர் பிரதிநிதியாக 17 அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் அதிகார சபை இருந்தது. கொம்பனிக்கு டச்சு அரசாங்கம் 25,000 பவுண்களையும் மானியமாக வழங்கியது. அத்துடன் கொம்பனி டச்சு அரசாங்கத்துக்கு அடங்கி நடக்கும் வரையில் அதுதன் சொந்தப் பொறுப்பில் சேனைகள் திரட்டவும் கோட்டை கொத்தளங்கள் கட்டவும் ஏனைய தேசங்களுடன் உடன்படிக்கைகள் செய்யவும் அதிகாரமும் வழங்கப்பட்டது. 1602-ம் ஆண்டில் கொம்பனி ஓர் கப்பற் படையைக் கிழக்குப் பிரதேசங்களுக்கு வார்வைக்[1] என்பவனின் தலைமையில் அனுப்பியது. வார்வைக்கின் உபதளபதிதான் டிவேர்ட் என்பவன். இவன் இலங்கைக்கு விஜயம் செய்து கண்டியில் மரணமானதை இதற்கு முந்திய அதிகாரங்களில் நீங்கள் படித்திருப்பீர்கள். டச்சுக் கடற்படையின் பிரதான பகுதி ஜாவாவுக்குப் போய் பாந்தம் என்னும் இடத்தில் ஓர் வர்த்தகத் தானத்தை ஏற்படுத்தியது. அத்துடன் அது சீயம், சீனம் என்னும் தேசங்களுக்கும் விஜயம் செய்து பெரும் வியாபாரம்

---

1. Waerwyck

செய்து வெற்றியுடன் ஒல்லாந்துக்கு மீண்டது. 1604-ம் ஆண்டில் இன்னோர் கப்பற்படை வன் டெர் ஹாஹென்[1] என்பவனின் தலைமையில் மொலுக்காவையும் ரைடர் தீவையும் கைப்பற்றியது. அம்போயினாவில் அது ஓர் தொழிற்சாலையையும் தாபித்தது.

இவ்வாறாக டச்சுக்காரர் கடல் வர்த்தகத்தில் ஈடுபட்டுக் கீழ்நாடுகளுக்குச் செல்வதைப் போர்த்துக்கீசர் கொஞ்சமும் விரும்பவில்லை. டச்சுக்காரரின் செல்வாக்கு அபிவிருத்தியாவதைத் தடுக்க போர்த்துக்கீசர் தம்மாலான முயற்சிகள் யாவற்றையும் செய்தனர். ஆனால் டச்சுக்காரரின் கடல் வலிமை அதிகமாயிருந்தபடியால் போர்த்துக்கீசரின் முயற்சிகள் பலிக்கவில்லை. 1606-ம் ஆண்டில் மலாக்காவுக்குச் சமீபமாக ஓர் கடல் யுத்தம் போர்த்துக்கீசருக்கும் டச்சுக்காரருக்குமிடையே நிகழ்ந்தது. இதில் டச்சுக் கடற்படைத் தளபதியான மற்றலீவ்[2] என்பவன் போர்த்துக்கீச கடற்படையை முறியடித்தான். அடுத்த ஆண்டில் ஜிப்ரால்ற்றருக்கப்பால் நிகழ்ந்த இன்னோர் கடல் யுத்தத்திலும் போர்த்துக்கீச கடற்படை டச்சுக் கடற்படையால் முறியடிக்கப்பட்டது. இந்த இரண்டு தோல்விகளாலும் போர்த்துக்கீசரின் கடலாதிக்கம் சிதறுண்டு போக டச்சுக்காரரே கிழக்குப் பிரதேசச் சமுத்திரங்களில் சர்வாதிகாரம் செலுத்தினர்.

இதன் பின் டச்சுக்காரர் கிழக்கே தமக்கிருந்த பிரதேசங்களைத் தக்கவாறு அமைத்து, வியாபாரத்தையும் செவ்வனே நடாத்துதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். கொம்பனியின் பிரதேசங்களையும் வர்த்தகத்தை

---

1. Van der Hagen 2. Mataleef

யும் கண்காணித்து வருவதற்காக ஓர் மகா தேசாதிபதி 5 வருஷங்களுக்கொரு முறை நியமிக்கப்பட்டான். இவன் கீழ் ஏழு தேசாதிபதிகள் இருந்தனர். முதலில் மகா தேசாதிபதியின் தலைமைக்காரியாலயம் பாந்தம் என்னும் இடத்தில் இருந்தது. பின்னர் அது பற்றேவியாவுக்கு மாற்றப்பட்டது

டச்சுக்காரரின் சிறந்த மகாதேசாதிபதிகளில் **கூன்** 1 என்பவன் (*1614*) ஒருவன். இவன் 1620-ம் ஆண்டில் ஜாவாவைக் கைப்பற்றி பற்றேவியாவில் கொம்பனியின் தலைமைக் காரியாலயத்தை அமைத்தான். அவனே, கராம்பு, மிளகு, ஏலம் முதலாம் வாசனைத் திரவியங்களை விளைவிக்கக் கட்டளையிட்டு கிழக்கு நாடுகளில் முதன் முதலாகத் தோட்டங்களைத் திறந்தவன். ரெர்ணேற், ரைடர், அம்போயினு, பண்டாத் தீவுகள் என்னும் இடங்களில் தொழிற்சாலைகளைத் தாபித்தவனும் அவனே.

பீற்றர் கார்ப்பென்ரியர் 2 (*1623*) என்பவன் இன்னோர் பிரபல மகாதேசாதிபதியாவான். இவனும் கொம்பனியின் வர்த்தகத்தை வெகுவாக அபிவிருத்தி செய்ததுடன் ஜப்பானுடன் வியாபாரம் செய்யும் ஏகபோக உரிமையினையும் கொம்பனிக்குப் பெற்றுக்கொடுத்தான். போர்மோஸாத் தீவையும் அவன் கைப்பற்றினுன். அவன் ஊக்கப்படுத்திய ஆராய்ச்சி யாத்திரைகளின் பயனுகவே நியூகினியா என்னும் பரந்த தீவும் டச்சுக்காரரால் கண்டுபிடிக்கப்பட்டது.

டச்சு மகாதேசாதிபதிகளில் அதிபிரக்கியாதி வாய்ந்தவன் **அந்தோனி வன் டீமன்** 3 (*1636—1645*) எனலாம்.

---

1. Koen 2. Pieter Carpentier 3. Anthony Van Dieman

அவன் டச்சு வர்த்தகத்தை அபிவிருத்தி செய்ததுடன் புதுப் புதுப் பிரதேசங்களைக் கண்டு பிடிப்பதற்கான ஆராய்ச்சிப் பிரயாணங்களையும் ஊக்கினான். ஏபல் தஸ்மன் [1] என்பவன் தஸ்மானியா என்னும் தீவைக் கண்டுபிடித்தான். இவனுடைய காலத்தில் ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரைப் பகுதியும் தென் கரைப் பகுதியும் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றுக்கு நியூ ஒல்லாந்து (நவ ஒல்லாந்து) எனப் பெயரிடப்பட்டது. நியூஸீலந்துத் தீவுகளும் கண்டுபிடிக்கப்பட்டு ஒல்லாந்தில் உள்ள ஸீலந்துப் பகுதியின் பெயர் வழங்கப்பட்டது. டீமனின் காலத்தில்தான் டச்சுக்காரர் இலங்கையிலும் இடம் கோலினர்.

கிழக்குக் கடல்களில் சஞ்சரிக்கும் டச்சுக் கப்பல்கள் நன்னம்பிக்கை முனையில் எப்போதும் தங்குவது வழக்கமாக இருந்தது. 1652-ம் ஆண்டிலே ரிபெக் [2] என்பவனின் தலைமையில் நன்னம்பிக்கை முனையில் டச்சுக்காரர் குடியேறத் தொடங்கினர். இதன் பயனாக தென் ஆபிரிக்காவில் டச்சுக்காரரின் அதிகாரத்துக்கு அத்திவாரம் இடப்படலாயிற்று. நன்னம்பிக்கை முனையில் இருந்து புறப்படும் டச்சுக் கப்பல்கள் மொறிஷியஸ் தீவை அடைந்தன. இத்தீவினையும் டச்சுக்காரர் கைப்பற்றினர். மொறிஷியஸ் தீவிலிருந்து தென் மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றுடன் டச்சுக்கப்பல்கள் புறப்பட்டு இலங்கைக்கும் அங்கிருந்து கிழக்குப் பக்கமாக ஜாவாவுக்கும் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் சென்றன.

---

1. Abel Tasman 2. Ribeck

வினாக்கள்

1. பின்வருவோரைப் பற்றிக் குறிப்புக்கள் எழுதுக: மௌனி வில்லியம்; றெம்பிரான்ட்; குரோஷஸ்; கூன்: வன் டீமன்.

2. டச்சுக்காரர் ஸ்பானியரிடம் இருந்து அரசியற் சுதந்திரம் அடைந்தமையைச் சுருக்கமாகக் கூறுக.

3. போர்த்துக்கீசரை டச்சுக்காரர் எவ்வாறு வெற்றி கொண்டார்கள்?

5-ம் அதிகாரம்

இலங்கையில் டச்சுக்காரர்

1601-ம் ஆண்டிலும் 1602-ம் ஆண்டிலும் டச்சு அதிகாரிகள் சிலர் இலங்கைக்கு விஜயம் செய்ததை நீங்கள் இந்நூலில் ஏற்கெனவே படித்திருக்கிறீர்கள். 1601-ம் ஆண்டில் ஸ்பில்பேர்கன் என்பவன் முதலாவது விமல தர்மனிடம் வந்தான். அடுத்த ஆண்டில் டிவேர்ட் என்பவன் வந்து, சிங்கள மன்னனுடன் பிணக்குப்பட்டு மரணமடைந்தான். 1638-ம் ஆண்டில் இரண்டாவது இராஜசிங்கன் அரசனாக இருந்தபோது டச்சுக்காரர் அவனுடன் ஓர் உடன்படிக்கை செய்து போர்த்துக்கீசரை இலங்கையில் இருந்து கலைக்கும் யுத்தத்தில் மும்முரமாக ஈடுபட்டனர். இதன் பயனாக 1658-ம் ஆண்டில் போர்த்துக்கீசரின் ஆட்சி இலங்கையில் முடிவெய்த, அவர்கள் இங்குக் கொண்டிருந்த பிரதேசங்களை டச்சுக்காரர் தம்தாக்கினர். அப்பிரதேசங்கள் எவை என்பது அடுத்த பக்கத்தில் உள்ள படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

போர்த்துக்கீசரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தனது பிரதேசங்களை டச்சுக்காரர் இவ்வாறு சுவீகரித்துத் தமதாக்கிவிடுவர் என இரண்டாவது இராஜசிங்கன் காத்திருக்கவில்லை. தாம் வெற்றிகொண்ட அப்பகுதிகளை இராஜசிங்கனிடம் ஒப்புவிப்பதும் டச்சுக்காரர் நோக்கமாயிருக்கவில்லை. இதன் பயனாகக் கண்டியரசனுக்கும் டச்சுக்காரருக்குமிடையே பிணக்கு ஏற்பட்டது. வாக்குறுதியை மீறிவிட்டதாக அவ்விரு பகுதியின



டச்சுப்பிரதேசங்களையும் கண்டி இராச்சியத்தையும்
காட்டும் இலங்கைப் படம்.

ரும் ஒருவரையொருவர் குற்றஞ் சாட்டினர். போர்த்துக்கீசருடன் தாம் செய்த யுத்தச் செலவை இராஜசிங்கன் கொடுக்கவில்லை; ஆனபடியால்தான் போர்த்துக்கீசரிடம் இருந்து கைப்பற்றிய பிரதேசங்களைத் தாம் அவனிடம் கையளிக்கவில்லை என டச்சுக்காரர் கூறினர். யுத்தச் செலவு எவ்வளவு என்பதற்கான கணக்கை டச்சுக்காரர் தனக்குக் கொடுக்கவில்லை, அதற்கிடையில் தாம் வெற்றி கொண்ட பிரதேசங்களில் இருந்து அரசிறையைத் திரட்டிவிட்டார்கள் என்று இராஜசிங்கன் எதிர்க் குற்றஞ்சாட்டினன். ஆனல் டச்சுக்காரர் தாம் கைப்பற்றிய பிரதேசங்களை இராஜசிங்கனுக்குக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்கவில்லை என்பதுதான் உண்மை. இதனை டச்சு மகாதேசாதிபதியாக இருந்தவன் டூமன் தெள்ளத்தெளிய வெளிப்படையாக எழுதிக் காட்டியிருக்கிறுன். "இலங்கையில் நாம் இப்போது பெற்றுள்ள உரிமைகளைக் கைவிடாது இருப்பதுடன் மூழு இலங்கையினையும் கைப்பற்றுவதுதான் எமது நோக்கம்" என அவன் எழுதியதில் இருந்து டச்சுக்காரரின் அந்தரங்க மனப்பான்மை என்னவென்பது விளங்கும். இப்படியாகத் தனக்கு ஏமாற்றம் கொடுத்த டச்சுக்காரருடன் போர் தொடுத்து அவர்களை இலங்கையில் இருந்து துரத்துவதற்கும் இராஜசிங்கனல் முடியாதிருந்தது. கண்டி இராச்சியத்துக்குள்ளேயே அவனுக்கு விரோதமாகக் கலகங்கள் கிளம்பின. 1664-ம் ஆண்டில் உடரட்டையில் ஓர் கலகம் கிளம்ப அதனை நிர்வகிக்கமாட்டாது அவன் ஹங்குராங்கெத்தைக்குக் கரந்தோடினன். அங்கிருந்து கொண்டு அவன் டச்சுக்காரரின் உதவியை நாடினன்.... இதுதான் வாய்த்த சமயம் எனக் கண்ட டச்சுக்காரர் நாலு கோறளைகளையும் சப்பிரகமுவவை

யும், திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களையும் கைப்பற்றினர். ஆனால் பல ஆண்டுகளுக்குப் பின், அதாவது 1677–ம் ஆண்டில் இப்பிரதேசங்களை மீண்டும் இராஜசிங்கனிடம் ஒப்படைத்தனர். அப்படியிருந்தும் அவனுக்கும் அவர்களுக்குமிடையே யிருந்த பிணக்கு ஒழியவில்லை. 1687–ம் ஆண்டு நொவம்பர் மாதம் 25-ம் திகதி இரண்டாவது இராஜசிங்கன் இறந்தான்.

இராஜசிங்கனுக்குப் பின் அவன் மகன் **இரண்டாவது விமலதர்மன்** அரசனானான். அவனும் தன் தந்தையைப் போல டச்சுக்காரரை வெறுத்தான். டச்சுக்காரர் தாம் கைப்பற்றிய பிரதேசங்களைக் கண்டி மன்னனுக்குக் கையளிக்க மறுத்தபடியால் பிணக்கு வளர்ந்துகொண்டே வந்தது. 1706-ம் ஆண்டில் **நரேந்திர சிங்கன்** என்பவன் அரசனானான். உடரட்டையை ஆண்ட சிங்கள வம்சத்துக் கடைசி மன்னன் அவனே. அவனுடைய காலத்தில் டச்சுப் பிரதேசங்களில் இருந்த கறுவா உரிப்போர் டச்சுக்காரருக்கு விரோதமாகக் கிளம்பிக் கலகம் செய்தனர். நரேந்திரசிங்கன் டச்சுக்காரரை அடக்க இதுதான் தக்க சந்தர்ப்பம் என எண்ணிக் கலகக்காரருக்கு உதவி செய்தான். இதன் பயனாக டச்சுக்காரர் தாம் முன்பு கைப்பற்றிய நாலு கோறளைகளையும் தற்காலிகமாக அவனுக்குக் கையளித்தனர். 1736–ம் ஆண்டு தேசாதிபதியாக வந்த **பரன் இம்ஹொவ்**[1] என்பவன் தாழ்ந்த பிரதேசங்களில் இருந்த கலகத்தைச் சமரசமாகத் தீர்த்து நரேந்திரசிங்கனுடனும் சமாதானத்தை ஏற்படுத்தினான். அந்தக் காலத்திலே டச்சுக் கிழக்கிந்தியக்

1. Baren Imhoff

கொம்பனியின் நிலையும் நல்லாயிருக்கவில்லை. உத்தியோகத்தரிடையே இலஞ்சம், தகாத தொழில்கள் என்பன நிலவின. இதன் காரணமாக கொம்பனிக்கு ஆதாயமே இல்லாது போயிற்று. இப்படியான சந்தர்ப்பத்திலே கண்டி இராச்சியத்துடன் போரிடுவது கொம்பனிக்கு மேலும் நட்டத்தை விளைப்பதாகும் என இம்ஹொவ் கருதியே அதனுடன் சமாதானத்தை விழைந்தான்.

நரேந்திர சிங்கன் இறக்க அவனுடைய மனைவியின் சகோதரன் கண்டி அரசனுனன். அவன் மதுரை நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த ஓர் தமிழ் இளவரசன் இவனுடைய காலத்தில் கண்டிப் படைகள் டச்சுப் பிரதேசங்களை அடிக்கடி தாக்கின. அப்படியிருந்தும் டச்சுக்காரர் எதிர்த் தாக்குதல் நடத்தவில்லை. கண்டி மீது படையெடுத்தால் கொம்பனிக்கே நட்டமாக முடியும் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். ஆனல் கீர்த்திஸ்ரீயின் காலத்தில் (1747-1780) மீண்டும் கலவரம் ஏற்பட்டது. 1760-ம் ஆண்டில் கொம்பனிப் பிரதேசங்களில் ஓர் கலகம் ஏற்பட்டது. கறுவா விளையும் பிரதேசங்களில் இருந்த தோட்டங்கள் அனைத்தையும் டச்சுக் கொம்பனியின் அதிகாரத்தில் பெற்றுக்கொள்ள ஸ்குறூடர்[1] என்ற தேசாதிபதி நிச்சயித்துக் கருமம் ஆற்றியதே இக்கலகத்துக்குக் காரணம். கண்டி இராச்சியத்தினர் கலகக்காரருக்கு உதவி செய்தனர். ஸ்குறூடருக்குப்பின் தேசாதிபதியாக வந்த வானெக்[2] என்பவன் கண்டி மீது படை எடுத்தான்; ஆனல் அப்படையெடுப்பு பிரதிகூலம் அடைந்தது. வானெக் இறக்க அவனுக்குப் பின் தேசாதிபதியாக வந்த வால்க்[3] என்பவன் கீர்த்திஸ்ரீயுடன்

1. Schreuder 2. Van Eck 3. Falck

சமாதானம் செய்துகொண்டான். இச் சமாதான உடன்படிக்கைப்படி இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் அனைத்தும் டச்சுக்காரருக்காக, உடரட்டை கடல்தொடர்பற்றதாயது.

வால்க்குப் பின் வான் ஆங்கல்பெக்[1] என்பவன் 1794-ம் ஆண்டு தேசாதிபதியாக வந்தான். இவ்வாண்டில் ஐரோப்பாவில் பிரான்சியர் ஒல்லாந்துக்குட் புகுந்து அதனைச் சுவீகரித்தனர். பற்றேவியாவில் ஓர் புதிய டச்சுக் குடியரசு அமைக்கப்பட்டது. ஒல்லாந்தின் தலைவன் (ஸ்ராட்ஹோல்டர்) ஆக இருந்தவன் இங்கிலாந்துக்கு ஓடினான். இக்காலத்தில் இங்கிலாந்து பிரான்சுடன் போர் தொடுத்து யுத்தம் செய்துகொண்டிருந்தது. இந்தப் போர் இந்தியாவுக்கும் பரவியது. தம் யுத்தக் கப்பல்களைப் பழுது பார்க்கும் இடமாகத் திருக்கோணமலையைப் பெற்றுக்கொள்ள ஆங்கிலர் விரும்பினர். எனவே இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்த ஸ்ராட்ஹோல்டர், இலங்கையில் உள்ள துறைமுகங்களில் ஆங்கிலக் கப்பல்களை அநுமதிக்குமாறு இலங்கையில் இருந்த டச்சுத் தேசாதிபதிக்கு எழுதினான் இதற்கிடையில் ஒல்லாந்தில் புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கம் ஆங்கிலேயரைப் பகைவராகவே மதிக்கவேண்டும் என இலங்கை டச்சுத் தேசாதிபதிக்குக் கட்டளையிட்டது. ஸ்ராட்ஹோல்டரின் கட்டளையைப் புறக்கணித்து புதிய டச்சு அரசாங்கத்தின் உத்தரவின்படியே நடக்க டச்சுத் தேசாதிபதி தீர்மானித்தான். எனவே பிரிட்டிஷ் கப்பல்கள் திருக்கோணமலைத் துறைமுகத்தை அணுகியதும் டச்சுக்காரர் தாக்கினர். ஆங்கிலர் எதிர்த் தாக்குதல்

---

1. Van Angelbeek

புரிந்து திருக்கோணமலையைக் கைப்பற்றினர். அத்துடன் ஏனைய துறைமுகங்களும் பிரான்சியர் கையில் சிக்காமல் இருப்பதற்கு அவற்றையும் தாக்கிக் கைப்பற்றத் தொடங்கினர். 1796-ம் ஆண்டில் பிரிட்டிஷார் கொழும்பைக் கைப்பற்ற அத்துடன் இலங்கையில் டச்சுக்காரர் ஆட்சி முடிவெய்தியது.

இலங்கையில் டச்சுக்காரர் ஆட்சி.

இலங்கையில் டச்சுக்காரரது ஆட்சி மூன்று பிரதான நோக்கங்களைக் கொண்டிருந்தது; அவையாவன:-

1. வரிகள், விவசாயம், வர்த்தகம் மூலமாக கொம்பனிக்குப் போதிய ஆதாயத்தைப் பெற்றுக்கொடுத்தல்.

2. புரொட்டெஸ்தாந்த கிறிஸ்தவ மதத்தைப் பரப்புதல்.

3. ''தம்மவரை இங்கே குடியேற்றுதல்'': அதாவது டச்சுக்காரரை இங்கே கொண்டு வந்து குடியேற்றி வர்த்தக உரிமைகள், நிலங்கள், வீடுகள், தோட்டங்கள் என்பவற்றை அவர்களுக்குக் கொடுத்து உதவி செய்தல்; அத்துடன் இயலுமானவரை அவர்களையே சகல வேலைகளிலும் அமர்த்தல்.

குடியேற்ற நாடுகளின் பரிபாலனத்துக்குப் பொறுப்பாயுள்ள அதிகாரிகளுக்கு மகாதேசாதிபதி விடுத்த கற்பனைகளில் காணப்பட்டவையே மேலே சொல்லியன. உட்ரட்டையுடன் பயன்றரா யுத்தங்கள் செய்வதும் கொடுங்கோல் ஆட்சி புரிவதும் ஈற்றில் கொம்பனிக்கு நட்டம் விளைவிக்க ஏதுவாகும் என்பதனையும் டச்சுக்காரர் உணர்ந்தனர்.

இலங்கையிலே தமகிருந்த மாகாணங்களை டச்சுக்காரர் கொம்மாண்ட்மென்ற்கள்[1] என்றனர். கொழும்பு கொம்மான்ட்மென்ற், காலி கொம்மாண்ட்மென்ற், யாழ்ப்பாண கொம்மாண்ட்மென்ற் என மூன்று மாகாணங்களாக டச்சுப் பிரதேசங்கள் வகுக்கப்பட்டிருந்தன. இம்மாகாணங்களுக்கு மேலாக மத்திய அரசாங்கம் இருந்தது. இதற்குப் பொறுப்பாளி தேசாதிபதி. தேசாதிபதிக்குப் பரிபாலன விஷயமாக உதவி செய்ய ஓர் அரசியற் சபை[2] இருந்தது. இதிலே சிரேட்ட உத்தியோகத்தர் எண்மர் இருந்தனர். மாகாண அதிபதிகள் திஸாவைகள் என வழங்கப்பட்டனர். இவர்கள் தமது கட்டளைகளைத் தேசாதிபதியிடம் இருந்து பெற்றனர்.

மாகாண அரசியல் நிருவாகத்துக்கு டச்சுக்காரராகவுள்ள திஸாவைகளே பொறுப்பாளிகளாக இருந்தனர். தம் பரிபாலனத்தில் உள்ள மாகாணங்களில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டல், அரசிறையைச் சேகரித்தல், விவசாயம் வர்த்தகம் என்பவற்றை ஊக்குவித்தல், மாகாணத்தில் உள்ள பாடசாலைகளைச் செவ்வனே நடாத்தல் என்பன திஸாவைகளின் கடமைகளாக இருந்தன.

இலங்கையிலே டச்சு அரசாங்கத்தில் இருந்த உத்தியோக வர்க்கம் நாலு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது.

(அ) வர்த்தக சேவை: இது இப்போது நாம் சிவில் சேவிஸ் எனக் கூறும் சேவையை அதிகம் ஒத்திருந்தது. இச்சேவையின் ஆகக் குறைந்த படியில் இருந்தவர் கிளாக்கு. அவர்களுக்கு மேல் கணக்கெழுதுவோர்,

1. Kommandments 2. Political Council

கனிஷ்ட வர்த்தகர் 1, சிரேஷ்ட வர்த்தகர் 2 என்பவர்கள் படிப் படியாக இருந்தனர்.

(ஆ) தரைப் படை கடற்படைச் சேவை: கடற்படை தரைப்படை என்பவற்றில் இருந்த சகலரும் இச்சேவை யில் அடங்கியிருந்தனர்.

(இ) மதசேவை: மதகுருக்கள்மார் அனைவரும் இச் சேவையில் அடங்கினர்.

(ஈ) தொழிலாளர் சேவை: இப்போது நாம் பொது வேலைப் பகுதி 3 என வழங்கும் பகுதியைப் போலுள் ளதே இது. பொறிவலாளரும் (என்ஜினியர்) கைதேர்ந்த தொழிலாளரும் இதில் இருந்தனர். இவர்கள் ரோட்டுக்கள், பாலங்கள், கோட்டைகள், ஆயுதசாலைகள் என்பவற்றை நிருமாணித்தும் பழுது பார்த்தும் வந்தனர்.

டச்சு அரசாங்கத்தில் இருந்த பகுதிகளில் கறுவாப் பகுதி 4 என்ற பகுதி குறிப்பிடத்தக்கது. மகாபத்தே யின் கப்பின் 5 என்ற ஓர் டச்சு அதிகாரியின் பொறுப்பில் இப்பகுதி இருந்தது. கறுவாப்பட்டை உரிக்கும் தொழி லுக்குரிய சகலரும் அதில் ஈடுபட்டு கொம்பனிக்கு வேண்டிய கறுவாவைக் கொடுக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டியது இவ்வதிகாரியின் வேலை. கறுவா உரிப்போர் வசிப்பதற்கு வேறாகக் கிராமங்கள் விடப்பட்டிருந்தன. விதானைமார் இக்கிராமங்களைக்

1. Junior Merchants 2. Senior Merchants
3. Public Works Dept. 4. Cinnamon Dept.
5. Captain of the Mahabadde

கண்காணித்து வந்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கறுவா உரிப்போரின் பெயர்களைக் கொண்ட இடாப்புக்களை விதானைமார் வைத்திருந்தனர். கறுவா உரிக்கும் தொழிலைவிட வேறோர் தொழிலிலும் இவர்கள் ஈடுபடக்கூடாது எனக் கண்டிப்பாக விதிக்கப்பட்டிருந்தது. தமக்குரிய இத்தொழிலைவிடுத்துக் கிராமத்தை விட்டு ஓட யாரும் முயன்றால் அவனைப்பிடித்து, பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோலால் குறிசுட்டுவிடுவார்கள். கறுவா உரிப்பவன் ஒவ்வொருவனும் தனது 12 வயதில் இருந்தே வரியாகக் கறுவா உரித்துக்கொடுக்க வேண்டும். 12 வயதுப் பையன் ஆண்டுதோறும் 62 இருத்தல் கறுவா உரித்து இறுக்க வேண்டும் அவனின் வயது ஏற ஏற அவன் இறுக்க வேண்டிய கறுவாத் தொகையும் ஏறிக்கொண்டே போகும் ஒருவன் இவ்வாறு வரியாக இறுக்க வேண்டிய கறுவாவின் அதிகூடிய தொகை 682 இருத்தல். இதற்கு மேல் அவன் கொடுத்தால் அப்படிக் கொடுக்கும் ஒவ்வொரு 600 இருத்தலுக்கும் 90 சதம் கொடுக்கப்பட்டது கறுவாவினுல் அதிக இலாபத்தைக் கொம்பனி பெறுதற்காக, டச்சு அதிகாரிகள் கறுவா உரிப்போரிடம் மிகவும் நிட்டூரமாக வேலை வாங்கி அவர்களைத் துன்புறுத்தினர்.

டச்சுக் கிழக்கிந்தியக் கொம்பனிக்கு இலங்கையில் பலவிதங்களால் வருவாய் கிடைத்தது. அவையாவன:-

1. வர்த்தகத்தால்: பருத்திப் புடைவைகள், ஈயம், பித்தளை, செம்பு என்பவற்றினை டச்சுக்காரர் வியாபாரம் செய்தனர். செம்பு அவர்களுக்கு ஜப்பானிலிருந்து கிடைத்தது.

2. நிலவிளைவினுல்: தானிய விளைவில் அல்லது தோட்ட வருமானத்தில் அரைப்பங்கு தொடக்கம் 1/10 வரை இறுக்க வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. கொம்பனி நிலங்களைச் சாவதானமாகப் பண்படுத்திப் பயிர்களை உண்டாக்கி வந்தது. கறுவாவை விளைவித்து, கறுவாப்பட்டையைச் சேகரிக்கும் ஏகபோக உரிமையைத் தன்னிடமே வைத்திருந்தது. இன்னும் கமுகு, மிளகு, தென்னை (தென்னையில் இருந்து காடி, தேங்காய் எண்ணெய், சாராயம் என்பவற்றை அதிகமாகப் பெற்றனர்) என்பவற்றையும் கொம்பனியதிகாரிகள் அதிகமாகப் பயிரிட்டனர். ஒவ்வொருவரும் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை டச்சு அதிகாரிகள் தோம்பு என்னும் இடாப்புக்களில் மிகச் சாவதானமாகப் பதிவு செய்து வைத்திருந்தனர். அத்தகைய ஓர் தோம்பிலிருந்த ஓர் பகுதி கீழே அநுவதித்துத் தரப்பட்டிருக்கிறது. தமக்குச் சேரவேண்டிய திறையை டச்சு அதிகாரிகள் எவ்வளவு கவனமாகச் சேகரித்தனர் என்பதை இது நன்கு காட்டுகிறது. ஒவ்வொருவனும் எவ்வளவு இறுக்க வேண்டும் என்பது திர்க்கமாக வரையறுக்கப்பட்டிருந்தபடியால் அதிகாரிகள் தம் மனம்போனபடி திறையை ஊரவரிடம் இருந்து அறவிடமுடியாதிருந்தது. ஆகவே இவ்விஷயத்தில் டச்சுக்காரரின் ஆட்சி போர்த்துக்கேசரது ஆட்சியிலும் பார்க்கச் சிறந்தது என்று கூறலாம்.

தோட்டங்கள் கிராமம்	தென்னைகள் தொகை	கொடுக்க வேண்டியதன் பெறுமதி இறைசால்	எண்ணெய் அளவு ஸ்ரைவார்ஸ்
வேவல			
1. சூசே என்பவருக்குரிய கஹத்த கஹாவத்தை என்னும் தோட்டம்	57	17 3/16	71/8

1. கிராமம் ரத்மலானை
பஸ்தியான்
அப்புகாமி
என்பவர்க்குரிய
தம்பகஹாவத்தை
என்னும் தோட்டம் 195 1.12 15/16 24 3 8

தலைவரி என்ற ஓர் வரி மூலமாயும் பூதல் வரி மூலமாயும் டச்சுக் கொம்பனிக்கு வருமானம் கிடைத்தது. சாதிக்குத் தக்கவாறு தலைவரி விதிக்கப்பட்டிருந்தது. இறந்தவரின் ஆதனத்தில் 1/3 விகிதம் பூதல் வரியாக விதிக்கப்பட்டது. யானை விற்பனை, உப்பு விற்பனை, முத்துக்குளிப்பு என்பவற்றாலும் அதிக வருமானம் கிடைத்தது.

இலங்கையின் வர்த்தகம், வருமானம் என்பவற்றை பற்றேவியாவில் இருந்த டச்சு அரசாங்கம் மிகவும் நுணுக்கமாகக் கண்காணித்து வந்தது. இலங்கையில் இதற்கென வைக்கப்பட்டிருந்த கணக்குப் புத்தகங்களை டச்சு அரசாங்கம் ஆண்டுதோறும் பற்றேவியாவுக்கு அனுப்ப, அங்கிருந்த அதிகாரிகள் அப்புத்தகங்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்வர். மேலே நாம் அநுவதித்துக் காட்டிய இடாப்பில் இருந்து அக்காலம் இறைசால் ஸ்ரைவார்ஸ் என்பவையே நாணயங்களாக உபயோகிக்கப்பட்டமை விளங்கும்.

நீதிபரிபாலனத்தைச் செவ்வனே நடத்த வேண்டுமென்பதில் டச்சுக்காரர் மிகச் சிரத்தை கொண்டிருந்தனர். பாரம்பரிய வழக்கங்களை ஆதாரமாகக் கொண்ட சிங்களச்சட்ட முறைக்குப்பதிலாக ரோமன்-டச்சுச்சட்டத்தை டச்சுக்காரர் இங்கே அநுட்டானத்துக்குக் கொண்டு வந்தனர். ஊரவர்களுக்கிடையே நேரும் பிணக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதற்காக அவர்கள்

நீதிமன்றங்களை ஊர்தோறும் அமைத்தனர். கொழும்பிலே சுப்ரீம்கோடு என வழங்கப்படும் உயர்தர நீதிமன்றத்தினையும் மாகாணங்களில் காணிக்கோடு[1]களையும் சிவில் கோடு[2]களையும் நிறுவினர். குற்றங்கள், அக்கிரமங்கள் என்பவற்றிலிருந்து தப்புவதற்கான சந்தர்ப்பங்களை இந்நீதித் தலங்கள் ஊரவர்களுக்குஅளித்தன. டச்சுக்காரரின் சட்டமும், நீதிமன்றங்களுமே அவர்கள் இங்கு விட்டுப்போன சிறந்த சாதனங்கள் எனலாம்.

டச்சுக்காரர் கல்வி வளர்ச்சியிலும் சிரத்தைகொண்டிருந்தனர். மதபோதகர்களையும் கிளாக்குமாரையும் பயிற்றுதற்காக அவர்கள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இரண்டு செமினரிகளைத்[3] தாபித்தார்கள். அவர்கள் கிறிஸ்தவ சுவிசேஷங்களைச் சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்ப்பித்து, சனங்களுக்கு கிறிஸ்தவ மார்க்கத்தை அவை மூலமாகப் போதித்தனர். 1738-ம் ஆண்டில் ஓர் அச்சியந்திரசாலையை நிறுவி அதில் இருந்து அநேக சிங்கள நூல்களையும் தமிழ் நூல்களையும் பிரசுரம் செய்வித்தனர். கொழும்பில் உள்ள நூதனசாலைக்கு நீர் விஜயம் செய்யும் காலத்தில் இலங்கையில் முதன் முதலாக அச்சியற்றப்பட்ட நூல்களைப் பார்வையிட மறந்துவிடக்கூடாது.

மாகாணங்களில் இருந்த பாடசாலைகள் ஸ்கொலார்ஷென்[4] எனப்பட்ட ஓர் சபையின் பரிபாலனத்தில் விடப்பட்டன. கொழும்புப் பிரிவில் 48 பள்ளிக்கூடங்களும் யாழ்ப்பாணப் பிரிவில் 48 பள்ளிக்கூடங்களும், காலியில் 37பள்ளிக்கூடங்களும் இருந்தன. போதகர்

1. Land Courts 2. Civil Courts 3. Seminaries
4. Scholarchen

மார் ஆண்டுதோறும் இப்பள்ளிக்கூடங்களுக்குப் போய் மாணவரின் கல்வியபிவிருத்தியைப் பரீட்சிப்பர். போதகர்மார் இவ்வாறாக ஆண்டு தோறும் விஜயம் செய்யும் காலத்தில் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானமும் புதுத் தம்பதிகட்கு விவாகக் கிரியைகளும் செய்துவைப்பர். இப்படியான ஓர் போதகப் பரிசோதகரின் அறிக்கையின் ஓர் பகுதி கீழே தரப்பட்டிருக்கிறது. இது உங்களுக்கு இப்போது வேடிக்கையாகவும் இருக்கும். ஆனால் அக்கால நிலைமையை அது காட்டுவதாக இருக்கிறது.

1718-ம் ஆண்டு.

"1718-ம் ஆண்டு பெப்ரவரி மீ 15-ம் திகதி- இந்துருவ.

36	சிறுவர்களுக்கு	7	செபங்களும்	2	வினாவிடைகளும் தெரியும்.	
17	,,	7	,,	1	,,	
7	,,	7	,,	—		
3	,,	5	,,	—		
16	சிறுமிகளுக்கு	7	,,	2	,,	
5	,,	7	,,	1	,,	
2	,,	5	,,	—		

காலி நகரப் பாடசாலை

"இப்பாடசாலைக்குத் தலைமை உபாத்தியாயர் பீற்றர் ஸ்ட்றைற் என்பவர். இவர் தமது வேலையில் மிகத் திறமைகொண்டவர். தேவையான கல்வியின் சகல துறைகளிலும் பிள்ளைகளை மிக நல்ல முறையில் பயிற்றுகிறார்."

டச்சுப் பரிபாலனத்தில் பல நல்லதன்மைகளும் பல தீயதன்மைகளும் இருந்தன. கொம்பனியின் இலாபத்துக்காகவே இலங்கை மக்கள் உழைக்கப் பிறந்தவர்கள் என்ற ஓர் மனப்பான்மையை டச்சு அதிகாரிகள் கொண்டு ஊரவர்களை—அவர்களிலும் விசேஷமாக கறுவா உரிப்பவர்களை—வருத்தியது அவர்களின் கெட்டதன்மைகளில் ஒன்று. ஆனால் தொகுத்துக் கூறுமிடத்து டச்சுப் பரிபாலனம் போர்த்துக்கீச பரிபாலனத்திலும் பார்க்கச் சிறந்ததாகவே இருந்தது என்று சொல்லலாம்.

உள்ளூர் விளை பொருள்களைக் கொழும்புக்குக் கொண்டுவருவதற்கு அநுசரணையாக டச்சுக்காரர் பல ரோட்டுக்களையும் கால்வாய்களையும் அமைத்தனர். அவர்கள் தாபித்த நீதித் தலங்கள் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகவே அமைந்தன என்று கூறவேண்டும். இப்போதும் ரோமன் - டச்சுச் சட்டம் இலங்கையிலே அநுட்டானத்தில் இருக்கிறது டச்சுக்காரர் விடுத்துப் போனவற்றுள் புரொட்டெஸ்தாந்த கிறிஸ்தவ சமயமும் ஒன்று. இப்போதும் பல இலங்கையர், அவர்களிலும் விசேஷமாக, டச்சுக்காரரின் சந்ததியாராக இப்போது பறங்கியர் என வழங்கப்படுபவர்கள், இம்மதத்தை அநுட்டித்து வருகிறார்கள் சட்டம், வர்த்தகம் என்பவை சம்பந்தமாக நாம் இன்று உபயோகிக்கும் பல சொற்கள் டச்சு அடியாகவே பிறந்தன. பூதல், கந்தோர், வெந்தீசு, நொத்தாரிசு, தொலுக்கு, சக்கிடுத்தார் என்பன அச்சொற்களிற் சில.

வினாக்கள்

1. கண்டியை வெற்றிகொள்ளுவதில் டச்சுக்காரர் ஆர்வம் கொள்ளாததேன்?

2. ஹல்ப்ற், ஸ்கொலார்ஷென், தோம்பு என்பவை பற்றிக் குறிப்புகள் எழுதுக.

3. இலங்கையின் கரையோர மாகாணங்களில் நிகழ்ந்த டச்சுப் பரிபாலனத்தைப் பற்றி ஓர் கட்டுரை எழுதுக.

. இலங்கையில் டச்சு ஆட்சி நிலவியதற்கு இன்றுள்ள சான்றுகள் யாவை?

கி. பி. 1500–ல் ஐரோப்பா நிலைமை

6-ம் அதிகாரம்

கிறிஸ்தவ சக்கராதிபத்தியம் சின்னபின்னப்படல்.

ஐரோப்பாவின் பெரும் பகுதியைக் கொண்டு பன்னூற்றுண்டு காலமாகச் செல்வாக்குடன் இருந்த உரோம சக்கராதிபத்தியத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தச் சக்கராதிபத்தியத்தின் இராசதானி உரோமாபுரி. இக்காலத்திலே நாம் பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, ஜெர்மனி, ஒல்லாந்து பெல்ஜியம், கிறீஸ் என வழங்கும் நாடுகள் எல்லாம் இந்த உரோம சக்கராதிபத்தியத்து மாகாணங்களாக ஒருகாலத்தில் இருந்தன. எத்தனையோ விதப்பட்ட சாகியத்தார் ஒரே சக்கரவர்த்தியின் பரிபாலனத்தில் ஒரேவித சட்டத்திறைல் ஆளப்பட்டு வந்தனர். அவர்கள் தாம் எல்லாரும் ஓர் மகா சக்கராதிபத்தியத்துப் பிரசைகள் என்பதில் பெருமை கொண்டு வாழ்ந்தனர். இப்படியாகப் பல்வேறு விதப்பட்ட மக்கள் ஒரே மன்னன் கீழ் ஆளப்பட்டு வந்தமை சரித்திரத்திலேயே ஓர் புதிய அம்சமாகும் எனவும் சொல்லலாம். புராதன காலத்தில் நகர இராச்சியங்களே தனித்தனி இயங்கின. இவை குறித்த இன மக்களையே கொண்டிருந்தன. ஆனல் அசோகனின் சாம்ராச்சியம், அலெக்சாந்தரின் கிரேக்க ஏகாதிபத்தியம், உரோம சக்கராதிபத்தியம் என்பவற்றில் பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் ஒற்றுமையுடன் ஒரு குடைக்கீழ் வாழ்ந்து வந்தனர்.

மேலே காட்டிய ஏகாதிபத்தியங்களில் உரோம சக்கராதிபத்தியமே மிகப் பரந்ததாக இருந்தது. காலகதி

யில் அங்கே ஓர் சமயமே மக்களால் அநுட்டிக்கப்பட்டு வந்தது. அதுதான் கிறிஸ்தவ சமயம் என்க. உரோம சக்கராதிபத்தியம் வீழ்ச்சியுற்ற பின்னரும் கிறிஸ்தவ மதம் சிதையவில்லை. மக்கள் மீது அதுதன்செல்வாக்கைப் பரப்பி அபிவிருத்தியடைந்து வந்தது ஒரே சமயத்தைக் கொண்ட மக்கள் அடங்கிய ஒரே உலகம் இருக்கவேண்டும் என்ற மனப்பான்மை அவர்களிடையே தொடர்ந்திருந்தது. இப்படியான சமய சக்கராதிபத்தியத்தின் தலைவராக பாப்பரசர் இருந்தார். அவருடைய தலைமைத்தானம் உரோமாபுரியாக இருந்தது. பல்வேறு தேசங்களில் பல்வேறு இனத்தைச் சேர்ந்து கிறிஸ்தவ மார்க்கத்தை அநுட்டித்த மக்கள் அனைவரும் பாப்பரசரைத் தம் தலைவர் எனப்போற்றிக்கத்தோலிக்க திருச்சபையின் ஆணைகளுக்கு அடங்கி நடந்தனர். அவர்கள் எங்கெங்கே வசித்தாலும் கிறிஸ்தவ உலகம் என்னும் அகன்ற சக்கராதிபத்தியத்து அங்கத்தவர்களாயிருந்தனர். இச்சக்கராதிபத்தியத்து மக்களின் ஆன்மார்த்த தன்மைகளின் பொருட்டு மேற்றிராணிமாரையும் அதிமேற்றிராணிமாரையும் ஏனைய மத குருமார்களையும் பாப்பரசர் நியமித்து வந்தார்.

இப்படி மகத்துவம் வாய்ந்திருந்த மத சக்கராதிபத்தியம் காலகதியில் தன் மூல பலத்தையும் தூய்மையையும் இழக்க, மக்கள் அதன் போதனைகளை ஆட்சேபிக்கவும் தலைப்பட்டனர். இதற்குக் காரணம் ஐரோப்பாவில் நிகழ்ந்த சில மாற்றங்களேயாகும். இம்மாற்றங்களைக் "கல்வி மறுமலர்ச்சி" எனச் சரித்திரக்காரர் கூறுவர் இம்மறுமலர்ச்சி யாது? ஐரோப்பாவிலே இருந்தவர்களுக்குத் திருப்தியளிக்காத பழைய கல்வி யாது? என்னும் இன்னோரன்னவற்றை இனி ஆராய்வாம்.

பழைய காலத்துக் கிறிஸ்தவ சக்கராதிபத்தியத்திலே சட்டம், மதசாஸ்திரம் என்பனவே பிரதான பாடங்கள். கிறிஸ்தவ மதத்தின் உண்மைகளை அறிவது தான் மதசாஸ்திரத்தின் நோக்கமாக இருந்தது. இதன் பொருட்டு இதில் ஈடுபடுவோர் கிறிஸ்தவ சமய மூல நூல்களை நன்கு படிக்க வேண்டியிருந்தது. இப்படியாகப் படித்து ஆராய்ந்து கொண்டுபோக மூல நூல்களில் இருந்து மறைந்துகிடந்த பல உண்மைகள் வெளிவரும். அக்காலத்திருந்தவர்களில் எவரும் திருச்சபையின் போதனைகள் மீது சந்தேகம் கொள்ளவில்லை; பிழை என்று சொல்லவும் இல்லை. அப்போதனைகளை மநநம் செய்து பின் அவற்றைப் போதிப்பது அக்காலத்து மதநூல் வல்லார் கடமையாக இருந்தது. இப்படியேதான் சட்ட மாணவரும் உரோமரின் சட்ட நூல்களைப் படித்து மநநம் செய்து அவற்றை அன்றாட வாழ்க்கையில் அநுட்டித்தனர். இவ்வாறுகப் படித்தவர்கள் மூல நூல்களில் பிழையுண்டோ இல்லையோ என்பதை ஆராய்வதில்லை. பழைய ஆசிரியர்கள் எழுதிவைத்த நூல்கள் அத்தனையும் சரிதான், அவற்றில் காணப்பட்டனவற்றை ஆட்சேபிக்கக் கூடாது என்பதே அவர்களின் சித்தாந்தம். இப்படியான படிப்பினுல் அதிக நன்மை கிடைக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். இக்கல்வியினுல் மனிதன் தன்னைச் சுற்றியுள்ள ஏனைய மனிதரைப் பற்றியோ இயற்கைத் தன்மைகளைப் பற்றியோ தனது சொந்த அறிவை உபயோகித்து ஆராய்ச்சி செய்ய முடியாது. கேவலம் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போலவே இயங்கினுன். பகுத்தறிவை உபயோகிக்கவேண்டும், அதன்மூலம் சூழலில் உள்ள மக்களையும் உணர வேண்டும் என்ற ஓர் உணர்ச்சி காலகதியில் ஆரம்பமா

ன்து; இதுவே பழைய கிறிஸ்தவ உலகில் பொதுவாக இருந்த கல்வி முறையைச் சிதைத்துப் புநருத்தாரணம் செய்ய ஏதுவாக விளங்கியது.

"பழைய கிறிஸ்தவக் கல்வி முறைக்கும் வாழ்க்கை நோக்குக்கும் மாற்றம் விளைக்கப் பிரதான ஏதுவாக விளங்கியன கிரேக்க இலக்கியமும் சித்திரக் கலையுமே. உலக இலக்கியங்களில் கிரேக்க இலக்கியம் மகோந்நதமானது. மனிதனின் வாழ்க்கை, அவனுடைய இன்ப துன்பங்கள் என்னும் இன்னோரன்னவற்றை அது மிக அழகாக எடுத்துக் காட்டுவது; மனிதனின் தன்மைகளை இவ்வாறு கிறிஸ்தவ இலக்கியம் எடுத்துக் காட்டியதில்லை. எனவே தமக்குக் கிடைத்த புதிய கிரேக்க இலக்கியத்தை கிறிஸ்தவ உலக மக்கள் மிக்க ஆர்வத்துடன் படித்து அதில் உள்ள சுவையை இன்புடன் இரசித்தனர். எல்லாரும் விளங்கி எல்லாரும் அநுபவிக்கக் கூடிய ஓர் பொக்கிஷமே கிரேக்க இலக்கியம் என்பதை அவர்கள் கண்டனர். எனவே அவர்கள் கிரேக்க நூல்களைத் தேடி வாங்கிப் படித்தனர். மேலும், இந்நூல்களைத் தாமாகவே படிக்கும் பொருட்டு கிரேக்க பாஷையையும் அநேகர் கற்றனர். கிரேக்க இலக்கியத்துடன், கிரேக்க சித்திரக் கலையும் மக்களுக்குப் புதிய உணர்ச்சியை ஊட்டினது. இந்த உலகம் துன்பம் நிறைந்தது, இந்தச் சரீரமோ தீமையானது என்றெல்லாம் பழைய கிறிஸ்தவ நூல்கள் கூறின. ஆனால் கிரேக்கரின் சித்திரக் கலையோ, இந்தச் சரீரம் அழகானது, அதனை இன்னும் அழகுபடுத்த வேண்டும்; அதனை வைத்துக்கொண்டு அரும் பெரும் கருமங்கள் சாதிக்கலாம் என்றது. மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றிலும் சிறந்தனவற்றைக் கொண்ட ஓர் உலகத்தைக்

கிரேக்க இலக்கியமும் சித்திரக் கலையும் காட்டின. எனவே தமக்குப் பெரிதும் உவப்பாக இருந்த அவற்றில் மேன்மேலும் மக்கள் ஈடுபட்டனர். இன்னும், அவர்கள் கிரேக்க மொழியைப் பயின்று அதில் உள்ள சாத்திரங்களையும் ஆராய்ந்தனர். கிரேக்கர், கலைத்துறையில் மாத்திரமன்றி கணிதம், விஞ்ஞானம் ஆதியாம் துறைகளிலும் முன்னேறியிருந்தவர்கள். அவர்களின் இத்தகைய நூல்களைப் படித்ததால் ஐரோப்பிய மக்கள் இயற்கையையும் அதன் தன்மைகளையும் எவ்வாறு அறியலாம் என்பதைப் பற்றியும் கண்டார்கள். பயிர்கள், மிருகங்கள், பூமி, அதன்கண் வாழும் மக்கள், சூரியன் சந்திரன், நட்சத்திரக் கூட்டங்கள் என்னும் இன்னோரன்னவை எவ்வாறு உற்பத்தியாகின்றன? எவ்வாறு இயங்குகின்றன என்பவற்றை விளக்கும் விஞ்ஞானசாத்திரங்களை ஆராய்வதில் அறிஞர் ஈடுபடத் தொடங்கினர். இப்புதுக் கல்வி முறையில் அதிகம் ஈடுபட்ட பெரியார் இருவர் இருந்தனர். அவர்களில் ஒருவர் கலிலியோ [1] என்பவர். தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கண்டுபிடித்தவர் அவரே. 24 மணித்தியாலத்துக்கொரு முறை பூமி சுழல்கிறது என்ற கொள்கையினையும் அவர் கொண்டிருந்தார். லியானடோ டாவின்ஸி [2] என்பவர் மற்ற அறிஞர். அவர் ஓர் மகா கவிஞர்; அத்துடன் சிறந்த ஓவியராகவும் விஞ்ஞான சாஸ்திரியாகவும் இருந்தார்.

இவ்வாருகத் தோன்றிய புதுக் கல்வி முறையைப் பழைய கல்வி முறையில் திளைத்தவர்கள் விரும்பவில்லை. புதுக் கல்வி பழைய கல்விக்குப் பலவிதங்களில் முரணாகவும் இருந்தது. பழைய நூல்கள் சொல்வதும், படித்த

---

1. Gallileo 2. Leonardo da Vinci

வர்கள் எனப்பட்டோர் சொல்வதும்தான் சரி எனப் பழைய கல்வி முறை விதித்தது. கண்மூடித்தனமாக எதனையும் ஏற்கக் கூடாது; உரை கல்லில் வைத்துச் சோதித்துத்தான் எதனையும் ஏற்கவேண்டும் எனப் புதுக் கல்வி முறை விதித்தது. திருச்சபை சொல்லுகிறது, அல்லது படித்தவர்கள் எனப்படுவோர் சொல்லுகிறார்கள் என்பதற்காக எதனையும் ஏற்கவொண்ணாது; மனிதராகப் பிறந்தவர்கள் தம் பகுத்தறிவைப் பிரயோகித்து நல்லது எது? தீயது எது? என்பதைத் தாமாக நிச்சயித்துக்கொள்ள வேண்டும் எனப் புதுக் கல்வி முறை விதித்தது. எனவே கிரேக்க மொழி தெரிந்தவர்கள் கிரேக்கத்தில் உள்ள சுவிசேஷங்களைப் படித்து ஆராய்ந்தார்கள். அதன் பயனாக கிறிஸ்து கூறியவற்றுக்கும், திருச்சபை போதிப்பவற்றுக்குமிடையே முரண்பாடுகள் இருப்பதைக் கண்டனர். இதன் காரணமாக மக்களிடையே ஓர் புதிய உணர்ச்சி தோன்றியது, "இதுவரை திருச் சபையைச் சேர்ந்தவர்கள் எமக்குப் போதித்து வந்தன முழுவதும் சரியா"? என்றும் அவர்கள் கேட்கத் தொடங்கினர். சுவிசேஷங்களில் இல்லாதனவற்றையும் போதித்துச் சாதித்துவந்த மதபோதகர்களின் செயல்களை ஜோன் கொலெற், எராஸ்மஸ், ஹற்றன் போன்ற அறிஞர்கள் வெளிப்படையாகக் கண்டிக்கத் தொடங்கினர். திருச் சபைத் தலைவர்கள் உட்படப் பலர் கூடா நெறியைக் கடைபிடித்ததால் மக்கள் அவர்கள் மீது வெறுப்பும் ஆத்திரமும் கொண்டனர். இவை எல்லாம் ஓர் மகா மாற்றத்துக்கு உற்பாதங்களாக விளங்கின. இப்படியிருக்க அச்சியந்திரசாலைகள் பல நவமாக ஆரம்பிக்கப்பட அவற்றில் இருந்து ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வெளிவரலாயின. மக்கள் அவற்றை வாங்கித்

தம் அறிவை விருத்தியாக்கினர். இதற்கு முன் நூல்கள் கையால்தான் எழுதப்பட்டன. ஆகவே அவற்றை வாங்கிப் படித்தல் அரிது; நூல்களை வாசிக்கக் கூடிய ஆற்றல் உள்ளோரும் மிக அரிதாகவே இருந்தனர். திருச்சபைக் குருமார்கள் தாம் நூல்களைப் படித்தறியும் ஆற்றல் உடையராக இருந்தனர்.

பழைய திருச்சபை முறைகளுக்கு விரோதமான கிளர்ச்சி ஜெர்மனியில்தான் முதன் முதல் ஆரம்பமானது. மார்ட்டின் லூதர் என்ற ஓர் சந்நியாசி இக்கிளர்ச்சியை ஆரம்பித்தார். இவர் அஞ்சா நெஞ்சினராய் திருச்சபைக் கொள்கைகள் பலவற்றைப் பகிரங்கமாகக் கண்டித்தார். உடனே திருச்சபையினர் அவருக்கு விரோதமாக நடைவடிக்கைகள் எடுத்து அவர் மீது குற்றம் சாட்டினர். என்னதான் நிகழ்ந்தாலும் தான் கண்டித்தது பிழை என்று சொல்லப் போவதில்லை, தன் கொள்கையினின்றும் பிறழப் போவதில்லை என லூதர் கடைசிவரை சாதித்தார். அவருக்குச் செல்வம் செல்வாக்குக் கொண்டவர்கள் உற்ற நண்பர்களாயிருந்து பாதுகாத்தபடியால் அவர் உயிருடன் தப்பினர்; அல்லது கட்டாயம் மரண தண்டனை விதிக்கப்பட்டே யிருப்பார். சாக்ஸனி கோமகன் லூதருக்கு ஆதரவு அளித்தான். இதன் பின் லூதர் விவிலிய நூலை ஜெர்மன் பாஷையில் மொழிபெயர்ப்பதில் தம் காலத்தைச் செலவிட்டார். இதன் பயனாக இலட்சக்கணக்கானோர் விவிலிய வேதத்தைத் தாமாகவே படித்து உண்மைகளை உணர்ந்தனர். கிறிஸ்து போதிக்காதனவற்றைக்கூடத் திருச்சபையினர் போதித்து, சாதித்து வருவதையும் அவர்கள் இப்போது கண்டனர்.

சுவிங்கிளி [1] என்ற ஓர் சுவிற்ஸர்லாந்து அறிஞரும் கல்வின் [2] என்ற பிரான்சிய அறிஞரும் திருச்சபையைக் கண்டித்துப் பிரசாரம் செய்தனர் இவர்கள் திருச்சபையின் சாதனைகளும் போதனைகளும் பிழை என்று சாதித்தனர் இவர்களும் இவர்களைப் பின்பற்றினோரும் புரொட்டெஸ்தாந்தர் என வழங்கப்பட்டனர். அவர்கள் உரோமன் கத்தோலிக்க மதத்தை விட்டு விலகினர். ஜெர்மனி, சுவிற்ஸர்லாந்து, நெதர்லாந்து, நோர்வே, சுவீடன், டென்மார்க், ஸ்கொத்லாந்து முதலாம் நாடுகளில் இருந்த பலர் புதிய புரொட்டெஸ்தாந்த மதத்தைத் தழுவினர். இவ்வாருகக் கிறிஸ்தவ சக்கராதிபத்தியம் பழைய உரோமன் திருச்சபை, புதிய புரொட்டெஸ்தாந்த திருச்சபை என இரு பகுதிகளாகப் பிரிந்தது.

மேலே சொல்லிய கல்வித்துறை மாற்றங்கள், மத விஷய மாற்றங்கள் என்பவற்றைவிட வேறு பல மாற்றங்களும் நிகழ்ந்தன. பன்னெடுங் காலமாக ஐரோப்பிய மக்கள் கீழைத் தேசங்களுடன் வியாபாரம் செய்து வந்தனர் என்பதை நீங்கள் ஏற்கெனவே படித்திருப்பீர்கள். ஐரோப்பாவில் வெனிஸ், ஜெனோவா என்னும் ஐரோப்பிய நகரங்களிலே குபேர சம்பத்துப் படைத்த வர்த்தகர் பலர் இருந்தனர். ஓக்ஸ்பேர்க், ஹாம்பேர்க், ஸ்ரெற்றின், டான்ஸிக், அம்ஸ்ரர்டாம், அன்ற்வேர்ப், இலண்டன், பரிஸ் என்பனவும் அக்கால வர்த்தகரின் இருப்பிடங்கள். இவர்கள் இவ்வுலக வாழ்வில் மோகம்

---

1. Zwingli 2. Calvin

கொண்டவர்கள். அழகான மாடமாளிகைகளில் வசித்து, கண்கவர் சிலைகளையும், சித்திரங்களையும் நூல்களையும் சேகரிக்க விரும்பினர். அவர்கள் தமக்கு வேண்டிய சித்திரப் பொருள்களையும் நூல்களையும் ஆக்கவல்ல சிற்பிகளுக்கும், ஓவியருக்கும் கலைஞருக்கும் வேண்டும் பொருள் கொடுத்து உதவினர். புளோறென்சை ஆண்ட லொறென்ஸோ டி மெடிஸி[1] என்பவன் சித்திரக் கலையை ஊக்கிய பெரு வள்ளல். மிக்கேல் அஞ்சலோ[2] என்ற உலகப் பிரசித்தி வாய்ந்த சிற்ப நூல் வல்லானுக்கு ஆதரவு அளித்தவனும் அவனே. உரோமாபுரியில் இருந்த பாப்பரசர்களும் கலாவிற்பன்னர்களாக இருந்து ஓவியருக்கும் கலைஞருக்கும் பேருதவி அளித்தனர். ஐரோப்பிய நகரங்களில் வாழ்ந்த செல்வர்கள் இவ்வாறு கலாரசிகராக இருந்து கலைக்குப் புத்துயிர் கொடுத்து அதனை வளர்த்தனர். அக்காலத்திலே புகழுடன் கலைத் தொண்டு புரிந்த லியார்ணடோ டா வின்ஸி, றப்பியேல்[3], மிக்கேல் அஞ்ஜலோ என்பவர்களின் சித்திரங்கள் உலகம் உள்ளவரை தனிப் பெருமையுடன் சோபிக்கும் என்பதற்கையம் இல்லை.

நாம் இவ்வதிகாரத்தில் எடுத்துக்கொண்ட காலத்தில் விஞ்ஞான அறிவும் மிகவாகப் பரந்தது. இதற்கு முன், அறிஞர் எனப்படுவோர் தாமும் உலகத்தைப் பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை. இந்தப் பூமி தட்டையானது; அதற்கு மேல் வில்லைப் போன்ற வானம் உண்டு; அதிலே நட்சத்திரங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன என்றே பலர் எண்ணியிருந்தனர். தம் கிராமம்

---

1. Lorenco di Medici 2. Michael Angelo
3. Raphael

அல்லது பட்டணத்து மனிதர்களைவிட தூரதேசத்தில் உள்ளவர்களைப் பற்றி மக்கள் அறியாதிருந்தனர். சுருங்கக் கூறுங்கால் அவர்கள் கேவலம் கிணற்றுத் தவளைகள் போலவே இருந்தனர். ஆனால் இப்படியான நிலைமை படிப்படியாக மாறியது. கொலம்பஸ்[1], பல்போ[2] வாஸ்கொ ட காமா[3], மகெலன்[4] முதலியோரின் ஆராய்ச்சி யாத்திரைகளின் பயனாக, மக்கள் தாம் முன் அறிந்திராத விதத்தில் உலகத்தைப் பற்றி அறியத் தொடங்கினர். பூமியும் ஏனைய நட்சத்திரக் கூட்டங்களும் தனித்தனி கோளங்களாய் இருந்து நியமப்படி சூரியனைச் சுற்றி இயங்குவன என்று கோப்பேர்ணிக்கஸ்[5] போன்ற வான சாஸ்திரிகள் எடுத்துக் காட்டினர். தம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சக்திகள் கேவலம் வாளாவியங்கவில்லை; ஓவ்வோர் காரணத்தைக் கொண்டே நியமப்படி அவை இயங்குகின்றன. அவற்றை அவதானித்து அறியவேண்டும் என்று மக்கள் விழைந்தனர். ஈசுவரனிடத்துப் பக்தி செலுத்துவது மாத்திரம் போதாது; ஈசுவர சிருட்டியின் தன்மைகளை அறியவும் வேண்டும் என்று அவர்கள் கருத்துக்கொண்டு அக்கருமத்தில் முனைந்தனர்.

இவ்வாறாகக் கிறிஸ்தவ சக்கராதிபத்தியம் ஓர் பெரும் மாற்றத்தை எய்தியது. உலகத்தைப் பற்றி அதற்கிருந்த அறிவு விருத்தியானது. கவிதையிலும் சங்கீதத்திலும் இலக்கியத்திலும், சித்திரத்திலும் அது கூடிய சிரத்தை கொண்டது; பகுத்தறிவை உபயோகிக்கத் தொடங்கியது: அதிகார பதவிகளில் உள்ளார் விதித்தபடி கண்மூடித்தனமாக நடக்க மக்கள் விரும்பவில்லை.

---

1. Columbus 2. Balboa 3. Vasco de gama
4. Magellan 5. Copernicus

ஒவ்வொருவரும் தான் தான் காண்பவற்றை கேட்பவற்றைத் தானுகச் சிந்தித்து ஓர் முடிவு செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி மக்களிடையே குடிகொண்டது.

வினுக்கள்

1. பின்வருவோர் யாவர்? அவர்களைப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக: எராஸ்மஸ்; லூதர்; கல்வின்; லொறென்ஸோடி மெடிஸி; மிக்கேல் அஞ்ஜலோ; கலிலியோ; கொப்பேர்ணிக்கஸ்.

2. கிறிஸ்தவ சக்கராதிபத்தியம் புறெட்டெஸ்தாந்த, கத்தோலிக்க திருச்சபைகளாகப் பிரிந்ததை வரிசைக் கிரமமாக விளக்குக.

3. இக்கால உலகத் தோற்றத்துக்கு, மத்தியகால மாற்றங்கள் உற்பாதமாயிருந்தன என்னும் கூற்றை விளக்குக.

4. "கல்வியின் மறுமலர்ச்சி" என்பதை விளக்குக.

7-ம் அதிகாரம்

புது முடியாட்சிகளின் எழுச்சி 1500-1600

சமயம் சம்பந்தப்பட்ட அளவில் கிறிஸ்தவ சக்கராதி பத்தியம் ஒரு மகா சக்கராதிபத்தியமாக விளங்கிய போதிலும் அரசியல் விஷயமாகச் சொல்லுகில் பல இராச்சியங்கள் அங்கே தனித்தனி மன்னரால் சுதந்திர மாக ஆளப்பட்டிருந்தன. இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் என்பனவும் மத்திய ஐரோப்பாவின் பெரும் பகுதியைக் கொண்டிருந்த பரிசுத்த உரோம சக்கராதிப த்தியமும் இராச்சியங்களாகத் தனித்தனி விளங்கின' இத்தாலி பல குறுநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது, அவற்றைப் பல குறுநில மன்னர் பரிபாலித்து வந்தனர். இப்படியாக ஐரோப்பாவில் மன்னர் சுவாதீனமாகத் தத்தம் பிரதேசங்களைப் பரிபாலித்த போதிலும் அவர் கள் பாப்பரசருக்கு அஞ்சியவர்களாக அவருக்கு அடங்கி இருந்தனர். பாப்பரசர்கள் இடும் கட்டளைகளை இவ் வரசர்கள் சிரமேற்றுங்கி ஒழுகி வந்தனர். தமக்கு அடங் காத மன்னர்கள் எவரேனும் இருந்தால், அவர்கள் அரசராக இருக்க உரிமையற்றவர்கள், அவர்களுக்குப் பிரசைகள் அடங்கவொண்ணுது என்று பாப்பரசர்கள் கட்டளை பிறப்பித்தும் விடுவர். இங்கிலாந்தை ஆண்ட ஜோன் மன்னன் விஷயத்திலும் ஜெர்மன் சக்கரவர்த்தியாக இருந்த பிரெடெரிக் என்பவன் விஷயத்திலும் பாப்பரசர்கள் இவ் வாறு செய்திருக்கிறுர்கள். கிறிஸ்தவ சக்கராதிபத்தியத் துக்குத் தாம் அடங்கியவர்களே என மன்னரும் அவர்க ளின் பிரசைகளும் கருதி நடந்து வந்தார்கள். பாப்பரச

ரின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற அவர்கள் விரும்பவில்லை. சுருங்கக் கூறுங்கால் கிறிஸ்தவ மக்கள் அனைவரும் பாப்பரசரின் ஆஞ்ஞா சக்கரத்தில் அடங்கி வாழ வேண்டும் என்ற கொள்கையே அக்காலம் பலமாக இருந்தது.

ஆனல் மேலே சொல்லிய நிலைமை பல காலத்துக்கு இருக்கவில்லை. கிறிஸ்தவ சக்கராதிபத்தியம் சிதைவுறப் பல நாடுகள் பாப்பரசர்களது ஆணையையும் மீறித் தமக்கென வேருன திருச்சபைகளைத் தனித்தனி அமைத்துக் கொண்டன. மக்கள் பாப்பரசருக்கு மேலாகத் தம் சொந்த அரசரையே மதித்து அவர்களது ஆணையையே பின்பற்றவும் தலைப்பட்டனர். இன்னும், இவ்வாருகப் புதிதாகத் தோன்றிய இராச்சியங்களில் இருந்த நூலாசிரியர்கள் பழைய சம்பிரதாயப்படி லத்தீன் மொழியில் நூல்கள் எழுதுவதை விடுத்து, தம் தாய் மொழிகளில் எழுத ஆரம்பித்தனர். இவ்வாருக ஐரோப்பிய நாடுகளிடையே ஓர் தேசிய இன உணர்ச்சி பரவியது. அவை தமக்கெனத் தேசிய திருச் சபைகளை அமைத்துக் கொண்டன. தேசியக் கலைகளையும் தேசிய இலக்கியங்களையும் அவை உருவாக்கின. இப்படியான இராச்சியங்கள் சம்பந்தப்பட்ட அளவில் நாம் ஓர் விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது இக்காலத்திலே ஒவ்வோர் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களும் தமக்கென வேருன இராச்சியங்களை அமைத்துக்கொள்வது போல அக்காலத்தவர் தேசிய இராச்சியங்களை அமைக்கவில்லை; தம் பிரசைகளின் ஆதரவைக் கொண்ட வலிமை மிக்க அரசர்களே கிறிஸ்தவ சக்கராதிபத்தியத்திலிருந்து தம்

பிரதேசங்களைப் பிரித்துத் தேசிய இனத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தனி நாடுகளாக்கினர் என்க.

மத விஷயங்களில் திருச்சபை மக்களை ஒன்றுபடுத்தும் சாதனமாக இருந்து வந்தது போல அன்றாட வாழ்க்கையில் அவர்களைப் பிணித்து வந்த சாதனம் ஒன்று இருந்தது. அதுதான் மானிய முறை [1]. அக்காலத்தில் மக்களின் செல்வத்துக்கு மூலாதாரமாக நிலமும் அவர்களின் பிரதான தொழிலாக விவசாயமும் இருந்தன; அரசன் தனக்குச் சேனாதிபதிகளாகவோ தனது மாகாணங்களின் அதிபதிகளாகவோ ஊழியம் செய்யும் பிரதானிகளுக்குப் பெருந்தொகை நிலங்களை மானியமாக வழங்குவான். இப்பிரதானிகள் அல்லது பிரபுக்கள் தாம் அரசனிடம் இருந்து பெற்ற நிலங்களைத் தமக்கு ஊழியம் செய்வோருக்குப் பிரித்துக் கொடுப்பர். இதன் பொருட்டு இந்நிலங்களைப் பெற்றோர் தானியங்களைக் கொடுப்பர் அல்லது ஊழியம் செய்து கொடுப்பர். இவ்வாறாக ஒவ்வொரு தேசத்திலும் பிரபுக்களும் சாதாரண குடிகளும் இருந்து சேவா முறையில் ஒருவருக்கொருவர் பந்திக்கப் பெற்றிருந்தார்கள். சில நாடுகளில் இருந்த பிரபுக்கள் அதிக செல்வாக்குப் படைத்துத் தமக்கெனக் கோட்டை கொத்தளங்களையும் பெரும் படைகளையும் வைத்திருந்தனர். பிரபுக்கள் வலிமை பெற்ற நாடுகளில் அரசனாக உள்ளவனுக்கு பராக்கிரமம் வாய்ந்த சேனை யில்லாதுவிட்டால் அவன் வலிமையற்றவனாய்விடுவான் ஆனால் அரசனுக்குப் படைகளை உதவுவோர் அவனுடைய பிரபுக்களே; ஆகவே அவர்களுடைய ஒத்துழைப்புக் கிடைக்காவிட்டால் அவன் வலியிழக்க, அவர்கள்

---

1. Feudal system

தம் மனம் போனபடி கருமம் ஆற்றிவந்தனர். இங்கிலாந்திலே யோர்க் கோமகன்[1], லாங்கஸ்ரர் கோமகன்[2] என்ற இரு பிரபுக்கள் பரஸ்பரம் மாறுபட்டு, ரோசா யுத்தம்[3] எனப்படும் போரினைப் பல்லாண்டு காலமாக நடத்தி வந்தனர். எங்கள் இலங்கையிலும் முதலாம் விஜயபாகு இறக்க அவனுடைய மகனும் மருமக்களும் ஒருவருக்கொருவர் மாறுபட்டு யுத்தம் செய்து நாட்டுக்குப் பெரும் சேதம் விளைத்தனர். இப்படியாகவே ஐரோப்பாவில் இருந்த கட்டுக்கடங்காப் பிரபுக்களும் ஒருவருக்கொருவர் மாறுபட்டு பெருந் துன்பங்கள் உண்டாக்கினர். மத்திய ஐரோப்பாவில்—அதிலும் விசேஷமாக றைன் பள்ளத்தாக்கு ஓரமாக — கொள்ளையடிக்கும் தொழிலைக் கொண்ட பிரபுக்கள், தம் கோட்டை கொத்தளங்கள் வழியாகச் சென்ற வர்த்தகரை வழி மறித்துக் கொள்ளையடித்து வந்தனர். இத்தகைய கட்டுக்கடங்காப் பிரபுக்களை வெறுத்த இரு வகுப்பு மக்கள் ஐரோப்பாவில் வசித்தனர். அவர்களில் ஒரு சாரார் வர்த்தக வகுப்பினர். இவர்கள் இப்பிரபுக்களால் மிகவும் துன்பப்பட்டனர்; தமக்குப் பாதுகாப்பளிக்கக்கூடிய உறுதியான அரசாங்கம் வேண்டும் என விழைந்த இவர்கள் அப்படியான ஓர் அரசியலை நடத்தக் கூடிய மன்னனுக்குத் தம் மனப்பூர்வமான ஆதரவு முழுவதையும் கொடுத்தனர். பிரபுக்கள் கொடுமையை வெறுத்த மற்ற வகுப்பினர் குடியானவர்கள். பிரபுக்கள் ஒருவருக்கொருவர் மாறுபட்டு யுத்தம் செய்யும் காலத்தில் அதிக துன்பப்பட்டவர்கள் குடியானவர்களே. அவர்கள் பிரபுக்க

---

1. Duke of York 2. Duke of Lancaster
3. Wars of the Roses

ளின் யுத்தங்களால் தங்கள் பயிர்களையும் ஆடுமாடுக ளையும் வீடுகளையும் இழந்து பெரிதும் வருந்தினர்.

இங்கிலாந்திலே கட்டுக்கடங்காது திரிந்த பிரபுக்க ளிற் பலர் இறக்க, ரோசா யுத்தமும் முடிவடைந்தது. இதன் பயனாக ஏழாவது ஹென்றி அரசனாக வந்து, மீந்திரு ந்த பிரபுக்கள் மீது தனது அதிகாரத்தை உறுதியாகப் பிரயோகிக்க முடிந்தது. இவ்விஷயத்தில் அவனுக்குதவி யாகப் பல கருமங்கள் அக்காலத்து இங்கிலாந்தில் நிகழ் ந்தன. வர்த்தகம் பெருகியது; அதனால் பணப் புழக்க மும் அதிகமானது; ஆகவே அவன் தன் வரிகளை உரொ க்கப் பணமாகப் பெற்றான். அரசனின் செல்வம் அதிக ரிக்க, அவன் தன் படைகளுக்குப் பிரபுக்களில் தங்கியிரு க்க வேண்டிய அவசியம் நீங்கியது. அவன் தானாகவே படைகளைத் திரட்டி சேனாவீரருக்கு வேண்டிய சம்பள த்தைத் தன் பணத்திலிருந்து கொடுக்க முடிந்தது. இவ் வாறாகவே அரசன் தனக்கு வேண்டிய படைகளை அமை த்தான். அத்துடன் தனக்கென ஓர் கடற்படையையும் ஏழாவது ஹென்றி நிருமாணித்தான். தம் சொந்தப் பொறுப்பில் எந்தப் பிரபுவாவது சேனைகள் வைத்திருக் கக் கூடாது என்றும் அவன் கண்டிப்பான கட்டளை விதித்தான். நட்சத்திரக்கூட நீதிமன்றம்[1] என்ற ஓர் நீதி மன்றத்தை அவன் அமைத்து இடுக்கண் விளைத்த பிரபு க்களை அதில் விசாரணை செய்வித்துக் கடும் தண்டனை விதிப்பித்தான். இதன் பயனாக அவன் தன் சட்டங்களு க்கு அதிக சக்தியூட்டி அவற்றுக்கு எல்லாரும் அடங்கி நடக்கச் செய்தான். இன்னும், அவன் யுத்தங்களில்

1. Court of Star Chamber. இந்நீதிமன்றத்தை நட்சத்திர உருவுச் சித்திரங்கள் அலங்கரித்தபடியால் இப்பெயர் வந்தது என்ப.

ஈடுபடாதிருந்தபடியால் பெருந் தொகைச் செல்வம் அவனுக்கு மீந்தது. நாட்டில் உள்ள பிரபுக்களின் குடும்பங்களிலும் பார்க்க தனது குடும்பத்துக்குக் கூடிய அந்தஸ்து பெற வேண்டி அவன் தனது புதல்வியரை வேற்றரசர் மக்களுக்கு மணம் செய்து கொடுத்தான். அவனுடைய ஒரு மகள் ஸ்கொத்லாந்து அரசனை விவாகம் செய்தாள். அவனுடைய மகன் ஸ்பெயின் இராசகுமாரி ஒருத்தியை மணம்புரிந்தான்.

ஏழாவது ஹென்றி சிம்மாதனம் ஏறும்போது இங்கிலாந்து அவ்வளவு முன்னேற்றமுடைய நாடாக இருக்கவில்லை. ஆனால் அவன் தனது முயற்சியால் அந்நாட்டைப் பலவிதங்களாலும் முன்னேற்றித் தான் இறக்கும்போது அதனைச் செல்வம்கொழிக்கும் ஒரு நாடாக்கிவிட்டான். ஏழாவது ஹென்றி இறக்க அவனுடைய மகன் எட்டாவது ஹென்றி என்ற பெயரோடு அரசனானான். இவன் மிகவும் திறமைசாலி; இவனுக்கு உதவி செய்ய மிகச் சிறந்த மந்திரிமார் இருந்தனர். ஸ்பெயின், பிரான்ஸ் என்னும் இருநாடுகளுக்குமிடையே பிணக்கு உண்டான போது எட்டாவது ஹென்றி ஸ்பெயினுடன் நேசம் கொண்டாடி அதனுடன் நேச உடன்படிக்கை ஒன்றைச் செய்து அதன் பயனாக ஐரோப்பிய அரசியல் அரங்கத்திலே இங்கிலாந்துக்கு ஒரு கணிப்பான பதவியைப் பெற்றுக் கொடுத்தான். இதன் பின் தனது மனைவியான அரகன் நாட்டு இளவரசி கதரீன் 1 என்னும் ஸ்பானியப் பெண்ணை விவாக நீக்கம் செய்யக் கருதினான். இதனை பாப்பரசர் அநுமதிக்க மறுத்தார். இதனால் ஹென்றிக்கும் பாப்பரசருக்குமிடையே பிணக்கு உண்டாயது.

---

1. Katherine of Aragon

ஆனல் ஹென்றிக்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் ஆதரவும் அவனுடைய பிரசைகளின் ஆதரவும் பலமாக இருந்தன. எனவே அவன் பாப்பரசரின் கட்டுப்பாட்டிலிருந்தும் விலகி இங்கிலாந்துக்கென வேருன ஓர் திருச்சபையை அமைத்து அதற்கு பாப்பரசர் அல்ல, தானே அதிபதி என விதித்தான். கிறிஸ்தவ தேவாலயங்களில் இதுவரை லத்தீன் மொழியிலேயே ஆராதனைகள் நடந்தன. இனி லத்தீனுக்குப் பதிலாக ஆங்கிலத்திலேயே ஆராதனைகள் நடக்க வேண்டுமென அவன் விதித்தான். அவனுக்குப் பின் இங்கிலாந்தின் சிம்மாசனம் இவர்ந்த அரசர்கள், அரசிகள் காலத்தில் கிறிஸ்தவ ஆராதனை நூல்கள், செபநூல்கள் பெருந்தொகையில் ஆங்கிலத்தில் வெளிவந்தன.

எட்டாவது ஹென்றிக்குப் பின் அவனுடைய மகன் ஆருவது எட்வேட் அரசனுனன் அவனுடைய காலத்தில் புரொட்டெஸ்தாந்த கிறிஸ்தவ சமயம் இங்கிலாந்தில் இன்னும் தீவிரமாக முன்னேறியது. ஆனல் ஹென்றியின் மகளான எலிசபெத் காலத்தில்தான் இங்கிலாந்து ஐரோப்பாவிலே ஓர் வல்லரசானது. அவளுடைய கடற்படை விரர் ஸ்பெயினின் பராக்கிரமம் வாய்ந்த ஆர்மடா என்னும் கடற்படையைத் தாக்கி வெற்றி கொண்டனர். அத்துடன் அவர்கள் புது உலகமாய அமெரிக்காவுக்குக் கடற்பிரயாணங்கள் செய்து ஸ்பெயினின் திரவியக் கப்பல்களைக் கொள்ளையடித்தனர். பிரான்சிஸ் ட்றேக்[1] ஹோக்கின்ஸ்[2], புரொபிஷர்[3], வால்ற்றர் றலி[4] என்பவர்கள் இந்த ஆங்கில வீரர்களிற் சிறந்தவர்கள். 1600-ம்

I. Francis Drake 2. Hawkins
3. Frobisher 4. Walter Raleigh

ஆண்டில் கிழக்கிந்தியக் கொம்பனி என்ற வர்த்தக சமுதாயம் தாபிக்கப்பட்டது. இங்கிலாந்தின் வர்த்தக விருத்தியின் பொருட்டுத் தாபிக்கப்பட்ட எத்தனையோ கொம்பனிகளில் இதுவும் ஒன்று. எலிசபெத்தின் காலத்தில்தான் ஆங்கில இலக்கியம் உச்ச நிலையடைந்தது ஆங்கில மகா கவியான ஷேக்ஸ்பியர் வாழ்ந்து மங்காப் புகழ்பெற்ற தம் நாடகங்களை இயற்றியதும் எலிசபெத் இராணி காலத்திலேயே. ஆகவே இராணுவ அதிகாரத்திலாக, செல்வச்செழிப்பிலாக, இலக்கிய முன்னேற்றத்திலாக எலிசபெத்தின் காலம் இங்கிலாந்தின் பொற்காலம் என்று கூறலாம்.

இங்கிலாந்தில் நடந்த மகா மாற்றங்களைப் போன்ற மாற்றங்கள் ஸ்பெயினிலும் நிகழ்ந்தன. ஸ்பெயின் ஒரு காலத்தில் பல குறுநிலங்களாகப் பிரிக்கப்பட அவற்றிற் பல குறுநில மன்னர் ஆண்டு வந்தனர். ஆனல் அரகன் நாட்டுப் பேர்டினன்ட் காஸ்ரீல் நாட்டு இசபெலா என்பவளை விவாகம் செய்ததன் பயனாக இவ்விரு நாடுகளும் ஒன்ருகிப் பலம்கொண்ட இராச்சியமானது. இதனுல் அம்மன்னனும் இராணியும் தம் நாடுகளில் இருந்த பிரபுக்களின் அதிகாரத்தை அடக்கி அவர்களைக் கட்டுப்படுத்தினர். இதுவரை பிரபுக்கள் அநுபவித்த அதிகாரங்கள் அனைத்தையும் அரசன் தனதாக்கிக்கொண்டான். ஆனல் அவன் அவர்களின் அந்தஸ்தைக் குறைக்காமல் பட்டங்கள் பதவிகளை வழங்கித் தன்கீழ் விசுவாசமான ஊழியராக வைத்துக்கொண்டான். பேர்டினன்டும் இசபெலாவும் கத்தோலிக்க மதத்தில் மிகுந்த பற்றுக் கொண்டவர்கள். ஆகவே அவர்கள்

---

1 Inquisition Court

அதன் திருச்சபைக்குத் தம்மாலான உதவிகள் அனைத்தையும் செய்து வந்தனர். கத்தோலிக்க மதத்துக்கு விரோதமாக இருந்தவர்களை அகப்படுத்தி விசாரணை செய்து அவர்களுக்குத் தக்க தண்டனை விதிப்பதற்காக திருச்சபை நீதிமன்றம்[1] என்ற ஓர் மன்றத்தையும் அவர்கள் ஸ்தாபித்தனர். இப்படியாகத் தன்மீது விசுவாசமுள்ள அரசன், அரசிக்கு திருச்சபை தக்க ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொடுத்தது. இன்னும் பேர்டினன்ட், இசபெலா என்பவர்களின் காலத்தில் புதுப்புது நாடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளும் ஸ்பானியரால் ஆரம்பிக்கப்பட்டன. கொலம்பஸ் தான் கண்டுபிடித்த பிரதேசத்தில் ஸ்பெயினின் கொடியை நாட்டினன். இதன்பின் அமெரிக்கா என்னும் புது உலகிலே ஓர் ஸ்பானிய சக்கராதிபத்தியம் உருவாகி வளரத் தொடங்கியது.

துணிவும் அஞ்சாமையும் கொண்ட ஸ்பானியக் கடல் வீரர் மெக்ஸிக்கோவில் அஸ்ரெக் சாதியார், யுகாற்றரில் மாயாச் சாதியார், பீருவில் இன்காஸ் சாதியார் கொண்டிருந்த புராதன இந்திய ஏகாதிபத்தியங்களுக்குள் பிரவேசித்து வெற்றிகொண்டு அங்கிருந்து தங்கம் வெள்ளி என்பவற்றைச் சூறையாடினர். இப்படிச் சூறையாடிய திரவியங்களை அவர்கள் ஸ்பெயினுக்கு அனுப்ப அந்நாடு குபேர சம்பத்துப் படைத்தது. இதனுல் ஸ்பெயினில் இருந்த பொது சனங்கள் அதிக நன்மைகளை அடையவில்லை என்ருலும், ஸ்பெயின் மன்னன் இச் செல்வத்தால் மகா பராக்கிரமசாலியாக விளங்கினன்.

---

1. Inquisition Court

இவ்வாறுகத் தனது அதிகாரத்தை வலுப்படுத்தியபின் பேர்டினன்ட், ஐரோப்பாவில் இருந்த ஏனைய அரசவம்சங்களுடன் சம்பந்தம் செய்து தனது செல்வாக்கை இன்னும் அதிகரிக்கச் செய்தான். அவனுடைய ஒரு புதல்வி எட்டாவது ஹென்றி என்னும் பெயருடன் சிம்மாதனம் ஏறிய இளவசரசனை மணந்தாள். இன்னொருத்தி பிளான்டர்ஸ் இராசகுமாரனை விவாகம் செய்தாள். அவனுடைய மகன் சால்ஸ் என்பவன் 5-வது சால்ஸ் என்ற பெயருடன் பரிசுத்த உரோம சக்கராதிபத்தியத்து அதிபதியானான். ஆகவே ஐரோப்பாவில் புதிதாகத் தோன்றிய முடியரசுகளில் ஸ்பெயின் மிக்க பராக்கிரமமும் செல்வாக்கும் பெற்றதாக மிளிர்ந்தது.

பிரான்சிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்ததை நாம் அவதானிக்கலாம். அங்கே பரிஸ் நகரத்திலே பெயருக்கு ஓர் அரசன் இருந்தாலும் பல பிரபுக்கள் நாட்டைக் குறுநில மன்னர் போல் ஆண்டுவந்தனர். இவர்கள் பரிஸ் மன்னனுக்கு அடங்காது தமது மனம் போனபடி குடிகளை வருத்தி வந்தனர். அக்குவிற்றேனியா கோமகன் 1, ஒளியன்ஸ் கோமகன் 2, பேர்கண்டி கோமகன் 3 என்னும் குறுநில மன்னர் இவர்களிற் பிரதானமானவர்கள். ஆனல் பரிஸ் நகரத்தில் அதிபதியாக வந்த 11-வது லூயி என்னும் அரசன் இங்கிலாந்தின் ஏழாவது ஹென்றியைப் போல இக்குறுநில மன்னரதும் பிரபுக்களதும் அதிகாரத்தைக் குறைக்க முற்பட்டு அதில் அநுகூலமுமடைந்தான். அவனுக்குப் பின் மன்னனானவன் இத்தாலியைத் தனதாக்கி அங்கே ஓர் பிரான்சிய சக்கராதிபத்

1. Duke of Aquitania 2. Duke of Orleans
3. Duke of Butgundy

தியத்தையும் தாபித்தான். ஆனல் அங்கே பிரான்ஸ், ஸ்பெயின் என்னும் இரு நாடுகளுக்குமிடையே பிணக்கு ஏற்பட்டு போர் மூண்டது. இறுதியில் ஸ்பெயினே வெற்றிகொண்டது. இதன் பயனக இத்தாலியின் ஓர் பாகம் ஸ்பெயினின் அதிகாரத்துள்ளாக ஸ்பானிய இள வரசரே பல்லாண்டு காலம் அதனைப் பரிபாலித்து வந்தனர்.

போர்த்துக்கல், ஸ்கன்டினேவியா நாடுகள் என்பவற்றில் இருந்த அரசர்களும் தம் இராச்சியங்களைப் பலப்படுத்தித் தமக்கு இடுக்கண் விளைத்துவந்த பிரபுக்களது அதிகாரங்களைச் சிதைத்தனர். அவர்களுக்கு வர்த்தகர்களும் பொது சனங்களும் போதிய ஆதரவு அளித்தபடியினுலேயே அவர்கள் இவ்வாறு பிரபுக்களது அதிகாரத்தைக் குறைக்க முடிந்தது. வர்த்தகரும் பொது சனங்களும் வலிமை மிக்க ஒரு அரசனது உறுதியான ஆட்சியை விரும்பினர். கட்டுக்கடங்காப் பிரபுக்கள் நாட்டை ஆட்சி செய்வதால் தாம் வருந்த வேண்டி ஏற்படுகிறது என்பதை அவர்கள் கண்டனர்.

ஐரோப்பாவிலே ஜெர்மனி, இத்தாலி என்ற இரு நாடுகளில் இப்படியான உறுதிவாய்ந்த முடியாட்சி முறை ஏற்படவில்லை. ஜெர்மனியிலே பல சிற்றரசர்கள் இருந்தார்கள். இன்னும், வட ஜெர்மனியர் புரொட்டெஸ்தாந்த மதத்தினராக இருந்தபடியால், அவர்கள் கத்தோலிக்கரான தென்பகுதியினருடன் சேர்ந்துகொள்ள விரும்பவில்லை. இவ்விரு பகுதியினருக்குமிடையில் ''முப்பதாண்டு யுத்தம்'' என்ற ஓர் கோர யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தின் பயனக ஜெர்மனி மேலும் பலவீனமுற்றது.

19-ம் நூற்ருண்டில்தான் ஜெர்மனிய நாடுகள் ஒற்றுமையாகி ஓர் தேசீய இராச்சியமாகின.

இத்தாலியிலும் பல சிறு சிறு இராச்சியங்கள் தனித் தனி இயங்கின. வடபகுதியில் இருந்த குறுநிலங்கள் ஆஸ்திரியாவுக்கடங்கியும் மத்திய பகுதியில் இருந்தவை பாப்பரசர் பரிபாலனத்திலும், தென் பகுதியில் இருந்தவை ஸ்பெயினின் அதிகாரத்திலும் இருந்தன. இப்படியாகச் சிதறிக்கிடந்த குறுநிலங்களை ஒன்ருக்கி ஓர் தேசீய இராச்சியமாக இத்தாலியை அமைப்பதற்கு வெகுகாலம் சென்றது. 19-ம் நூற்ருண்டில்தான் இத்தாலி ஒன்ருகி ஒரு குடைக்கீழ் ஆளப்படும் தேசீய இராச்சியமானது.

இந்நாடுகளுக்கு வேருக மிகப் பரந்த பிரதேசங்களையுடைய ருஷியா இருந்தது. அங்கேயும் பல குறுநிலங்கள் இருந்தன. இவற்றை ஒவ்வோர் கோமகன் ஆண்டு வந்தான். இக்கோமக்களில் பிரதானமானவன் மொஸ்கோ கோமகன். ஆனல் படிப்படியாக இக் குறுநிலங்கள் யாவும் ஒன்ருகிப் பலம் வாய்ந்த இராச்சியமாகின. பயங்கர ஐவான்[1] என்னும் ஸார்[2] (1462–1505) காலத்தில் ருஷியா ஓர் தேசீய இராச்சியமாகி உறுதி பெற்றது. இவனுக்குப் பின் அரசுரிமை ஏற்றவர்களில் மகா பீற்றர்[3], மகா கதறீன்[4] போன்ற அரசர்களும் அரசிகளும் அரசனே சர்வாதிகாரியாகவுள்ள பராக்கிரமம் வாய்ந்த ஓர் அரசாங்கத்தை எவ்வாறு உருவாக்கினர் என்பதைப் பின்னர்ப் படிப்போம்.

மேலே சொல்லிய நாடுகளில் மன்னர்களது அதிகாரம் எவ்விதத்திலேனும் கட்டுப்படுத்தப்படவில்லை. அவர்

1. Ivan the Terrible 2. Czar
3. Peter the Great 4. Katherine the Great

கள் தமது ஆதரவின் பொருட்டு ஓர் தரைப் படையினை யும் கடற்படையினையும் வைத்திருந்தனர். பட்டம் பத விகளை வழங்கிப் பிரபுக்களைத் தம் கீழ்ப்படுத்தினர் நடுத்தர வகுப்பினர் தம் பாதுகாப்பின்பொருட்டு உறுதி யான அரசியலை நடாத்திய இம்மன்னர்களுக்குத் தம் ஆதரவை அளித்தனர். கட்டுப்பாடற்ற அதிகாரத்தை மன்னர்கள் கொண்டிருந்தபடியினால் அவர்கள் யதேச்சாதி காரிகளாயினர். தாம் பரிபாலித்த தேசத்தில் அவர்களே சர்வாதிகாரிகள். அவர்களை ஆண்டவனே நியமித்து அர சராக்கினர் என்ற எண்ணம் மக்களிடையே இருந்தபடி யினால், அவர்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் இருக்க வில்லை. ஆண்டவனே அரசர்களை நியமித்தபடியால் அவ்வரசர்களுக்கு விரோதமாகக் கருமம் ஆற்றுவது அவ்வாண்டவனுக்கே விரோதமாக நடப்பது போல முடியும் என மக்கள் கருதினர். தேசச் சட்டங்களை மன் னராயினோர் தாம் நினைத்தபடி மாற்றவும் எல்லாருக் கும் ஒரேவித சட்டம் இல்லாது வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு சட்டங்களை ஆக்கவும் மன்னருக்கு அதிகா ரம் இருந்தது. சட்டங்கள் இல்லாமல்தானும் அவர்கள் பரிபாலிக்க அதிகாரம் இருந்தது. இன்னும், ஓர் சட்டம் குறித்த ஒரு மனிதருக்கோ குழுவினருக்கோ செல்லாது என்று விதிக்கவும் அவர்கள் அதிகாரம் படைத்திருந் தார்கள்.

இப்படியான யதேச்சாதிகாரத்தை ஓர் மன்னனு க்கு வழங்குதல் முறையாகாது. அப்படிச் செய்தல் ஆபத் தாக முடியும் என்பதை நீங்கள் இப்போது ஒத்துக் கொள்வீர்கள். ஆனல் அக்காலத்துப் பொது சனங்க ளிற் பெரும்பாலோர் அப்படியாக எண்ணவில்லை. எனி

னும் மன்னராயினேர் சட்டங்களுக்கமைந்து பரிபாலனத்தைச் செய்யவேண்டும்; சட்டங்கள் மன்னருக்கும் பிரசைகளுக்கும் மேலாக இருத்தல் வேண்டும் என்ற கருத்துக்கொண்ட அரசியல் ஞானிகள் சிலர் அக்காலத்திலும் இருந்தனர். "தேசத்தின் அரசியலமைப்புச் சட்டம்" என ஓர் தொகைச் சட்டங்கள் இருக்க வேண்டும்; மன்னர்கள் அவற்றின்படியே பரிபாலிக்க வேண்டும்; இதனை விடுத்து அவர்கள் தம் எண்ணப்படி பரிபாலிக்கவிடக் கூடாது; அப்படி விட்டால் ஓர் சர்வாதிகாரியான துட்ட அரசன் தன் மனம்போனவாறு கருமம் ஆற்றித் தன் பிரசைகளை வருத்திவிடுவான்; இன்னும், சட்டதிட்டங்கள் இருப்ப, அவற்றின்படி ஓர் அரசன் ஒழுகாதுவிட்டால் அவனை அரச பதவியிலிருந்தும் நீக்க பிரசைகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டும் எனவும் இந்த அரசியல் ஞானிகள் கூறினர்.

இதனைவிட இன்னோர் வித அபிப்பிராயம் கொண்டாரும் இருந்தனர். அரசனாயிருப்பவனுக்குச் சர்வ அதிகாரங்களும் இருக்க வேண்டும்; அவ்வதிகாரங்களை அவன் தனது பிரசைகளின் நன்மைக்காகவே பிரயோகிக்க வேண்டும் என்பது இவர்களுடைய கொள்கை. இப்படிச் சகல அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்ட அரசன் சர்வாதிகாரியாகிவிடுவான்; ஆனல் அவன் அவ்வதிகாரங்களைச் சுயநலத்தின் பொருட்டுப் பிரயோகிக்காமல் பிரசைகளின் நன்மைக்காகவே பிரயோகிக்க வேண்டும் என்பது இவர்களுடைய கொள்கை.

ஆகவே, அரசன் விஷயமாக இருவித அபிப்பிராயங்கள் உருவாயதை மேலே காட்டியவற்றில் இருந்து நாம்

அவதானிக்கலாம் ஒன்று வரம்புடை முடியாட்சி[1] இருக்க வேண்டும் என்பது. அதாவது அரசனுயினேன் சட்ட வரம்புக்குட்பட்டுப் பிரசைகளைப் பரிபாலிக்க வேண்டும் என்பது. சட்டத்துக்கு அப்பாற்பட்ட மன்னன் முறை இருக்க வேண்டும் என்பது மற்றது. இப்படியாகச் சட்ட வரம்புக்கு அப்பாற்பட்டு பிரசைகள் நன்மைக்காக உழைக்கும் மன்னனை நல்லாட்சி புரியும் யதேச்சாதிகாரி[2] எனச் சரித்திர நூலார் கூறுவர்.

இங்கிலாந்திலே யதேச்சாதிகாரம் புரிந்த மன்னர்களது அதிகாரத்தை எவ்வாறு மக்கள் மாற்றி அமைத்தனர் என்பதை அடுத்த அதிகாரத்தில் ஆராய்வாம்.

வினாக்கள்

1. ஐரோப்பாவிலே புதிதாக ஏற்பட்ட முடியாட்சி முறை பழைய முடியாட்சி முறையிலும் பார்க்க எவ் விதங்களில் வேருக இருந்தது?

2. ஐரோப்பாவில் ஏற்பட்ட புதிய முடியாட்சிகளின் வளர்ச்சியைச் சுருக்கமாகக் கூறுக.

1. Constitutional Monarchy 2. Benevolent Despot

8-ம் அதிகாரம்

யதேச்சாதிகார முறைக்கு விரோதமான கிளர்ச்சிகள்.

இங்கிலாந்திலே எட்டாவது ஹென்றி, எலிசபெத் இராணி முதலாம் தியூடர் மன்னரும்[1] அரசிகளும் யதேச்சாதிகாரிகளாகப் பரிபாலனம் புரிந்தாலும் பிரசைகள் அவர்களுக்கு ஆதரவு அளித்தனர். இப்படியான ஆதரவைக் கொண்டே அம்மன்னரும் அரசிகளும் யதேச்சாதிகார முறையை அநுட்டித்தனர் என்றும் கூறலாம். சனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற மகாசபையின் உதவியுடன் தியூடர் வம்ச அரசர்களும் அரசிகளும் தமக்கு வேண்டியதைப் பெற்றனர். உதாரணமாக எட்டாவது ஹென்றி பாப்பரசருடன் பிணக்குற்று உரோமன் கத்தோலிக்க திருச் சபையினின்றும் விலகியபோது பாராளுமன்றம் அவனுக்கு அநுசரணையாக இருந்து, இங்கிலாந்திலே திருச்சபை விஷயத்தில் பாப்பரசருக்கு இருந்த அதிகாரங்கள் அனைத்தையும் அவரில்இருந்து நீக்கி மன்னன் வசம் ஒப்புவித்தது. இவ்வாருகத் தான் விரும்பிய கருமங்களைச் சாதிப்பதற்கு ஏற்ற கருவியாக மன்னன் பாராளுமன்றத்தை உபயோகித்தான். அரசன் தங்கள் சொந்த நாட்டவன்; தங்களைப் போலவே அவனும் ஆங்கிலன் என்னும் தேசீய இன உணர்ச்சியால் உந்தப்பட்ட ஆங்கில மக்கள் அவனுக்குத் தம் பேராதரவை மனப்பூர்வமாக வழங்கினர். இக்காரணத்தின் பொருட்டே அவர்கள் எலிசபெத் இராணிக்கும் தம் ஆதரவைக் கொடுத்தனர். அவளும் தன் தங்

1. Tudor Kings

தையான எட்டாவது ஹென்றியைப் போல ஆங்கிலப் பண்பாட்டில் திளைத்து தான் ஓர் ஆங்கில மகள் என்னும் உணர்ச்சி மிக்கவள். இங்கிலாந்தின் மீது படை எடுக்க ஸ்பெயின் தனது பராக்கிரமம் வாய்ந்த ஆர்மடா என்னும் கப்பற்படையை அனுப்பியபோது, இங்கிலாந்தில் இருந்த கத்தோலிக்கர்தாமும் அவன் செய்கையைக் கண்டித்து அவனுக்கெதிராக எலிசபெத்திற்கு ஆதரவு அளித்தனர். ஆர்மடாவை எதிர்த்துப் போர் செய்த பிரிட்டிஷ் கடற்படையின் தளபதிதானும் ஓர் கத்தோலிக்கப் பிரபுவே என்ருல் வேறு கூறுவதென்ன?

எலிசபெத் இராணிக்குப் பின்னர் முதலாவது ஜேம்ஸ் என்பவன் அரசனுனன். இவன் ஸ்கொத்லாந்தில் பிறந்து அங்கேயே வளர்ந்தவன்; ஆகவே ஆங்கிலப் பழக்க வழக்கங்களுக்கும் மரபுக்கும் அவன் அந்நியனுக இருந்தான். ஆங்கில மக்கள் அவனை இதன் பொருட்டு அவ்வளவாக விரும்பவில்லை. இன்னும், இவ்வரசன் தனது நிலைமை பற்றி ஓர்வித எண்ணமும் கொண்டிருந்தான். தான் அரசனுக வந்தது தேவ சம்மதத்தினுல், ஆகவே தான் தனது எண்ணப்படி எதனையும் செய்யலாம்; மற்றவர்கள் அதனை ஆட்சேபிக்கக் கூடாது என அவன் எண்ணினுன். அரசாங்க அலுவல்களையும், திருச்சபைக் கருமங்களையும் நிருவகிப்பது தனது கடமை, அதில் மற்றவர்கள் பிரவேசிக்கக் கூடாது என்று அவன் பாராளுமன்றத்துக்குக் கூறினுன். அதற்கு உத்தரமாகப்பாராளுமன்றம் "அரசன், அரசாங்கம், நாடு என்பவற்றைப் பாதுகாப்பது, இங்கிலாந்துத் திருச்சபையை நிருவகிப்பது, சட்டங்களை ஆக்கி அநுட்டானத்துக்குக் கொண்டுவருவது என்னும் இன்னேரன்ன விஷயங்கள் பாராளுமன்

றத்தில் ஆலோசிக்கப்பட வேண்டும்; பாராளுமன்றம் செய்யும் தீர்மானப்படி நிருவகிக்கப்படல் வேண்டும்." என்று மிக்க நேசபான்மையுடன் கூறியது. தான் யதேச்சாதிகாரியாகக் கருமம் ஆற்றுவதைத் தன் பிரசைகளின் பிரதிநிதிகள் ஆட்சேபிப்பதை ஜேம்ஸ் முதன் முதலாகக் கண்டான். ஆனால் இப்படி இவர்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்பதை அவன் ஒருபோதும் உணராது தனது அரசியலை ஒருவாறு நடத்தினான்.

முதலாவது ஜேம்சுக்குப் பின் அவனது மகனான முதலாவது சால்ஸ் சிம்மாதனமேறினான். அவனும் பாராளுமன்றத்தைப் புறக்கணித்துத் தன்மனம் போனபடி கருமம் ஆற்ற முனைந்தான். அவன் பல அந்நிய நாட்டு யுத்தங்களிலும் ஈடுபட அவற்றுக்குப் பணம் வேண்டியதாக இருந்தது. ஆனால் அப்பணத்தைப் பாராளுமன்றம் அநுமதிக்க மறுத்தது; ஆகவே அவன் தனக்கு வேண்டிய பணத்தைப் பலவந்தக் கடன்கள் மூலமாகவும் வரிகள் மூலமாகவும் பிரசைகளிடம் இருந்து யதேச்சாதிகாரமாக அறவிட்டான். இக்கடன்களையும் வரிகளையும் பாராளுமன்றம் அநுமதிக்காதபடியினால் அவை சட்டவிரோதமானவை.

1628-ம் ஆண்டில் சால்ஸ் "உரிமைப் பெட்டிசம்"[1] என்ற ஓர் சாதனத்துக்குத் தன்கையொப்பத்தை இட வேண்டியவனானான். தான் விரும்பியவாறு செய்ய முடியாது என்பதை உணர்ந்த அவன் தன் பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதாக இதன் மூலம் வாக்களித்தான். உதாரணமாக, முன்பெல்லாம் தனது சேனைகள் தங்கு

---

1. Petition of Right

தற்கு அவன் கேள்விமுறையில்லாமல் எவருடைய வீட்டையேனும் உபயோகிக்கலாம் என்று உத்தரவிட்டிருந்தான். ஒருவனுடைய வீடு அவனுக்கு அரண்; அதற்குள் அவனுடைய அநுமதியில்லாமல் எவரும் நுழையக் கூடாது என்பதுதான் ஆங்கில மக்களின் அபிப்பிராயம். இதனை மீறி சால்ஸ் கருமங்கள் ஆற்றியமை அவர்களுக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. உரிமைப் பெட்டீசத்துக்கு ஒப்பம் இட்டதன் மூலமாக சால்ஸ் தான் இனி அவ்வாறு செய்வதில்லை என்று உறுதி கூறவேண்டி ஏற்பட்டது. தான் நினைத்தபடி கருமம் ஆற்ற முடியாது என்பதை ஒரு யதேச்சாதிகார அரசன் ஒத்துக்கொள்ளச் செய்த மகா சாதனம் உரிமைப் பெட்டீசம் என்பதை நாம் நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சால்சின் சர்வாதிகார முறை ஸ்கொத்லாந்து மக்களுக்குப் பிடிக்கவில்லை. ஸ்கொத்லாந்து வாசிகள் தம் ஆராதனையின்போது தேவாலயங்களில் அங்கிளிக்கன் செபப் புத்தகத்தை உபயோகிக்க வேண்டும் என சால்ஸ் கட்டளையிட்டான். ஸ்கொத்லாந்து மக்கள் கல்வின் என்பவர் போதித்த பிறெஸ்பிற்றீரிய புரொட்டெஸ்தாந்த மதத்தை அநுட்டித்தவர்கள். அங்கிளிக்கன் செபப் புத்தகம் கத்தோலிக்கச் சார்புடையது என்பது தான் அவர்கள் கொண்டிருந்த சித்தாந்தம்! எனவே அப் புத்தகத்தைத் தம் தேவாலயங்களில் உபயோகிக்க முடியாது என்று கூற, சால்ஸ் அதனல் வெகுண்டு அவர்களைப் பலாத்கார முறைகளால் அடக்க முயன்றான். உடனே ஸ்கொத்லாந்து மக்கள் கலகம் செய்து படையெடுத்து இங்கிலாந்துக்குள்ளே நுழைந்தனர். இதனைக் கண்ட சால்ஸ் கலங்கினான். ஸ்கொத்லாந்துப்படைக

ளைத் தடுக்கச் சேனை திரட்ட வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய பணம் அவனிடம் இருக்கவில்லை. எனவே பணத்தைப் பெறுதற்காக அவன் பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்பட்டது; இப்பாராளுமன்றம் 1640-ம் ஆண்டில் கூடி 20 ஆண்டு காலமாக நிலைத்தது. இதனால் அதனை **நெடுங்காலப் பாராளுமன்றம்**[1] என்று சரித்திரகாரர் கூறுவர்.

வெகு சீக்கிரத்தில் பாராளுமன்றத்துக்கும் அரசனுக்குமிடையே பிணக்குகள் தோன்றின. அரசன் இது வரை யதேச்சாதிகாரியாகக் கருமம் ஆற்றுதற்குத் துணைக் கருவிகளாக இருந்த நட்சத்திரக்கூட நீதிமன்றத்தையும் ஏனைய நீதிமன்றங்களையும் பாராளுமன்றம் ஒழித்தது. இன்னும், தனது அநுமதியின்றிப் பிரசைகளிடம் இருந்து எவ்விதமாகவேனும் பணம் சேகரிப்பது சட்ட விரோதம் என்றும் விதித்தது. தேசத்தின் கொள்கையை வகுப்பதும் வரிகளை விதிப்பதும் பாராளுமன்றம் என்னும் பொதுசனத் தாபனத்தின் கடமை என்பதை ஆங்கில மக்கள் குறித்த நெடுங்காலப் பாராளுமன்றத்தின் மூலம் தெளிவாக அரசனுக்கு எடுத்துக் காட்டினர், இன்னும், அரசனது கொடுங்கோன்மையிலிருந்தும் மக்களைக் காப்பாற்றும் கடமை தனதே என்பதையும் பாராளுமன்றம் மன்னனுக்குத் தெருட்டியது.

அரசனானவன், பாராளுமன்றத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களையே தனது மந்திரிமாராக நியமிக்க வேண்டும்; மற்றவர்களைத் தனது எண்ணப்படி மந்திரிமாராக நியமிக்க வொண்ணாது என்பதை முதலாவது சால்சுக்குத் தெருட்ட பிரிட்டிஷ் பாராளுமன்றம் அடுத்

1. Long Parliament

ததாக முனைந்து கருமம் ஆற்றியது. சால்சின் மந்திரிக ளில் முதல்வனாக விருந்த ஸ்ராபோட்[1] பிரபுவை அது சிறையாக்கி விசாரணை செய்து அவனுக்கு மரணதண்டனையும் விதித்தது. தன் துணைவனுக்கு நேர்ந்த கதியைத் தடுக்க மன்னனால்முடியவில்லை. இதன் பின் அவன் பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் பல ரைச் சிறை செய்ய முயன்று அதிலும் பிரதிகூலம் அடைந்தான். சால்சின் இத்தகைய கருமங்களால் லண் டன் மாநகர மக்கள் கொதித்தெழுந்தனர் உடனே அவன் பயந்து நகரத்தை விட்டு ஓடினான். நாடு இரண்டு பட்டது; பாராளுமன்றம் ஒருபக்கமாகவும் சால்ஸ் ஒரு பக்கமாகவும் பரஸ்பரம் மாறுபட்டு நின்றனர். லண் டன் வாசிகளும் மத்திய வகுப்பினரும், அரசனின் யதேச் சாதிகாரத்தைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தவர்களும் பாராளுமன்றத்தின் பக்கமாக நின்றனர். மன்னனின் அதிகாரங்கள் குன்றுவதைச் சகிக்காதவர்களும் பியூரித்தானியரை[2] வெறுத்தவர்க ளுமான பிரபுக்கள் அரசன் பக்கமாக நின்றனர்.

இவ்வாறாக அரசனுக்கும் பாராளுமன்றத்துக்கு மிடையே ஆரம்பித்த உள்நாட்டு யுத்தம் 1642-ம் ஆண்டு தொடக்கம் 1649-ம் ஆண்டு வரை நிகழ்ந்தது. யுத்த முடிவிலே சால்ஸ் சிறையாக்கப்பட்டு கொலைத் தண் டனை விதிக்கப்பட்டான். சால்ஸ் நல்ல மனிதன்தான். ஆனால் துர்அதிர்ஷ்டசாலி என்றே கூற வேண்டும்.

---

1. Earl of Stafford

2. கல்வினின் கொள்கைகளையும், மதவைராக்கியம் கொண்ட ஏனைய புரொட்டெஸ்தாந்தரையும் சால்ஸின் பக்கத்தினர் பியூரித்தானியர் என வழங்கினர்.

அவன் கொலை செய்யப்பட்ட பின் இங்கிலாந்து ஓர் குடியரசானது. பாராளுமன்றத்துப் படைகளுக்குத் தலைமைதாங்கி சால்சின் சேனைகளை முறியடித்த ஒலிவர் குரொம்வெல்¹ நாட்டின் பாதுகாப்பதிகாரி ஆனான்². அவன் 1653-ம் ஆண்டு தொடக்கம் 1658-ம் ஆண்டு வரையில் உறுதியுடன் நாட்டைப் பரிபாலித்தான். அவன் பரிபாலன விஷயமாக இங்கிலாந்துக்கு அருந் தொண்டு ஆற்றினன். அவன் கைக்கொண்ட அந்நிய நாட்டுக் கொள்கையினல் இங்கிலாந்தின் அந்தஸ்து வெகுவாக உயர்ந்தது. 1658-ம் ஆண்டில் அவன் இறக்க அவனுடைய மகன் பாதுகாப்பதிபனுக வந்தான். அவன் தன் தந்தையைப் போலத் திறமை வாய்ந்தவனல்லன். ஓர் நாட்டை ஆளுவதற்கான ஆற்றலும் அவனிடம் இருக்கவில்லை. அத்துடன் ஆங்கில மக்கள் குரொம்வெல் காலம் தொடக்கம் இருந்த இராணுவ ஆட்சியில் சலித்து பழைய முடியாட்சியை விரும்பினர். அவர்களுடன் பழைய மன்னன் பரம்பரையில் விசுவாசம் கொண்டாரும் சேர்ந்து முதலாவது சால்சின் மகனுகிய இளவரசனைக் கூப்பிட ஏற்பாடுகள் செய்தனர். இக் காலத்தில் அவ்விளவரசன் தன் சொந்த நாட்டை விட்டு அந்நிய நாடுகளில் வசித்து வந்தான். 1660-ம் ஆண்டிலே அவன் ஆங்கில மக்களின் அழைப்புக்கிணங்கிவர, அவர்கள் அவனை அகமகிழ்வுடன் வரவேற்று இரண்டாவது சால்ஸ் என்று அவனை அரசனுக்கினர். இவ்வாருக அரசனுகிய சால்சும் அவனுக்குப் பின் அரசனுகிய இரண்டாவது ஜேம்சும் கத்தோலிக்க மதத்தில் அத்தரங்க பக்தி கொண்டவர்கள். எனவே அவர்கள் அம்மதத்தை மீண்டும்

---

1. Oliver Cromwell 2. Lord Protector

செல்வாக்குடன் வைக்கவேண்டும் என்றும் யதேச்சாதிகாரிகளாகத் தாம் விளங்க வேண்டும் என்றும் இரகசியமான முயற்சிகள் செய்தனர். இரண்டாவது ஜேம்ஸ் தனது எண்ணப்படி பல கருமங்களைச் செய்ய முற்பட்டான். தான் விரும்பியவர்கள் விஷயத்தில் பாராளுமன்றச் சட்டங்கள் அநுட்டிக்கப்படுவதைத் தடுக்கவும் முயன்றான். இதனால் ஆத்திரமடைந்த பிரசைகள் அவனை நாட்டைவிட்டுத் துரத்தினர்.

இரண்டாவது ஜேம்சின் புதல்வியரில் ஒருத்தியாகிய மேரி என்பவள் ஆரஞ்சி வம்ச வில்லியம்[1] என்ற புரொட்டெஸ்தாந்த இளவரசனை மணந்திருந்தாள். ஆகவே ஜேம்சின் அரசை வில்லியத்துக்கும் மேரிக்கும் வழங்க பாராளுமன்றம் தீர்மானித்து 1689-ம் ஆண்டில் அவ்வாறே செய்தது. இத்துடன் இங்கிலாந்திலே யதேச்சாதிகார மன்னராட்சி முறை மறைய வரம்புடை முடியாட்சி முறை தோன்றியதெனலாம். வில்லியம் மேரி என்பவர்கள் அரசன், அரசியானதும் உரிமை மசோதா[2] என்ற ஓர் மசோதாவைப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. தேசத்தை ஆளும் அரசனோ அரசியோ யதேச்சாதிகாரமாக நடக்கக்கூடாது; தாம் விரும்பியவாறு சட்டங்களைத் தவிர்க்கக் கூடாது; தாம் விரும்பியவர்கள் விஷயத்தில் சட்டங்கள் அநுட்டிக்கப்படுவதைத் தடுக்க வொண்ணாது; பாராளுமன்றத்தின் அநுமதியில்லாமல் அரசன் சேனையை வைத்திருக்கக்கூடாது; வரியறவிடக்கூடாது; விசாரணை செய்யாமல் எவனுக்கும் சிறைத் தண்டனை விதிக்கவொண்ணாது; ஒருவனைச் சிறையாக்கினால், அவன் செய்த குற்றம் பற்றி கூடிய

1. William of Orange 2. Bill of Rights

சீக்கிரம் விசாரணை செய்தபின்தான் அவனை விடுதலையாக்க வேண்டும், அல்லது தண்டிக்க வேண்டும்என்றின்னோரன்ன விதிகள் உரிமை மசோதாவில் காணப்பட்டன. இவ்விதிகளுக்குத் தாம் இணங்கி நடப்பதாக வில்லியமும் மேரியும் உறுதி கூறினர். இவ்வாறாக இங்கிலாந்திலே மன்னருக்கிருந்த யதேச்சாதிகாரங்கள் ஒழிய அவர்கள் நாட்டுச் சட்டங்களுக்கிணங்கப் பரிபாலிக்க வேண்டும் என்ற முறை ஏற்பட்டது.

யதேச்சாதிகார அரசியன் முறையை ஒழித்து, ஆளப்படும் பிரசைகளின் சம்மதத்துடனேயே மன்னர் தம் பரிபாலனத்தை நடத்த வேண்டும் என்ற முறையை ஏற்படுத்திய நாடுகள் இரண்டு என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அவற்றுள் ஒல்லாந்து ஒன்று. இந்நாடு தன்னை அடக்கியாண்ட ஸ்பெயினுடன் ஓர் கோர யுத்தத்தை நிகழ்த்தித் தனது சுதந்திரத்தை ஈட்டிக்கொண்டது. அதன்பின் அங்கே ஓர் **சமஷ்டிக் குடியரசு** [1] ஏற்பட்டது இக்குடியரசில் பதினேழு நாடுகள் இருந்தன. இவை அனைத்தும் ஒன்று கூடிக் குடியரசாயின. குடியரசின் தலைவர் **ஸ்ராட்ஹோல்டர்** [2] என வழங்கப்பட்டார். குடியரசுப் பாராளுமன்றம் "**எஸ்ரேற்ஸ் ஜெனரல்**" 3 என வழங்கப்பட்டது.

யதேச்சாதிகார முறைக்கு அழிவு தேடிய மற்ற நாடு இங்கிலாந்து. அங்கே யிருந்த பாராளுமன்றம் ஓர் மன்னனுக்கு விரோதமாக யுத்தம் செய்து அவனைக் கொன்று இன்னொரு மன்னனை நாட்டினின்றும் துரத்தியது. இதன் பின் தனது எண்ணப்படி பரிபாலனத்தை

1. Federal Republic 2, Stadtholder3, Estates General

நடாத்த ஒப்புக்கொண்ட ஒருவனை இங்கிலாந்தின் மன்னனாக்கியது. அரசன் பரிபாலிக்கும் முறையை இங்கிலாந்து ஒழிக்கவில்லை. அவனுடைய யதேச்சாதிகார முறைக்குத்தான் அது முற்றுப்புள்ளியிட்டது

வினா

1. இங்கிலாந்திலே மன்னருக்கிருந்த யதேச்சாதிகாரத்தை மக்கள் எவ்வாறு கட்டுப்படுத்தினர் என்பதைக் கிரமப்படி விளக்குக.

9-ம் அதிகாரம்

யதேச்சாதிகார மன்னர் - நல்லாட்சி புரிந்த யதேச்சாதிகாரிகள் 1600-1800

யதேச்சாதிகார மன்னர் ஆட்சி புரிந்த ஏனைய நாடுகளைப்பற்றி இனி ஆராய்வாம். இதுபற்றி நாம் ஓர் விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது மத்திய வகுப்பினர் யதேச்சாதிகார மன்னரால் நசுக்கப்பட்ட இடங்களிலெல்லாம் அவர்கள் மன்னரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தக் கருமம் ஆற்றினர் என்பதே. பிரபுக்கள் மக்களை வருத்த, அப்பிரபுக்களை யடக்கக் கூடிய உறுதியான மன்னரை அம்மக்கள் நாடி ஆதரவு அளித்தனர். இவ்வாறே இங்கிலாந்திலே தியூடர் வம்ச அரசு தேசம் முழுவதிலும் ஒற்றுமை ஏற்படுத்தி உறுதியான தேசிய அரசாங்கத்தை உருவாக்கியது.

பிரான்ஸ்

ஆனால் யதேச்சாதிகார மன்னர்கள் ஓர் காலத்தில் மத்திய வகுப்பு மக்களின் உரிமைகளை நசுக்கவும் கொடுங்கோலாட்சி புரியவும் தலைப்பட்டனர். இங்கிலாந்து, ஒல்லாந்து போன்ற நாடுகளில் இப்படியான நிலைமை ஒன்று ஏற்பட்டது. ஆனால் இந்த விதமான யதேச்சாதிகார மன்னர்களின் அதிகாரக் கர்வத்தை ஆங்கிலரும் ஒல்லாந்தரும் எவ்வாறு அடக்கினர் என்பதை நீங்கள் ஏற்கெனவே படித்திருக்கிறீர்கள். ஐரோப்பாவின் ஏனைய பல நாடுகளில் இப்படியான நிலைமை அதே காலத்தில்

ஏற்படவில்லை. அங்கு வாழ்ந்த மக்களில் பெரும்பான்மையோர் கிராமங்களில் வசித்து, பழைய மானிய முறையிலேயே தம் பிரபுக்களின் நிலங்களில் வேலை செய்து வந்தனர். இப்பிரபுக்களிற் பலர் வன்கணாளர். ஈவிரக்கமற்றுத் தம் நிலங்களில் இருந்த குடியானவர்களை வருத்தினர். அவர்களுக்குப் பரந்த நிலங்கள் பல இருந்தன. இவற்றிலே குடியானவர்கள் கேவலம் அடிமைகள்போல வாழ்ந்து உழைத்து அப்பிரபுக்களுக்குச் சேவை செய்தார்கள். இத்தகைய கேவலமான நிலை இருந்த நாடுகளிலே ஓர் பலமான மன்னன் தோன்றி பிரபுக்களை அடக்கி குடியானவர்களைப் பாதுகாப்பானாயின் அவனை ஓர் மகா மன்னன் என்றுதான் மக்கள் போற்றினர். உள்ளூர்ப் பிரபுக்களின் கொடுமைகளால் தவித்த குடியான மக்கள் தம்மை இப்பிரபுக்களிடம் இருந்து பாதுகாக்கக் கூடிய உறுதியான மன்னன் ஒருவன் வரமாட்டானோ என்று அங்கலாய்த்திருந்தார்கள். அப்படிப்பட்டவன் கொடுங்கோலனாக விருந்தாலும், அக்கொடுங்கோன்மையால் அவர்கள் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை. இதனால்தான் ஐரோப்பாவிலே யதேச்சாதிகார மன்னர் நெடுங்காலம் ஆண்டு வந்தனர். பொதுசனங்களை அவர்கள் ஒறுத்து வருத்தாது இருக்கும்வரையில் அவர்கள் அச்சமின்றி வாழ்ந்தனர்.

இனி, பிரான்சில் அக்காலத்திருந்த நிலையை ஆராய்வாம். இந்நாடு விவசாயத்துக்கே ஏற்ற நாடாக இருந்தபடியால் அங்கிருந்த மக்களுட் பெரும்பாலோர் விவசாயிகளாகவே இருந்தனர். அவர்கள் தமக்கெனச் சொந்தமாக நிலங்கள் வைத்திருக்காது பரம்பரைப் பிரபுக்களின் நிலங்களில் உழைத்து வந்தனர். இப்பிரபுக்கள் நாட்டுப்புறங்களில் இராச்சியத்துக்கு வேண்டிய பரிபா

லனக் கருமங்களைச் செய்தவர்கள். அதற்குப் பிரதியுபகாரமாகவே இந்நிலங்கள் அவர்களுக்கு மன்னர்களால் மானியமாக வழங்கப்பட்டன. ஒவ்வொரு பிரபுவும் ஒவ்வொரு பிரதேசத்துக்குத் தேசாதிபதியாக விருந்து அரசனுக்குரிய வரிப்பை அறவிடல், ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டி மக்களைப் பாதுகாத்தல் ஆதியாம் கருமங்களைச் செய்ய வேண்டும் என மன்னரால் விதிக்கப்பட்டனர். ஆனல் அரசனுபினேன் வலியற்றவனுக இருந்தால், இப்பிரபுக்கள் அவனுக்கடங்காது தம் மனம் போனபடி கருமம் ஆற்றி வந்தனர். குடியானவர்களிடம் இருந்து எவ்வளவுக்கு அறவிட முடியுமோ அவ்வளவையும் அறவிட்டுப் பெரும் செல்வர்களுமாயினர்.

பிரான்ஸ் தேசத்தைச் செல்வம் செல்வாக்குள்ள நாடாகச் செய்த மன்னர்களில் 4-வது ஹென்றி ஒருவன். அவன் அரசனுக வந்த காலத்தில் பிரான்ஸ் உள்நாட்டுக் கலகத்தால் மிகவும் நொந்திருந்தது. கத்தோலிக்கரும் புரொட்டெஸ்தாந்தியரும் பரஸ்பரம் மாறுபட்டுப் பயங்கரமான யுத்தங்களைச் செய்தனர். கத்தோலிக்கருக்குத் தலைவராக கைஸ் கோமகனும் [1] றெயிம்ஸ் கருதினல் அதிமேற்றிராணியாராகிய லொறெயின் நாட்டு சால்சும் [2] இருந்தனர். பிரான்சில் இருந்த புரொட்டெஸ்தாந்தர் ஹியூகனொற்றுகள் [3] என வழங்கப்பட்டனர். இவர்களுக்குத் தலைவர்களாக நவாரே மன்னனும் [4], அவன் சகோதரனும் பிக்கார்டி தேசாதிபதி [5] யுமான கொண்டே கோமகன் [6] என்பவனும் இருந்தனர்.

---

1. Duke of Guise 2. Charles of Lorraine the Cardinal Archbishop of Rheims 3. Hugenots 4. King of Navarre 5. Governor of Picardy 6. Duke of Conde

இந்த உள்நாட்டு யுத்தத்தின் பயனாக 1572-ம் ஆண்டு ஓகஸ்ற் மாதத்தில் பரிஸ் நகரத்திலே புரொட்டெஸ்தாந்தர் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர். இதனால் ஆத்திரம் கொண்ட பிரான்சின் புரொட்டெஸ்தாந்தர் எதுதான் நேர்ந்தாலும் யுத்தத்தினை இனிக் கடைசி வரை விடுவதில்லை எனச் சபதம் செய்து கொதித்தெழுந்தனர். கத்தோலிக்கரும் ஏட்டிக்குப் போட்டியாக ஓர் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்தினர். இதற்கு ஸ்பானிய மன்னன் பேராதரவாளனாக இருந்தான். 1593-ம் ஆண்டு வரை கோரமான இந்த உள்நாட்டு யுத்தம் உக்கிரமாக நடந்தது. ஆயிரக்கணக்கானோர் இருதரப்பிலும் மாண்டனர். பல பிரபுக்கள் உயிரிழந்தனர். ஈற்றில் நவாரே நாட்டு ஹென்றி அரசனானான். இவன் புரொட்டெஸ்தாந்த மதத்தவன்; ஆனால் அரசனாக வந்ததும் அவன் தான் இதுவரை அநுட்டித்து வந்த மதத்தை விடுத்து கத்தோலிக்கனானான். ஹென்றி அரசனுக்கேற்ற சகல நற்குணங்களும் வாய்க்கப்பெற்றவன். அவன் தன் பிரசைகளின் சேமாபிவிருத்தியையே நோக்கமாகக்கொண்டான். ஸல்லி[1] என்ற ஓர் சிறந்த அரசியல் வாதி அவனுக்கு முதன் மந்திரியாக அமர்ந்து பெருந் துணை புரிந்தான். இவ்விருவரதும் பெரு முயற்சியால் பிரான்சில் வியாபாரம், விவசாயம் என்பன விருத்தியாகின. பல ரோட்டுக்கள் நிருமாணிக்கப்பட்டன. சகதி நிலங்கள் நன்னிலங்களாக்கப்பட்டன. பட்டு உற்பத்தித் தொழில் போன்ற பல கைத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. உள்நாட்டுக் கலகங்களால் இதுவரை நலிந்து பணமுடைப்பட்டிருந்த பிரான்ஸ் ஹென்றியின் பரிபா

1. Sully

லன காலத்தில் செல்வ நிலையை வெகு துரிதமாக அடைந்தது. அரசாங்க வருமானம் அதிகரித்தது. ஆகவே அரசாங்கத்துக்கிருந்த கடன் சுமைகளும் நீங்கின.

சமயச் சண்டைகளால் பிரான்ஸ் மக்களின் மனம் புண்பட்டிருந்தது. இதனை ஆற்றவேண்டும் என்று ஹென்றி துணிந்து நான்ரிஸ் கட்டளை[1] என்ற ஓர் சமரச உடன்பாட்டைச் செய்தான். இதன் பயனாகக் குறித்த சில பட்டணங்களில் புரொட்டெஸ்தாந்தருக்கு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. கத்தோலிக்கருடன் சம உரிமைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன அத்துடன் அவர்கள் தங்கள் பாதுகாப்பின் பொருட்டு நூறு பட்டணங்களை அரண் செய்து கொள்ளலாம் என்பதும் அங்கீகரிக்கப்பட்டது. ஒரே அரசாங்கத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சமயத்தவர்கள் இருக்கலாம்; அவற்றை அரசாங்கம் கணிக்கலாம் என்பதை நான்ரிஸ் கட்டளை காட்டியது.

1610–ம் ஆண்டில் ஓர் கத்தோலிக்க மதவெறியன் ஹென்றியைப் படுகொலை செய்ய அவனுடைய மகன் 13–வது லூயி என்ற பெயருடன் அரசனானான். அவன் மனவலிமையற்றவன்; ஆனால் சிறந்த அரசியல் வாதியான கருதினல் றிச்செல்யூ[2] என்பவனைத் தனது முதல் மந்திரியாக அவன் கொண்டிருந்தான். றிச்செல்யூவின் உதவி இருந்திருக்கா விட்டால் லூயி அநுகூலமாகத் தன் அரச கடமைகளைச் செய்திருக்க மாட்டான் என்றும் கூறலாம்; பிரபுக்களுக்கிருந்த அதிகாரத்தைக் கெடுத்து, பிரான்ஸ் மக்கள் எல்லாரையும் ஒன்று சேர்த்து ஓர் அர

1. Edict of Nantes 2. Cardinal Richelieu

சலின் ஆணையின் கீழ் அவர்கள் எல்லாரையும் கொண்டு வர ரிச்செல்யூ நிச்சயித்தான். பிரபுக்கள் தங்கள் கோட்டை கொத்தளங்களை இடித்துவிடவேண்டும் என அவன் கட்டளையிட்டான். உள்ளூர்ப் பரிபாலன விஷயங்களில் அவர்களுக்கிருந்த அதிகாரம் பறிக்கப்பட்டது. அவர்கள் இதுவரை வகித்து வந்த கருமங்களை இதற்கென நியமிக்கப்பட்டுள்ள வேறான அரசாங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்தான். இவ்வதிகாரிகள் பிரபுக்கள் குழுவைச் சேராதவர்கள்; அரசனால் நியமிக்கப்பட்டு அரசனுக்கே பொறுப்பும் விசுவாசமும் கொண்ட சிவில் சேவிஸ் அதிகாரிகளாக இவர்கள் காலகதியில் வந்தனர். இப்படியான முறையினால். பிரபுக்கள் இதுவரை அனுபவித்துவந்த அதிகாரங்கள் யாவும் பறிக்கப்பட்டன. ரிச்செல்யூ இவ்வளவுடன் திருப்திப்படவில்லை; பிரபுக்கள் இனிமேல் எப்போதாவது ஒற்றுமை கொண்டு கிளர்ந்தெழுந்தாலும் அவர்களை அடக்குதற்குச் சக்திவாய்ந்த ஓர் சிறந்த கடற்படையினையும், தரைப்படையினையும் அவன் அமைத்தான். அக்காலத்திலே பிரான்சிலே இருந்த ஹியூகனெற்றுகள் என்னும் புரொட்டெஸ்தாந்தர் அரண் செய்த சில பட்டணங்களை வைத்திருக்கலாம் என முன்பு அநுமதிக்கப்பட்டதை ரிச்செல்யூ நீக்கி அப்பட்டணங்களை அரசாங்கத்தின் பொறுப்பில்விட்டான். இன்னும், அவன் புரொட்டெஸ்தாந்தருக்கிருந்த அதிகாரங்களையும் சிதைத்தான். இவ்வாறாக பிரான்ஸ் முழுவதிலும் அரசன் ஆணையைப் பரவச் செய்தான்.

13-ம் லூயிக்குப் பின்னர் 14-வது லூயி அரசனானன். முந்திய ஆட்சியில் கையாளப்பட்ட கொள்கையினை 14-வது லூயியும் கைக்கொண்டு ஐரோப்பிய நாடுகளில் பிரான்சே மிகப் பராக்கிரமமும் செல்வாக்கும்

உடைய நாடாக விளங்கச் செய்தான். அவன் மிக்க திறமைசாலி; அத்துடன் கருமமே கண்ணுகிச் சலியாது உழைப்பவன். "உழைப்பே ஊதியம் தரும்: அரசன் எனப்படுவோன் சலியாதுழைக்க வேண்டும்" என்னும் கருத்துப்பட அவன் ஒரு முறை கூறியதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. 14-வது லூயி சிறந்த அரசியல் ஞானிகளைத் தனது அமைச்சராக நியமித்தான். அவர்களில் கோல்பேட்[1] என்பவன் ஒருவன். கொல்பேட் ஓர் வர்த்தகரின் மகனுய் வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டுப் பணம் சம்பாதித்தவன். அவன் அமைச்சனுக வந்ததும், நேர்மையற்ற அதிகாரிகளையும், அரசனின் சேவைக்கு உதவாதவர்களையும் பதவிகளில் இருந்து நீக்கினுன். காணிகள் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகளைக் குறைத்து குடியானவர்களுக்குச் சகாயம் செய்தான். கைத்தொழில்களை ஊக்குவித்துப் புறநாடுகளில் இருந்து கைத்தொழில் நிபுணர்களை வரவழைத்தான். இன்னும், ஆராய்ச்சிகள் செய்து புதுப் புது விஷயங்களைக் கண்டு பிடிப்போர்க்கு விசேஷ சன்மானங்களும் புது முயற்சிகளில் ஈடுபட்டு நாட்டின் செல்வத்தை விருத்தியாக்கும் துறைகளில் உழைத்தவருக்குத் தக்க வெகுமதிகளும் அவன் வழங்கினுன்.

ஓர் நாடு தான் இறக்குமதி செய்யும் பொருள்களிலும் பார்க்கக்கூடிய பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டும், அப்போதுதான் அது செல்வமுடையதாக விளங்கும் என்னும் கொள்கையை அக்கால ஐரோப்பிய அரசியல் வாதிகள் கொண்டிருந்தனர். ஏற்றுமதி செய்யும் பொருள்களின் பொருட்டுப் புறநாடு

1. Colbert

களில் இருந்து வரும் பணம் நாட்டுக்குச் செல்வ வளர்ச்சியைத் தரும் என்பது தான் அவர்களது சித்தாந்தம்; இதனையே கொல்பேட்டும் கொண்டிருந்தான். இன்னும், ஓர் தேசத்துக்குக்'காலனிகள்'என ஆங்கிலத்தில் வழங்கப்படும் குடியேற்ற நாடுகள் இருக்க வேண்டும் என்ற கொள்கையினையும் கொல்பேட் கொண்டிருந்தான் குடியேற்ற நாடுகள் தோட்டங்கள் போன்றவை. தோட்டங்களைக் கொண்டிருப்பவனுக்கு எப்படி வருமானம் கிடைக்கிறதோ அப்படியே குடியேற்ற நாடுகளை வைத்திருக்கும் நாடுகளுக்கும் வற்ருவருமானம் கிடைக்கும் என அவன் கொண்டிருந்தான். எனவே, இந்தியா, ஆபிரிக்கா, அமெரிக்கா போன்ற தூரித்த தேசங்களிலே குடியேற்ற நாடுகள் அமைக்கச் செய்யும் முயற்சிகளுக்கு கொல்பேட் பண உதவியும் ஈந்தான். நிலங்களை வழங்கும் முறையிலும், தெருக்களை அமைக்கும் முறையிலும் வரிகளை விதிக்கும் முறையிலும் அவன் புதிய வழிவகைகளைக் கையாண்டான். முன்னர், பிரான்சின் ஒரு பகுதியில் இருந்து இன்னேர் பகுதிக்கு ஏதும் பொருள் அனுப்பப்பட்டால், அதன்மீது பல இடங்களில் வரி விதிக்கப்பட்டது; உதாரணமாக தென் பிரான்சில் இருந்து பரிஸ் நகரத்துக்கு உவைன் எனப்படும் திராட்சை ரசம் அனுப்பப்பட்டால் அது பல பகுதிகளுக்கூடாக வர வேண்டும்; ஒவ்வொரு பகுதியிலும் அதற்கென வரி விதிக்கப்படும். இப்படியாகப் பல இடங்களில் வரிவிதிக்கப்பட்டதால் அந்த உவைனின் விலை அதிகமாக உயர்ந்தது. இவ்வாருன ஓர் முறையினுல் உள்ளூர் வர்த்தகம் முன்னேருது தடைப்பட்டது; கொல்பேட் இந்தச் சீர்கேடான வரி விதிப்பு முறையை ஒழித்தான்.

பிரான்சின் கடல் கடந்த வர்த்தகத்தைக் காப்பதற்காக கொல்பேட் பராக்கிரமம் வாய்ந்த ஓர் கடற்படையினையும் நிருமாணித்தான். இப்படியான அரசியற் கருமங்களுடன் மாத்திரம் அவன் நின்றுவிடவில்லை. நுண்கலைகளை விருத்தியாக்கும் விஷயத்திலும் அவன் ஈடுபட்டு சித்திரம், சங்கீதம், சிற்பம். விஞ்ஞானம் ஆதியாம் கலைகளை மக்களுக்குத் தக்கவாறு போதிப்பதற்கென அருங் கலைக் கழகங்கள் பலவற்றையும் அவன் அமைத்தான்.

ஆனால் லூயி மன்னனிடம் ஓர் குறை இருந்தது. சிறந்த அமைச்சர்களிடம் இராச்சியப் பொறுப்பைக் கொடுக்காமையே அது. நான்ரிஸ் கட்டளை என்ற ஒழுங்கினை அவன் நிறுத்திக்கொண்டான். இந்த ஒழுங்கினால் பிரான்சிலே 100 ஆண்டுகள் வரை உள்நாட்டுக் கலகங்கள் இல்லாது சமாதானம் நிலவியது. தமக்கிருந்த வழிபாட்டுச் சுதந்திரம் இவ்வாறு பறிக்கப்பட்டதைக் கண்டு பயந்த புரொட்டெஸ்தாந்தர் பிரான்சை விட்டு நீங்கிப் புற நாடுகளுக்குப் போயினர். 300,000 புரொட்டெஸ்தாந்தர் இவ்வாறு தம் தாய்நாட்டை விட்டு வெளிப் போந்தனர் என்று கணிக்கப்பட்டது. இவர்களில் பெரும்பான்மையினர் நுண்தொழில்களில் வல்லுநர். தொழில் நிபுணரான இவர்கள் இவ்வாறாக வெளிப் போந்தமை பிரான்சுக்கே நட்டமாக முடிந்தது.

14-வது லூயி ஒரு பராக்கிரமம் வாய்ந்த சேனையை வைத்திருந்தான். ரியூறேன்[1], வோபன்[2] போன்ற அதி சிறந்த இராணுவ வீரர்கள் இச்சேனைக்கதிபதிகளாக இருந்தனர். மற்றும் ஐரோப்பிய நாடுகளைத் தாக்கி

1. Turenne 2. Vauban

வெற்றி கொண்டு அதன்மூலமாகப் பிரான்சை அதிபராக்கிரமம் வாய்ந்த நாடாகச் செய்ய லூயி தனது சிறந்த சேனையை உபயோகித்தான். றைன் நதியையே பிரான்சின் எல்லையாகக் கொள்ளுவதற்கு, அதற்கும் பிரான்சுக்கும் இடையில் இருந்த இடங்களை பிரான்சுடன் சேர்ப்பதற்காக அவன் ஒல்லாந்துடனும் பலற்றினேற் இராச்சியத்துடனும் போர் செய்தான். ஸ்பெயின் மன்னன் தான் இறக்கும்போது தனது இராச்சியத்தை 14-வது லூயியின் பௌத்திரனாகிய ஒருவனுக்கு எழுதிவைத்தான். எனவே, ஸ்பெயின், பிரான்ஸ் என்னும் இரண்டு இராச்சியங்களையும் ஒன்று சேர்த்து ஐரோப்பாவில் மிகப்பராக்கிரமம் வாய்ந்த ஓர் இராச்சியத்தைத் தாபிக்க லூயி எண்ணினான். இப்படியான எண்ணம் சித்தியடைந்தால் ஐரோப்பாவிலே சமபலக் கொள்கை நாசமாகி விடும் என்பதைக் கண்ட இங்கிலாந்து, ஒல்லாந்து, பிரான்டென்பர்க் ஆகிய நாடுகளுடன் சேர்ந்து பிரான்சுக்கு விரோதமாகப் போர் செய்தது. இந்த யுத்தம் 1713-ம் ஆண்டில் முடிந்தது. யுத்த முடிவில், பிரான்ஸ், ஸ்பெயின் இராச்சியங்களை ஒன்றுக்குவதில்லை என்று 14-வது லூயி உறுதி கூற வேண்டி ஏற்பட்டது.

இவ்வாறாக அடிக்கடி ஏற்பட்ட யுத்தங்களால் பிரான்ஸ் நொந்தது. வரிகளாக மக்களிடம் இருந்து அறவிடப்பட்ட பணம் பயன்றரா யுத்தங்களின் பொருட்டும், அழகான கட்டிடங்களின் பொருட்டும், புலநுகர்ச்சிப் பொருள்களின் பொருட்டும், பொழுதுபோக்குக்களின் பொருட்டும் விரயமாக்கப்பட்டது. "மகா மன்னன்" எனப்பட்ட லூயியை டாம்பீகப் பிரபுக்கள் சூழ்ந்தனர். இவர்கள் நாட்டுப்புறங்களில் தமக்கிருந்த நிலம்புலங்களை ஈவிரக்கமற்ற பிரதிநிதிகள் பொறுப்பில் விடுத்து

பரிஸ் நகரத்துக்கு வந்து மன்னன் மாளிகையில் நடக்கும் கேளிக்கைகளிற் கலந்துகொண்டனர். இக்கேளிக்கை வைபவங்களுக்கும் யுத்தச் செலவுகளுக்குமாக மேன் மேலும் வரிவிதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இத ஞல் மத்திய வகுப்பு மக்களும்குடியானவர்களும் பெரிதும் துன்பப்பட்டனர் இவை யாவற்றையும் லூயி உணர்ந் தான். அவன் தன் மரணப் படுக்கையில் இருந்தபோது தன் மகனை நோக்கி, 'மகனே, என்னைப் போல் நீயும் யுத்தங்களிலும் பெரிய கட்டடங்களிலும் ஆசைப்பட்டு பணத்தை விரயம் செய்யாதே. பிரசைகளின் கஷ்டங் களைக் குறைக்கப் பாடுபடுவாயாக'' என்று புத்தி கூறி ஞன். லூயி தன் சீவிய காலத்தில் செய்த தீமைகள் அவன் மரணத்துடன் ஒழியவில்லை. அவை ஓர் அரசியற் புரட்சிக்கே பிரான்சை இட்டுச் சென்று அந்நாட்டிலே முடியாட்சி முறைக்கு முடிவு கட்ட ஏதுவாக இருந்தன.

பிரஷியா

பிரஷியா ஆரம்பத்தில் ஒரு ஜெர்மன் இராச்சியமாக இருக்கவில்லை. மத்திய காலத்திலே இருந்த சில **தியூற்றன் வீரர்** 1 அங்கே சென்று குடியேறினர். 1618-ம் ஆண்டில் **கோஹன்ஸோலர்ண் வம்ச** 2 இளவரசன் ஒருவன் அதற்குக் குறுநில மன்னனுஞன். அவன் பிரஷியாவுடன் பிரான்டென்பர்க் குறுநிலத்தையும் பரிபாலித்தான். இதன்பின் பிரான்டென்பர்க், பிரஷியா என்ற இரு குறுநிலங்களும் ஒரே அரசனுல் பரிபாலிக்கப்பட்டு வந்தன. 1640-ம் ஆண்டு தொடக்கம் 1688-ம் ஆண்டு வரை **பிரெடெரிக் வில்லியம்** 3 பிரான்டென்பர்க், பிரஷியா

1. Teutonic Knights 2. Hohenzolern Family
3. Frederick William

நாடுகளை அரசு செய்தான். இவனை மகா எலக்ரர்[1] என்று சரித்திர நூலார் கூறுவர். அக்காலத்திலே மத்திய ஐரோப்பாவில் பராக்கிரமம் படைத்து ஆஸ்திரியாவைப் பரிபாலித்த ஹாப்ஸ்பர்க் வம்ச மன்னரது வல்லமையைச் சிதைப்பதில் பிரெடெரிக் வில்லியம் ஈடுபட்டான்.

அரசனுயினேன் ஆளப் பிறந்தவன்; அவன் காலாலிடும் பணியைப் பிரஜைகளாயினோர் தலையாற் சுமந்து செய்யவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தவன் பிரெடெரிக் வில்லியம். அக்காலத்து மன்னர்களிற் பலரும் இப்படியான ஓர் கொள்கையினையே கொண்டிருந்தனர். மக்களைக் கீழ்ப்படியச் செய்வதற்கு ஓர் பெரும் சேனையை பிரெடெரிக் திரட்டி வைத்திருந்தான். சட்டங்களை ஆக்குவதில் உதவி செய்ய ஓர் சபையும் அக்காலம் இருந்தது. ஆனுல் வில்லியம் பிரெடெரிக் இச்சபையை மாற்றி அமைத்து சட்டங்களை ஆக்குவதற்கும் தவிர்ப்பதற்கும் தானே சர்வாதிகாரி என விதித்தான். அரசர்களை ஆண்டவனே நியமிப்பவன்; ஆகவே கேவலம் பிரஜைகள் அவ்வரசனின் விஷயத்தில் தலையிடாது அவன் விதிக்கும் கட்டளைகளின்படி ஒழுக வேண்டும்; அப்படி ஒழுகாது விடுதல் பாவச் செயல் என்பது அவன் கொண்டிருந்த சித்தாந்தம்.

வில்லியம் பிரெடெரிக்கின் மகனுக்கும் பெயர் பிரெடெரிக். அவன் தன் தந்தை இறந்ததும் இராச்சிய பாரத்தை ஏற்றுன். 1701-ம் ஆண்டில் ஆஸ்திரிய சக்கரவர்த்தி அவனுக்குப் பிரஷியாவின் அரசன் என்ற பட்டத்தை வழங்க இதுவரை கேவலம் குறுநிலமாக இருந்த பிரான்டன்பர்க் அன்று தொடக்கம் பிரஷிய

1. Great Elector

இராச்சியம் என வழங்கப்படலாயிற்று. பிரெடெரிக் இறக்க அவனுடைய மகன் முதலாவது பிரெடெரிக் வில்லியம் என்பவன் அரசனானன். இவன் 1713-ம் ஆண்டு தொடக்கம் 1740-ம் ஆண்டுவரை பிரஷியாவைச் சிறப்புடன் பரிபாலித்தான். ஆனால் இவனை ஓர் அபூர்வ மனிதன் எனக் கூறுவர். தனது சொந்தத் தேவைகளின் பொருட்டுப் பணம் செலவழிக்காது தன்னை மிகவும் ஒறுத்து தனது இராச்சிய அலுவல்களிலேயே கவனம் முழுவதையும் செலுத்தினன். அவன் தன் பரிபாலனக் கருமங்களை உறுதியுடன் நடத்தி நாட்டின் செல்வத்தைப் பெருக்கும் நோக்குடன் விவசாயம், வர்த்தகம் என்பவற்றை விருத்தி செய்தான். மக்களின் கல்வி அறிவை வளர்க்கவேண்டிப் பல கலாசாலைகளை நிறுவினன். இவை எல்லாவற்றிலும் மேலாக அவன் பராக்கிரமம் வாய்ந்த இராணுவம் ஒன்றையும் அமைத்து வைத்தான். மனிதர் ஒழுங்குகளுக்கு அமைந்து நடக்க வேண்டும் என்பது அவனுடைய கொள்கை; வாழ்க்கையைச் செவ்விதே நடாத்த விரும்பும் எவரும் சரி குறித்த குறித்த கட்டுப்பாடுகள் விதிகளை வகுத்து, அவற்றுக்கிணங்கத் தாமும் நடக்கவேண்டும்; சகல கருமங்களும் கிரமப்படி நடக்க வேண்டும் என்பது அவனுடைய சித்தாந்தம். அவன் தனது இராச்சியத்தில் இருந்தும் ஏனைய நாடுகளில் இருந்தும் உறுதியான, தேகக் கட்டமைந்த நெடியவர்களைத் தன் இராணுவத்தில் சேர்த்து ஒழுங்கான பயிற்சி பெறச் செய்தான். அவர்களுக்கு நல்ல வேதனமும் கொடுத்தான். ஆனல் அவர்கள் தக்க பயிற்சி பெற வேண்டும்; அடிக்கடி அவர்களின் திறமையைத் தக்கவாறு பரிசோதிக்க வேண்டும் என்று அவன் கண்டிப்பான கட்டளை விதித்

தான். இதன் பயனாக பிரஷிய இராணுவம் அக்காலத்திலே மிகச் சிறந்த இராணுவமாக விளங்கியது

பிரெடெரிக் வில்லியத்தின் மகன் தன் தந்தை கொண்டிருந்த குணங்களுக்கு மாறான குணங்களைக் கொண்டிருந்தான். நூலாராய்ச்சியில் அவன் அதிகம் ஈடுபட்டு இராணுவப் பயிற்சியில் புலனைச் செலுத்தவில்லை. இதனால் வில்லியத்துக்கு மகன் விஷயமாகப் பெரும் கவலை ஏற்பட்டது. தந்தை நுண்கலைகளை வெறுத்துஇராணுவப் பயிற்சி,யுத்த முறை என்பவற்றை அதிகம் ஊக்கினான். ஆனால் மகனோ சங்கீதம் முதலாம் அருங் கலைகளில் மிகவும் ஈடுபட்டான். இளவரசன் தன் வாலிப வயதில் எப்படியிருந்தான் என்பதனைக் காட்டுதற்கான ஓர் சம்பவத்தைச் சரித்திரக்காரர் காட்டுவர் ஒருநாள் இளவரசன் தனது ஆசிரியரிடம் லத்தீன் படித்துக்கொண்டிருந்தான். அரசன் அவன் இருந்த அறைக்குட் சென்று வழக்கமான மரபில் ஆசிரியரை நோக்கி, "என்னடா செய்கிறாய்?" என்று கேட்டான். "இளவரசனுக்கு 'இராஜ கட்டளை'(நூலை) வாசிக்கிறேன்" என்று விடையளித்தார் ஆசிரியர். உடனே மன்னன் வெகுண்டு "நானே 'இராஜ கட்டளை' வேலையைக் காட்டுகிறேன் பார்" என்று தன் கைப் பிரம்பை ஓங்கினான்; நடுக்கமுற்ற ஆசிரியர் ஓட்டம் பிடித்தார். அத்துடன் இளவரசனின் படிப்பும் ஒழிந்தது. இராணுவத்தில் இளவரசன் சேர்ந்திருந்தான்: ஆனால் ஒவ்வொரு நாளும் நடக்கும் இராணுவப் பயிற்சியில் அவனுக்கு அலுப்புத் தட்டியது; இப்படிப் பயிற்சி பெறுவதில் வெறுப்புக்கொண்ட அவன் ஒருநாள் பெற்றோருக்குத் தெரியாமல் ஓடிவிட்டான். ஆனால் அரசன் கட்டளைப்படி அவன் சிறையாக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்டான்; பின்னர் இராணுவச் சட்டங்

களை மீறினன் என்ற குற்றம் அவன் மீது பாரிக்கப்பட்டு கொலைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. ஐரோப்பா பாவில் இருந்த ஏனைய மன்னர்கள் இளவரசனுக்காக வில்லியத்துடன் பரிந்து பேசியிருக்கா விட்டால் கட்டாயம் அவன் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருப்பான். இப்படியாக இராணுவ முயற்சிகளை வெறுத்த அதே இளவரசன்தான் பிற்காலத்திலே ஐரோப்பாவின் மிகச் சிறந்த சேனுதிபதியாக விளங்கிப் பெரும் புகழ்படைத்தான் என்றால் அது நூதன மல்லவா?

1740-ம் ஆண்டு வில்லியம் இறக்க நாம் மேலே காட்டிய அதே இளவரசன் அரசனுகி 1740-ம் ஆண்டு தொடக்கம் 1786-ம் ஆண்டு வரை அரசு புரிந்தான். மகா பிரெடெரிக் என்று புகழப்பட்டவன் இவனே. மகா பிரெடெரிக் அக்காலத்தில் இருந்த ஏனைய மன்னர்களைப் போல யதேச்சாதிகாரிதான். ஆனல் பிரசைகளின் நன்மையின் பொருட்டே அப்படியான யதேச்சாதிகாரத்தை அவன் செலுத்தினன் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அவன் கல்வியை விருத்தி செய்ய வேண்டிப் பாடசாலைகளையும் பல்கலைக்கழகங்களையும் நிறுவினன். விவசாயத்தை விருத்தி செய்யவும் அவன் பல முயற்சிகளைச் செய்தான். தன் தேச மக்கள் பலவிதமான நுண் தொழில்களையும் பழகுவதற்காகப் பிறநாடுகளில் இருந்து தொழிற் கலைவல்லார் பலரைத் தன் நாட்டுக்கு வரவழைத்து அவர்களுக்குப் பலவிதங்களிலும் உதவி செய்தான். மக்கள் அனைவரும் பட்சபாதகமற்ற நீதியைப் பெறுதற்காகச் சட்டங்களைத் தொகுத்து வைத்தான். அவன் தனது அதிகாரிகள் சலியாது உழைக்க வேண்டும் என்று விதித்தான். அவர்களுக்கு

ஒரு முன்மாதிரியாக விளங்குதற்காகத் தானும் இரவுபகல் சலியாது உழைத்தான். "அரசாங்கத்தின் முதல் ஊழியன் அரசன்; அரசருக்காக மக்கள் இருப்பதில்லை. மக்களுக்காகவே அரசர்கள் இருக்கிறார்கள்" என்று அடிக்கடி கூறுவான்.

தனது இராச்சியத்துப் பிரதேசங்களை விஸ்தரிப்பதற்காக பிரெடெரிக் இரண்டு யுத்தங்களில் ஈடுபட்டான். பிரஷியாவுக்குத் தென்கிழக்கே சிலெஷியா என்ற குடி நெருக்கமான மாகாணம் இருந்தது. இதிலே ஜெர்மன் மக்களே அதிகமாக இருந்தாலும் ஆஸ்திரியரே பரிபாலித்தனர். அக்கால ஆஸ்திரிய சக்கராதிபத்தியத்தை **மரியா தெரேஸா**[1] என்ற பெண் ஆண்டு வந்தாள். தக்க காரணம் எதுவும் இன்றி பிரெடெரிக் தனது சேனைகளை சிலெஷியாவுக்குள் விடுத்து **மோல்விற்ஸ்**[2] என்னும் யுத்த முனையில் ஆஸ்திரியப் படைகளை முறியடித்தான். அரசியல் வானத்திலே பிரஷியா ஓர் புது நட்சத்திரமாகத் தோன்றிப் பிரகாசமடையத் தொடங்குவதை இந்த யுத்தத்தின் மூலம் உலகோர் கண்டனர். போர் முடிவில் சிலெஷியா மாகாணத்தை பிரஷியாவுக்குக் கையளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் மரியா தெரேஸாவுக்கு ஏற்பட்டது. ஆனால் இம்மாகாணத்தை எப்படியாவது திருப்பிப் பெற்றுவிட வேண்டும் என்று அவள் சமயம் நோக்கி இருந்தாள்.

1756-ம் ஆண்டில் ஆஸ்திரியாவுக்கும் பிரஷியாவுக்குமிடையில் மீண்டும் யுத்தம் மூண்டது. பிரான்ஸ், ருஷியா என்னும் இரு நாடுகள் இம்முறை ஆஸ்திரியா

1. Maria Theresa, 2. Mollwitz.

வுக்கு உதவி செய்தன. இப்படியாக பராக்கிரமம் வாய்ந்த மூன்று வல்லரசுகள் தன்னை எதிர்ப்பதை பிரெடெரிக் கண்டான். ஆனால் அவனுக்கு அக்காலத்திலே இங்கிலாந்து நேச நாடாக இருந்தது. அங்கே பிரதம மந்திரியாகப் பெருமையுடன் கடமை புரிந்த வில்லியம் பிற் 1 பிரெடெரிக்கிற்கு உதவி செய்யப் பெரிதும் அவாவினார். அவனுக்குப் பண உதவி செய்து பிரான்சியரின் கவனம் முழுவதையும் ஐரோப்பாவிலேயே ஈர்த்துவிட வேண்டும்; அப்படிச் செய்தால் புது உலகமாய அமெரிக்காவிலே அவர்களின் அதிகாரத்தைச் சிதைத்து விடலாம்; சுருங்கச் சொல்லுங்கால் 'ஐரோப்பாவின் எல்பே நதிக் கரையில் வைத்தே அமெரிக்காவை வெற்றி கொள்ளலாம்' என்று பிற் கூறினார். ஐரோப்பிய யுத்தத்திலே பிரான்ஸ் ஈடுபட்டால் அது தனது அமெரிக்கப் பிரதேசங்களைப் பாதுகாக்க மாட்டாது: அப்படியான சந்தர்ப்பத்திலே இங்கிலாந்து அப் பிரதேசங்களைச் சுலபமாகக் கைப்பற்றிக்கொள்ளும் என்பது பிற் கொண்ட கொள்கை. அமெரிக்காவில் இருந்த தம்மவருக்கு பிரான்சியர் உதவி செய்வதைத் தடுப்பதில் பிரிட்டிஷ் கடற்படை பெரும் முயற்சி செய்தது. பிரான்சியர் பிரஷியாவைப் பெரும் படை கொண்டு தாக்கினர். ஆனால் ரொஸ்பாக் 2 லியூதேன் 3 யுத்த முனைகளில் பிரான்சும் ஆஸ்திரியாவும் முறியடிக்கப்பட்டன. இதற்கிடையில் ருஷியர் முன்னேறி பெர்ளினைக் கைப்பற்றினர். பிரெடெரிக் மனம் சளைக்காது எதிர்த்தான். ஈற்றில் அவன் ஸோம்டோர்வ் 4 யுத்த முனையில் ருஷியரை வெற்றி கொண்டான். இப்படியிருக்க அவனுடைய வைரியான ருஷியச் சக்கரவர்த்

1, William Pitt. 2, Rossbach. 3, Leuthen. 4, Zormdorf

திலி இச்சந்தர்ப்பத்தில் இறந்தாள். இதன் பயனுக ருஷியாவுக்கும் பிரஷியாவுக்கு மிடையே சமாதானம் ஏற்பட்டது. ஏழாண்டு யுத்தம் இவ்வாருக 1763-ம் ஆண்டில் முடிவுற்றது. சிலெஷியா பிரெடெரிக்கின் ஆளுகைக்குட்பட்டது.

1772-ம் ஆண்டில் பிரெடெரிக், மரியா தெரேஸா, ருஷியச் சக்கரவர்த்தினி இரண்டாவது கதெறீன் என்னும் மூவரும் சேர்ந்து போலந்துப் பிரதேசங்களைத் தமக்கிடையே பங்கிட்டனர். ஈவிரக்கமற்ற கேவலமான செயல் இது என்பதற்குச் சந்தேகமே யில்லை. ஆனால் தமக்கு வேண்டியவற்றை எப்படியாகவேனும் பெறுவதில் அக்காலத்திலிருந்த ஐரோப்பிய யதேச்சாதிகாரிகள் தயங்கவில்லை; நீதி, நியாயம் என்பவற்றை நோக்கவில்லை என்பதை இச்சம்பவம் காட்டா நிற்கிறது. போலந்தை மூன்று பிரிவுகளாக்கினர். மேற்குப் போலந்து பிரஷியாவுக்கானது. பிரஷியாவின் வளர்ச்சியைக் காட்டும் ஓர் தேசப் படம் அடுத்த பக்கத்தில் இருப்பதை நீங்கள் காணலாம்.

ருஷியாவின் வளர்ச்சி.

ருஷிய மக்கள் பன்னெடுங் காலமாக ஐரோப்பிய மக்களுக்கு வேருனவர்கள் போலவே வாழ்ந்து வந்தனர். ஆகவே ஐரோப்பாவைப் பாதித்த சம்பவங்கள் அவர்களைப் பாதிக்கவில்லை. தொகுத்துக் கூறுமிடத்து ருஷியா ஆசிய மக்களாற் பரிபாலிக்கப்பட்டு அநேக விஷயங்களில் ஆசியப் பிரதேசம் போலவே இருந்தது. பாடசாலைகள் அதிகம் அங்கே இருக்கவில்லை. இதன் காரணமாக ருஷியர் அநேகமாகக் கல்வி வாசனையற்று இருந்தார்கள்.

18ம் நூற்றாண்டு முடியும் வரை பிரஷியாவின் வளர்ச்சி

ஏனைய ஐரோப்பிய நாடுகளில் மத குருமார் கல்வியறிவில் மிக்கவராயிருந்தார்கள். ஆனால் ருஷியாவில் இருந்த மத குருமார் கல்வியறிவற்றவர்களாய்ச் சோம்பராயிருந்தனர். சாதாரண மக்கள் தக்க கல்வி யறிவில்லாதவர்களாக கேவலம் அடிமைகள் போல வாழ்ந்தனர். தேசத்து நிலம் முழுவதும் ருஷிய ஸாரு (சக்கரவர்த்தி)க்கே இருந்தது. அவன் தான் விரும்பியபடி பரிபாலனத்தை நடாத்தினான்.

ருஷியச் சக்கரவர்த்திகளும் சக்கரவர்த்தினிகளும் ரோமனோவ்[1] பரம்பரையைச் சேர்ந்தவர்கள். **1413-ம் ஆண்டில்** போலந்துப் படைகள் ருஷியாமீது படைஎடுக்க **மிக்கேல் ரோமனோவ்**[2] என்பான் ஸார்ஆக்கப்பட்டான். அவன் வீரத்துடன் போலந்துப் படைகளை எதிர்த்து அவற்றைக் கலைத்தான். அவன் வழி வந்தவர்களே ருஷியச் சக்கரவர்த்திகள். அவர்களில் **1462-ம்** ஆண்டு தொடக்கம் **1505-ம்** ஆண்டு வரை பரிபாலித்த **பயங்கர ஐவான்**[3] என்பான் ஒருவன். அவன் கிரேக்கரையும் இத்தாலியரையும் தனது நாட்டுக்கு வரவழைத்து பலவிதத் தொழில்களிலும் ருஷியர்க்குப் பயிற்சியளிக்கும்படி செய்தான். இன்னும், அவன் ஓர் பெரும் சேனையைத் திரட்டி ருஷியாமீது படை எடுத்த **தார்த்தாரியரை**[4] **காஸன்**[5] யுத்த முனையிற் புறங்கண்டான். இவ்வெற்றியின் பயனாக கஸ்பியன் கடலுக்கு மார்க்கமான பிரதேசம் ருஷியாவுக்குக் கிடைத்தது. தன்னை ஸார் (சக்கரவர்த்தி) ஆகப் பட்டம் சூட்டிக்கொண்ட முதல் ருஷிய மன்னன் ஐவான்தான் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

---

1. Romanoff. 2. Michael. 3. Ivan the Terrible
4. Tartars. 5. Karzan

இன்னேர் ருஷிய மகா மன்னன் பீற்றர். அவன் 1689-ம் ஆண்டில் அரசனுனன். அவன் மகா பலசாலி; புத்திக் கூர்மையானவன்: ஆனுல் சில சமயங்களில் மூர்க்கனுக நடந்தான். தான் அரசன் என்பதையும் மறந்து மது வருந்தித் தனது கூட்டாளிகளுடன் வீதிகடோறும் ஆடிப்பாடிச் சில சமயங்களில் திரிவான். கேலிச் சண்டைகள் மூட்டிக் கண்டவர் நின்றவருடன் விளையாடிப் பொழுது போக்குவான். ஆனுல் அவனில் ஓர் சிறந்த குணம் இருந்தது. எக்கருமத்தை எடுத்தாலும் அதனை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று சலியாதுழைப்பான். அவன் தந்த வைத்தியம், கொத்து வேலை, கப்பல் ஓட்டுதல், கப்பல் திருத்துதல் ஆதியாம் பல தொழில்களில் தக்க பயிற்சி பெற்றிருந்தான். ஒல்லாந்தில் உள்ள அம்ஸ்ரர்டாம் துறைமுகத்தில் அவன் சாதாரண தொழிலாளியைப் போல வேலை செய்து கப்பல் சம்பந்தமான பல விஷயங்களைப் பயின்முன். இங்கிலாந்திலும் சில வருடகாலம் இருந்து இத்தொழிலிற் பயிற்சி பெற்முன்.

தனது நாடு பல விஷயங்களில் மிகவும் கேவல நிலையில் கிடக்கிறது என்பதைக் கண்ட பீற்றர் அதனை முன்னேற்றத் தீர்மானித்து, தான் ஸார் ஆக வந்ததும் பல பாடசாலைகளையும் தொழில் நுட்பக் கல்லூரிகளையும் தாபித்தான். இராணுவ அதிகாரிகளைத் தக்கவாறு பயிற்றுதற்காகச் சிறந்த இராணுவக் கல்லூரிகளை ஊர் தோறும் ஏற்படுத்தினுன். இதன் காரணமாக அவன் வெகு சீக்கிரத்தில் ஒரு சிறந்த தரைப்படையை மாத்திரமல்ல, ஒரு தக்க கடற்படையினையும் அமைக்க முடிந்தது. தனது பிரபுக்கள் ஐரோப்பிய பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று விதித்தான். தனது

கட்டளைகளை மீறிய பிரதானிகள் பிரபுக்களைத் தக்கவாறு தண்டித்தான்.

பீற்றரின் காலத்திலே ருஷியாவுக்குத் துறைமுகம் இருக்கவில்லை. நாலு பக்கமும் அது தரையாற் சூழப் பட்டிருந்தது. ஆகவே ஓர் துறைமுகத்தைப் பெற்று, கடலில் ருஷியப் படைகள் சஞ்சரிக்க வேண்டும் என்று அவன் விரும்பினான். ருஷியாவுக்கு ஒரு அளவில் அணித் தாகவிருந்த கடல்கள் இரண்டு. அவற்றுள் பால்ற்றிக் கடல் ஸ்வீடன் அதிகாரத்திலும் கருங்கடல் துருக்கரின் அதிகாரத்திலும் இருந்தன. 1695-ம் ஆண்டில் பீற்றர் துருக்கருடன்பொருது அஸோவ் துறைமுகத்தைக் கைப் பற்றினான். துருக்கரை ருஷியர் வெற்றிகொண்டது இதுதான் முதன்முறை. ஆனால் இந்த வெற்றியினால் மாத்திரம் கருங்கடலில் நிரந்தரமாக அதிகாரம் செலுத்த முடியாது என்பதைக் கண்ட பீற்றர் பால்ற்றிக் கடலில் தனது நாட்டத்தைத் திருப்பினான். அவன் போலந்து டென்மார்க் என்னும் நாடுகளுடன் ஓர் நேச உடன்படிக்கை செய்து அவற்றைத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டு, ஸ்வீடனைத் தாக்கினான். அக் காலத்தில் 12-வது சால்ஸ் என்பவன் ஸ்வீடனை ஆண்டு வந்தான். அவன் பீற்றருடன் வீரத்தோடு போர் செய்து பல வெற்றிகளை ஈட்டினான். ஆனால் பீற்றர் மனம் சலிக்காது 10 ஆண்டு காலமாகப் போரை விடாது நடாத்தி ஈற்றில் 1729-ம் ஆண்டில் பொல்ற்றவா[1] யுத்த முனையில் அவனை வெற்றி கொண்டான். யுத்தத்தில் தோல்வியுற்ற சால்ஸ் பால்ற்றிக் பிரதேசங்களில்

1. Poltaya

பெரும் பகுதியை பீற்றருக்கு ஒப்புவித்தான். இதன் பின் பீற்றர் நேவா ஆற்றங்கரையில் ஓர் நகரத்தை நவமாக நிறுவி அதற்கு செயின்ற் பீற்றர்ஸ் பர்க் எனப் பெயரிட்டான், செயின்ற் பீற்றர்ஸ் பர்க் பல்லாண்டு காலமாக ருஷியாவின் தலைநகரமாயும் பிரதான துறைமுகமாயும் மேற்கிலிருந்து ருஷியாவுக்குள் பிரவேசிப்பதற்கான வாயிலாயும் விளங்கியது.

கொடிய யதேச்சாதிகார முறையினையே பீற்றர் அரசியலில் அநுட்டித்தான். "ஸார்தான் மக்கள் யாவருக்கும் மேலானவன்: அவனே சர்வாதிகாரி: அவன் உலகிலுள்ள எவருக்கும் பொறுப்பாளியல்லன்" என்று அவன் ஒருமுறை கூறினான். அவன் தனக்கு ஆதரவாக 2இலட்சம் வீரரைக்கொண்ட ஓர் சிறந்தஇராணுவத்தை வைத்திருந்தான். அக்காலத்தில் அவனுடைய அதிகாரத்துக்கும் செல்வாக்குக்கும் எதிரிடையாக இருந்தது திருச்சபை. இத்திருச் சபை கிரேக்க திருச்சபையின் ஓர் பகுதியாக இருந்தது. அப்படியிருந்தும் கொன்ஸ்தாந்திநோப்பிளில் இருந்த கிழக்குத் திருச்சபையின் பத்ரியாக் எனப்பட்ட பிரதம குருவின் அதிகாரத்தில் ருஷிய திருச்சபை இருக்கவில்லை. பாப்பரசர் எவ்வாறு மேற்குப் பகுதித் திருச்சபைக் கதிபதியாக இருந்தாரோ அவ்வாறே பத்ரியாக்கும் கிழக்குத் திருச்சபைக் கிருந்தார். தனக்கு எதிரிடையாக இன்னொருவர் அதிகார பதவியில் இருப்பதை விரும்பாத பீற்றர் மொஸ்கோவில் இருந்த பத்ரியாக் பதவியை ஒழித்து பரிசுத்த குருசங்கம் [1] எனப்படும் தாபனத்தின் மேற்பார்வையில் ருஷியத் திருச்சபை அலுவல்களை ஒப்புவித்தான். "பரிசுத்த"

1. Holy Synod

சினட்டுக்குப் பீற்றரே அதிபதியாகவும் இருந்தான், இன்னும் நாட்டின் தூரித்த இடங்களிலும் தன் அதிகாரத்தை விஸ்தரிப்பதற்காக அவ்விடங்களில் பரிபாலனக் கருமங்களை நடாத்தும் அதிகாரிகளையும் தானே நியமித்தான். தனக்குள்ள சத்துருக்களை அகற்றுதற்காக ஓர் இரகசியப் பொலிசு முறையினையும் அவன் ஏற்படுத்தியிருந்தான். அவனுடைய காலத்துக்கு முந்தி டியூமா[1] என்ற பெயருடன் பாராளுமன்றம் போன்ற ஓர் தாபனம் இருந்தது. பீற்றர் அதனை ஒழித்து தனது ஆணைக்குள் அடங்கிய ஓர் சிறிய சபையை ஏற்படுத்தினான். இவ்வாருக அவன் தனக்கு எதிரிடையாக இருந்த சகல தாபனங்களையும் அகற்றி தனிச் சர்வாதிகாரியாக விளங்கினான். ஓர் பிற்போக்கான சாகியத்தாரை முன்னேற்றுதற்காக பீற்றர் செய்த முயற்சிகளை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. நாட்டுக்கு வேண்டிய தொழில்களை நடத்தக்கூடிய என்ஜினியர்மாரைப் பயிற்றுதற்காக அவன் பல கல்லூரிகளையும் ஏற்படுத்தினான். ஆனால் ஆரம்ப விஞ்ஞானம், கணிதம், எழுத்து முதலியனவும் அங்கே கற்பிக்கப்பட்டன; இவை முன்னர் அங்கே அவ்வளவாகக் கற்பிக்கப்படவில்லை. விவசாயத்தினையே பிரதானமாகக்கொண்ட ருஷியா உற்பத்தித் தொழில், வர்த்தகம் என்பவற்றிலும் ஈடுபட அவன் தன்னலான முயற்சிகள் அனைத்தையும் செய்தான். இப்படியெல்லாம் பீற்றர்[2] செய்தும் மேலைத் தேசச் செல்வாக்கு ருஷியாவில் அதிகம் முன்னேறவில்லை. மக்களைப் பலவந்தப்படுத்தி புது முறைகளை அநுட்டிக்கும்படி செய்ய முடியாதல்லவா?

---

1. Duma 2 பீற்றரை மகா பீற்றர் என்று சரித்திரக்காரர் கூறுவர்.


ருஷிய சக்கராதிபத்தியம்
1816–1854
1855–1876
ருஷிய
நாட்டின் விஸ்திரணம்

பீற்றருக்குப்பின் இரண்டாவது கதரீன் என்பவள் சக்கரவர்த்தினியானுள், அவள் 1762-ம் ஆண்டு தொடக்கம் 1796-ம் ஆண்டுவரை ருஷியாவைப் பரிபாலித்தாள். பீற்றரைப் போலவே கதரீனும் பரிபாலன விஷயங்களில் ஈவிரக்கமற்றவள். ஆனால் மிக்க திறமை வாய்ந்தவள். 1774-ம்ஆண்டில் அவள் துருக்கரைப் போரில் தோற்கடித்து கருங்கடலின் வடகரைப் பகுதிகளைப் பெற்ருள். போலந்தின் ஓர் பகுதியையும் கைப்பற்றினுள். இவ்வாருக ருஷியாவின் எல்லைப்புறங்கள் காலந்தோறும் விஸ்தரிக்கப்பட்டன. ருஷியாவின் வளர்ச்சியைக் காட்டும் படம் ஒன்றை முற் பக்கத்திற் காண்க.

வினக்கள்.

1. பின்வருவனவற்றைப்பற்றிச் சிறு குறிப்பு எழுதுக:- நவாரே ஹென்றி; நான்ரிஸ் கட்டளை; றிச்செல்யூ; கொல்பேட்: மகா எலெக்ரர்; பொல்ற்றவா.

2. பிரஷிய இராச்சியம் வளர்ச்சியுற்ற விதத்தைக் கிரமப்படி காட்டுக.

3. மகா பீற்றர் என்னும் ஸார் தன் இராச்சியத்தை இக்காலத்துக்கேற்ற விதமாக எப்படி அமைத்தான் என்பதை விபரிக்க.

4. பால்ற்றிக் கடல், கருங்கடல் என்பவற்றில் அதிகாரம் செலுத்த பீற்றர் விழைந்த காரணம் என்ன?

5. தனது பிரசைகளுக்குச் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் 14-வது லூயி அளிக்கத் தவறினுன் என்னும் கூற்றை விளக்குக.

10-ம் அதிகாரம்

குடியேற்ற நாடுகளைப் பெறும் முயற்சிகள்.

கீழைத் தேயங்களிலே நடைபெற்ற வாசனைத் திரவிய வியாபாரத்திற் பங்கு பற்றுதற்காக அங்கே போவதற்கு ஓர் மார்க்கம் கண்டுபிடிப்பதில் ஐரோப்பியர் ஈடுபட்டிருந்தனர் என்பதை முன் ஒரு அதிகாரத்தில் நீங்கள் படித்திருக்கிறீர்கள். அக்காலத்தில் ஐரோப்பாவிலே இத்தாலியில் இருந்த நகரங்கள் சிலவும் ஜெர்மனியிலே இருந்த நகரங்கள் சிலவும் செல்வம் கொழித்திருந்தன. ஜெர்மனிய வர்த்தக நகரங்கள் ஹன்சியற்றிக் சங்கம் [1] என்ற ஓர் கூட்டமைப்பிற் சேர்ந்திருந்தன. இப்படியான இத்தாலிய நகரங்களோ ஜெர்மன் நகரங்களோ கீழைத் தேசங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி யாத்திரைகளில் ஈடுபடவில்லை என்பதும் ஸ்பெயின், போர்த்துக்கல், பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற விவசாய நாடுகளே இந்த யாத்திரைகளில் அதிகம் ஈடுபட்டன என்பதும் நாம் குறித்துக் கொள்ள வேண்டிய விஷயங்களாம். இவ்வாறான நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதை இனி ஆராய்வாம்.

மத்தியகால ஐரோப்பாவிலே தங்கம் வெள்ளி என்னும் உலோகங்கள் அரிதாக இருந்தன. ஆனால் வர்த்தகம் பெருகப் பெருக, நாணயங்கள் அடிப்பதற்குத் தங்கமும் வெள்ளியும் அதிக மதிகமாகத் தேவைப்பட்டன. அந்நிய வர்த்தகம் இல்லாத தேசங்களும் பொற் சுரங்கங்களும் வெள்ளிச் சுரங்கங்களும் இல்லாத நாடுகளும் பெரிதும் இடைஞ்சற் பட்டன. இன்னும்,

1. Hanseatic League

ஓர் விஷயத்தால் பொன் வெள்ளிக்கான தேவை அதிகப் பட்டது. அக்காலத்து அரசர் தத்தம் தேசங்களில் அதிகாரம் செலுத்தவும், வேண்டிய இராணுவத்தை நிறுவவும், யுத்தங்கள் செய்யவும் அவர்களுக்குப் பொன்னும் வெள்ளியும் இன்றியமையாதிருந்தன. ஆகவே இவ்வரசர்கள் பொன்னும் வெள்ளியும் விளையும் பிரதேசங்களைக் கைப்பற்ற அவாக் கொண்டனர். அப்படியான நாடுகள் கிடைக்காவிட்டால், பொன் வெள்ளியை வியாபாரமூலம் பெறுதற்குக் கீழைத்தேச வாசனைத் திரவிய வியாபாரத்தில் ஈடுபட அவாவினர்.

ஸ்பெயின் கீழைத்தேசத்துக்கான ஓர் மார்க்கத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து அதற்குப் பதிலாக மெக்ஸிக்கோ, தென்பீரு நாடுகளில் உள்ள தங்கச் சுரங்கங்களையும் வெள்ளிச் சுரங்கங்களையும் காத்திராப் பிரகாரம் கண்டுபிடித்தது. 1493-ம் ஆண்டுக்கும் 1640-ம் ஆண்டுக்கு மிடையில் 875 தொன் பொன்னையும் 45720 தொன் வெள்ளியையும் ஸ்பெயின், மெக்ஸிக்கோ, தென் பீரு நாடுகளில் இருந்து பெற்றது. இதனால் ஸ்பெயின் மன்னர்மீது ஏனைய மன்னர் பொறாமையுற்றது நூதனமன்று. போர்த்துக்கீசர் கீழைப் பிரதேசங்களுக்கான பாதையைக் கண்டுபிடித்து வாசனைத் திரவிய வர்த்தகத்தில் ஏகபோக உரிமை கொண்டனர். இதன் பயனாக கீழைத்தேச வாசனைத் திரவிய வர்த்தகத்துக்கு லிஸ்பன் நகரமே ஐரோப்பாவில் முக்கிய தானத்தை வகித்தது. இந்த வியாபாரத்தால் போர்த்துக்கல்லுக்கு ஆண்டு தோறும் 1,500,000 பவுண் இலாபம் கிடைத்தது.

இப்படியாகச் செல்வம் வருவதைக் கண்டவர்கள், பொன்னையும் வெள்ளியையும் அல்லது விலையுயர்ந்த

திரவியங்களையும் தமக்குத் தரக்கூடிய நாடுகள் தத்தம் தேசங்களுக்கும் இருக்க வேண்டும் என அவாவினர். இப்படியான வருமானம் இல்லாவிட்டால் இறக்குமதி யாகும் பொருள்களைக் குறைக்க வேண்டும்; அப்படிக் குறைத்தால்தான் தேசப் பணம் வெளியூர்களுக்குச் செல்லாது என்று அக்கால அரசியல் வாதிகள் கொண்டனர். பிரான்ஸ் தேசம் தனக்கு வேண்டிய துணிகளையும் உணவுப் பொருள்களையும் தானே ஆக்கிக் கொண்டு, உற்பத்திப் பொருள்களை வேற்று நாடுகளுக் கனுப்பி அங்கிருந்து பணத்தை ஈர்க்க வேண்டும் என்று அந்நாட்டின் முதலமைச்சனாக விளங்கிய கருதினுல் றிச் செல்யூ கூறிக் கருமம் ஆற்றினுன். இப்படியாக உற்பத்திப் பொருள்களை வெளியேஅனுப்பிப் பணம் சம்பாதிக்க வேண்டுமானுல் பிரான்சுக்குக் குடியேற்ற நாடுகள் இருக்க வேண்டும், அத்துடன் சிறந்த ஓர் கடற்படையும் இருக்க வேண்டும் என அவன் நிச்சயித்தான். பிரான்சைப் போலவே பீரஷியா, டென்மார்க், ஸ்வீடன், இங்கிலாந்து என்னும் நாடுகளும் குடியேற்ற நாடுகளைத் தாபிக்கக் கருதி தங்கள் நாட்டில் கப்பல் கட்டும் தொழில், பொருள்களை உற்பத்தியாக்கல், அவற்றை ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றை ஊக்கப்படுத்தின.

"ஏனைய நாடுகளில் இருந்து பணத்தை ஈர்க்க வேண்டும்" என்ற கொள்கை ஐரோப்பாவிலே வளர்வதற்குப் பல காரணங்கள் இருந்தன. அரசர்களுக்கு முன்னரிலும் பார்க்கக்கூடிய பணம் தேவைப்பட்டமை அவற்றுள் ஒன்று. 15-ம் நூற்ருண்டில் பெரும் கப்பல்கள் கட்டப்பட்டமை பிறிதோர் காரணமாகும். இவற்றிலே பெருந்தொகைப் பொருள்களை ஏற்றி யனுப்பும் வசதி

ஏற்பட்டது. உற்பத்திப் பொருள்கள் பெருகியமை மூன்ருவது காரணம். மன்னர்கள் தத்தம் நாடுகளிலே உற்பத்திப் பொருள்களை ஆக்கவேண்டும் என்று ஊக்கப் படுத்தியதன் பயனுக அவை அபரிமிதமாக உள்ளூர்த் தேவைக்கு மிஞ்சி ஆக்கப்பட்டன. ஆகவே அவற்றை வேறு நாடுகளில் விற்க வேண்டிய அவசியம் உண் டானது. 17-ம் 18-ம் நூற்ருண்டுகளில் உற்பத்திப் பொருள்கள் மிகப் பெருந் தொகையில் ஐரோப்பிய நாடுகளில் ஆக்கப்பட்டன. அவற்றை விற்பதற்குப் புதிய நாடுகளைப் பெறுவதில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபட்டன. முன்பெல்லாம் தங்கம் வெள்ளி பெற புதிய நாடுகள் தேவைப்பட்டன. ஆனுல் இப்போது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய நாடுகள் தேவையாகின. உற்பத்திப் பொருள்களுக்கு வேண்டிய மூலப் பொருள்க ளைக் கொடுத்து, உற்பத்திப் பொருள்களை விலைக்கு வாங்கக்கூடிய நாடுகள் ஒவ்வொரு ஐரோப்பிய நாட் டுக்கும் தேவைப்பட்டன. இப்படியான குடியேற்ற நாடுகள் அல்லது "காலனி"கள் ஒரு தேசத்துக்கு இருக்கு மானுல், அது அவற்றைத் தன் விருப்பப்படி வைத்துப் போதிய பயன் பெறலாம்: அமெரிக்காக் கண்டத்தில், பிரான்ஸ், செயின்ற் லோறென்ஸ், மிசிஸிப்பி பள்ளத் தாக்குப் பிரதேசங்களைத் தனக்காக்கியது. மேற்கிந்தியத் தீவுகளில் இங்கிலாந்து பல பிரதேசங்களைக் கைப்பற் றியது. கிழக்கே, கிழக்கிந்தியத் தீவுகளை டச்சுக்காரர் தமதாக்கினர். இந்தியாவிலே இங்கிலாந்தும் பிரான்சும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தித் தம் குடியேற்ற நாட்டு ஏகாதிபத்தியத்தை விஸ்தரிக்கும் முயற்சியில் தனித்தனி ஈடுபட்டன. இவ்விஷயத்தில் இவ்விரு நாடுகளும் எதிரிடையிட்டதை இனி ஆராய்வாம்.

ஒரு தேசம் முன்னேறி வலிமை கொள்ள வேண்டு மானல் அதற்கெதிரிடையாகவுள்ள தேசத்தை அடக்கி விடவேண்டும் என்ற ஒரு கொள்கை அக்காலத்தில் இருந்தது. இப்படியான கொள்கையே யுத்தங்களுக்கும் காரணமாக இருந்தது. ஒவ்வொரு தேசமும் உற்பத்திப் பொருள்களைக் குவித்து வைத்திருந்தது. ஆனால் அவற்றை விற்க அவாப்பட்டனவே யன்றி, வாங்க விரும்பவில்லை. சுருங்கக் கூறுமிடத்து, அவை தம் பொருள்களை விற்பனை செய்வதில் பரஸ்பரம் போட்டி யிட்டன. மற்றும் தேசப் பொருள்கள் வருவதைத் தடுப்பதற்காக ஒவ்வொரு தேசமும் துறைமுகத் தீர் வையை அதிகரித்தது. புதுப் புது நாடுகளைக் கைப்பற்றி ஆங்குள்ள வர்த்தக உரிமைகளைப் பெறுவதில் ஐரோப்பிய நாடுகள் பரஸ்பரம் போட்டியிட்டன. 1688-ம் ஆண்டு 14-வது லூயி மன்னன், முன்னர் பலற்றினேற் என்று வழங்கப்பட்ட றைன் பிரதேசங் களைக் கைப்பற்றி ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் வம்ச மன்னரது செல்வம் செல்வாக்கைக் குறைக்கச் சூழ்ச்சி செய்தான். இப்பிரதேசங்கள் பொருள்களை உற்பத்தி செய்தற்குச் சிறந்த தானங்களாக இருந்தன. பிரான்சிய அரசனின் இம்முயற்சியைத் தடுக்க இங்கிலாந்தும் ஒல்லாந்தும் அவனுக்கெதிராகப் போரில் ஈடுபட்டன. இந்த யுத்தம் குடியேற்ற நாடுகளுக்கும் பரவியது. இக்காலத்திலே அமெரிக்காவில் செயின்ற் லோறென்ஸ் பள்ளத்தாக்கில் பிரான்சியக் குடியிருப்புகளும் அத்லாந் திக்கை யடுத்த கரைப் பிரதேசங்களில் ஆங்கிலரின் குடியிருப்புக்களும் இருந்தன. பிரான்சியர்[1] தம் குடியி ருப்புக்களை செயின்ற் லோறென்ஸ் பள்ளத்தாக்கிலிருந்து

1. பிரஞ்சுக்காரர் என்றும் சிலர் கூறுவர்.

அவர்கள் பல பகுதிகளில் சிறு சிறு கோட்டைகளையும் கட்டிவைத்திருந்தனர். பிரான்சியர் அங்கே அதிகாரம் செலுத்தியகற் கடையாளமாக அப்பிரதேசத்துப் பெயர்கள் இன்றும் இருக்கின்றன. செயின்ற் லோறென்ஸ் கோட்டை, நியூஓர்ளியன்ஸ் என்பன அக்கோட்டைகளில் இரண்டு. மிசிஸிப்பி சமவெளியை பிரான்சியர் கைப்பற்றிவிட்டதால் தாம் அத்லாந்திக் சமுத்திரக் கரைப் பிரதேசத்துடன் மாத்திரம் இருக்க வேண்டி ஏற்படும், ஆகவே மிசிஸிப்பிச் சமவெளியைத் தாம் எப்பாடு பட்டேனும் கைப்பற்ற வேண்டும் என்று ஆங்கிலர் அவாவுற்றனர். இதன் பயனாக அமெரிக்காவில் குடியேறிய பிரிட்டிஷார்க்கும் பிரான்சியர்க்கு மிடையே அடிக்கடி சண்டைகள் ஏற்பட்டன.

பிரான்சையும் ஸ்பெயினையும் ஒன்றாக்க 14-வது லூயி செய்த முயற்சியைக் கெடுப்பதற்காக அவனுக்கெதிராக இங்கிலாந்தும் ஒல்லாந்தும் போர் தொடுத்தன. ஸ்பானிய சிம்மாசனப் போர் [1] என்ற இந்த யுத்தம் 1701-ம் ஆண்டு தொடக்கம் 1713-ம் ஆண்டுவரை நிகழ்ந்தது. ஐரோப்பாவில் யுத்தம் நடக்க அமெரிக்காவில் இருந்த பிரான்சியர் ஆங்கிலர் என்பவர்களுக்கிடையிலும் மீளவும் போர் மூண்டது. 1713-ம் ஆண்டில் ஸ்பானிய சிம்மாசன யுத்தம் முடிவடைந்தது. நோவா ஸ்கோஷியா என நாம் இப்போது வழங்கும் பிரதேசத்தையும் நியூபவுண்ட்லாந்து தீவையும் ஹட்ஸன் விரிகுடாவைச் சுற்றியுள்ள பிரதேசத்தையும் யுத்த முடிவில் பிரான்ஸ் இங்கிலாந்துக்குக் கையளித்தது.

1756-ம் ஆண்டு இன்னோர் ஐரோப்பிய யுத்தம் மூண்டது. இதிலே ஆஸ்திரியா, பிரான்ஸ், ருஷியா

1. War of Spanish Succession

என்னும் நாடுகள் ஓர் பக்கமாகவும், இங்கிலாந்தும் பிர ஷியாவும் மற்றப் பக்கமாகவும் நின்று பொருதின. இதனை 'ஏழாண்டு யுத்தம்'' 1 என்பர். இந்த யுத்த முடிவி லும் இங்கிலாந்துக்குப் பல பிரதேசங்கள் கிடைத்தன. கனடாவில் செயின்ற் லோறென்ஸ் பள்ளத்தாக்குப் பிர தேசம் முழுவதையும் பிரான்ஸ் இங்கிலாந்துக்கு இழந் தது. குவிபெக் என்ற சிறந்த பிரதேசத்தையும் பிரான் சியர் இழந்தனர். கனடா என்னும் டொமினிய 2 னுக்கு ஆதாரமாக பிரான்சியர் இழந்த பிரதேசங்களே விளங் கின. மிசிஸிப்பிக்குக் கிழக்கேயுள்ள பிரதேசங்களனைத் தையும் பிரான்சியர் பிரிட்டிஷாருக்குக் கையளித்தனர். இதனால் அவர்கள் அடைந்த நட்டமோ மகத்தானது. பிரிட்டிஷார் இவ்வாறு புதிதாகப் பெற்ற பிரதேசங்களி னால் வட அமெரிக்கா முழுவதுக்கும் எசமானர்களாயி னர். அத்துடன் மேற்குப் பக்கமாக அவர்கள் தங்கள் பிரதேசங்களை விஸ்தரிக்கவும் வசதி ஏற்பட்டது. வட அமெரிக்காவில் ஓர் ஏகாதிபத்தியத்தை நிறுவவேண்டும் என்று பிரான்ஸ் கொண்டிருந்த ஆசை இவ்வாறாக நிரா சையாயிற்று.

ஆனால் சில காலத்தில் அமெரிக்காவிற் குடியேறிய ஆங்கிலருக்கும் அவர்களுடைய தாய் நாடாகிய இங்கி லாந்துக்கு மிடையே பிணக்கு உண்டானது. அமெரிக்க ஆங்கிலர் மெல்ல மெல்லவாகத் தொகையில் அதிகரித் துக்கொண்டுவந்தனர். அவர்களின் இளம் சந்ததியினர் தாய் நாடாகிய இங்கிலாந்தை அறியாதவர்கள். அங்கே அவர்கள் போனதும் இல்லை. ஆகவே அவர்கள் தாம் வேறு இங்கிலாந்தில் உள்ளார் வேறு என்ற மனப்பான்

---

1. Seven years War 2. Dominion - சமவரசு என்றும் கூறுவர்.

மையும் கொள்ளத் தொடங்கினர். அவர்கள் அமெரிக்காவிற் பிறந்து அமெரிக்காவிலே வளர்ந்தவர்கள். எனவே தாம் அமெரிக்கரன்றி ஆங்கிலரல்லர் என்று கொள்ளவும் தலைப்பட்டனர். இன்னும், அவர்களைப் பரிபாலிப்பதற்குரிய தேசாதிபதிகளை இங்கிலாந்து மன்னன் நியமித்து வந்ததையும் அவர்கள் விரும்பவில்லை. தேசாதிபதிகளை நியமிக்கும் விஷயத்தில் தங்களையும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று அவர்கள் கருதினர். சனப்பிரதிநிதிகள் சபைகளை அமைத்து அவை மூலமாகவே பரிபாலனத்தை நடத்த வேண்டுமன்றித் தம்மை இங்கிலாந்தில் உள்ள மன்னனும் அவன் நியமிக்கும் தேசாதிபதிகளும் யதேச்சாதிகாரமாக ஆளக் கூடாது; இங்கிலாந்தில் இருந்த மக்கள் யதேச்சாதிகார ஆட்சியை ஒழித்துத் தம்மைப் பரிபாலிக்கும் விஷயத்தில் வரம்புடை முடியாட்சியை ஏற்படுத்தியவாறு தாமும் யதேச்சாதிகார அரசியன் முறைக்கு முடிவு கட்ட வேண்டுமென அமெரிக்கர் எண்ணினர். இதுவரை பிரான்சியருக்கு அவர்கள் அஞ்சி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் துணையில் தங்கியிருந்தனர். ஆனல் பிரான்சியர் தோல்வியுற்று அகன்றுவிட்டபடியால் அவர்களின் பயம் இப்போது அமெரிக்க ஆங்கிலருக்கு இருக்கவில்லை. ஆகவே இனி தமக்கு பிரிட்டிஷ் உதவியும் வேண்டியதில்லை என அவர்கள் கொண்டனர்.

பிரிட்டிஷாருக்கும் அமெரிக்கருக்குமிடையில் பிணக்கு உண்டாயதற்கு வேறு பல காரணங்களும் இருந்தன. இங்கிலாந்தில் இருந்த வர்த்தகர், குடியேற்ற நாட்டு வர்த்தகம் முழுவதையும் தம் ஏகபோக உரிமையாக வைத்துக்கொண்டிருந்தனர் அன்றி அக்குடியேற்ற

நாடுகளில் இருந்த வர்த்தகரும் அதில் ஈடுபடவிடவில்லை. அப்படி விடுத்ததால் தமக்கு அவர்கள் எதிரிடையாகி விடுவர் என ஆங்கில வர்த்தகர் கருதினர். குடியேற்ற நாட்டு வர்த்தகர்கள் தொழில் விஷயமாக முன்னேறுவதைத் தடுக்கவும் பல சட்டங்களை இங்கிலாந்து அரசாங்கம் இயற்றியது; குடியேற்ற நாடுகளில் இருந்து வெளியே போகும் பொருள்களை பிரிட்டிஷ் கப்பல்களில் அல்லது அக்குடியேற்றநாட்டுக் கப்பல்களிலேயே ஏற்றிச் செல்லவேண்டும் என்பது இச்சட்டங்களில் ஒன்று. அக்காலத்திலே குடியேற்ற நாடுகளிடம் வர்த்தகக் கப்பல்கள் இருக்கவில்லை. எனவே, பிரிட்டிஷ் கப்பல்களிலேயே அப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது இதனால் பிரிட்டிஷ் வர்த்தகர் பெரும் இலாபம் படைத்தனர். இங்கிலாந்துடன் வியாபாரம் செய்வதால் தமக்கு இலாபம் இல்லை எனக் கண்ட அமெரிக்க குடியேற்ற நாட்டு வாசிகள் மனக் கொதிப்படைந்திருந்தனர்.

அமெரிக்காவில் இருந்த ஆங்கிலரைப் பாதுகாக்க பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கே ஓர் இராணுவத்தை வைத்திருந்தது. அதற்கான செலவை அமெரிக்கர் இறுக்க வேண்டும் என்று இங்கிலாந்து கூறியது; அமெரிக்கர் இங்கிலாந்தின் கோரிக்கையை நிராகரிக்கவே, இங்கிலாந்து அவர்கள் மீது வரி விதிக்கத் தீர்மானித்தது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே தம் பிரதிநிதிகள் இல்லை; ஆகவே அப்பாராளுமன்றம் இயற்றும் வரிச் சட்டங்கள் தம்மைப் பாதிக்க முடியாது என்று அமெரிக்கர் வாதாடினர். ஆனால் இங்கிலாந்து அமெரிக்காவில் இருந்து வெகு தூரத்தில் உள்ளது; எனவே அமெரிக்கர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதற்கு அடிக்கடி

அங்கே போக முடியாது: அக்காலக் கப்பற் பிரயாணம் மிகத் தாமதமாகவே இருந்து வந்தது. எனவே பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே அமெரிக்கர் அங்கம் வகிப்பது முடியாதிருந்தது. இரு பகுதியாருக்கும் பிணக்கு வர வர முற்றிக்கொண்டது. விஷயங்களை ஆராய்ந்து ஓர் சமாதானத்துக்கு வரக்கூடிய மனப்பான்மை அவர்களிடம் இருக்கவில்லை. ஈற்றில் - அதாவது 1775-ம் ஆண்டில் - அமெரிக்கர் அனைவரும் ஒற்றுமை கொண்டு இங்கிலாந்துக்கு விரோதமாகப் போர் புரிவதென்று தீர்மானித்து தமக்குத் தலைவராக ஜோர்ஜ் வாஷிங்ரன் [1] என்பவரைத் தெரிவு செய்தனர். அதன் பின்னர் பிரிட்டிஷாருக்கும் அமெரிக்கருக்கும் நிகழ்ந்த யுத்தத்தில் பிரான்ஸ் அமெரிக்கருக்கு உதவி புரிந்தது. 1783-ம் ஆண்டில் யுத்தம் முடிவடைய இங்கிலாந்துக்கு விரோதமாகப் போர் தொடுத்த 13 அமெரிக்க நாடுகளும் சுதந்திரமடைந்தன. 1787-ம் ஆண்டில் இந்நாடுகள் ஓர் குடியரசாகி தம் முதல் சனாதிபதியாக வாஷிங்ரனைத் தெரிந்து கொண்டன. ஆனால் கனடா பிரிட்டிஷார் பொறுப்பிலேயே தொடர்ந்து இருந்தது.

இந்தியாவிலே ஓர் பராக்கிரமம் வாய்ந்த முகலாய சக்கராதிபத்தியம் 17-ம் நூற்றாண்டில் இருந்தது. ஆனால் 1707-ம் ஆண்டில் அவுரங்கசீப் என்ற முகலாய மன்னன் இறக்க அச்சக்கராதிபத்தியம் பரஸ்பரம் எதிரிடையான சிறு சிறு இராச்சியங்களாகச் சிதறினது வங்காளம், அயோத்தி, கர்நாடகம், ஹைதரபாத், மைசூர் என்பன இவற்றுட் சில. இந்திய இராச்சியங்கள் இவ்வாறு பரஸ்பரம் எதிரிடையிட்டுக்கொண்டிருப்

1. George Washington

பதைக் கண்ட பிரான்சிய கிழக்கிந்தியக் கொம்பனி இந்தியாவிலே தனக்கென ஓர் ஏகாதிபத்தியத்தைத் தாபிக்க இதுதான் தக்க சமயம் என எண்ணிக் கருமம் ஆற்றினது. அது சுதேச மன்னர்களுக்கிடையே யிருந்த பகையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அவர்களுக்குச் சமயோசிதமாகப் படை உதவி செய்தது. இந்தியச் சிப்பாய்களையே அது தக்கவாறு பயிற்றி அவர்களைக் கொண்டு தான் விரும்பிய மன்னர்க்கு உதவியது. அப்படி உதவி செய்தமையின் பொருட்டு பணமாகவோ, நிலமாகவோ பிரதியுபகாரத்தை மன்னர் தமக்கு வழங்க வேண்டுமென அறிவித்தது. 1741-ம் ஆண்டில் இவ்வாறுன கருமங்களினுல் டுப்புளே[1] என்னும் பிரான்சியத் தேசாதிபதி ஹைதரபாத்திலும் கர்நாடகத்திலும் பிரான்சிய அதிகாரத்தை நிலைநாட்டினுன்.

இதே காலத்தில் பிரிட்டிஷாரும் இந்தியாவிலே பம்பாய், சென்னை (சென்ற் ஜோர்ஜ் கோட்டை) கல்கத்தா (வில்லியம் கோட்டை) என்னும் இடங்களில் வர்த்தகத் தாபனங்களை ஏற்படுத்தி பிரான்சியர் கைக் கொண்டு வந்த அதே கொள்கையினை அநுட்டித்து வந்தார்கள். பிராசியர்க்கு டுப்புளே வாய்த்தது போல, ருேபேட் கிளைவ்[2] என்பவன் பிரிட்டிஷாரிடம் இருந்தான். கிளைவ் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கொம்பனியில் ஒரு கிளாக்காகச் சேர்ந்து பின்னர் சிறந்த இராணுவ வீரனுனன். அவன் கர்நாடக இராச்சியத்தில் உள்ள ஆற்காட்டைக்கைப்பற்றி பிரான்சியரிலும் பார்க்க பிரிட்டிஷாரே வல்லவர்கள், ஆகவே அவர்களின் துணையை நாடுதல்தான் மேல் என்பதைத் தென்னிந்திய சமஸ்தா

1. Dupleix 2. Robert Clive

ஞதிபதிகளுக்குத் தெருட்டினுன். 1756-ம் ஆண்டில் வங்காள நவாப் பிரிட்டிஷாரைத் தாக்கினுன். கிளைவ் அவனையும் அவனுக்கு உதவி புரிந்த பிரான்சியரையும் பிளாஸி யுத்தமுனையில்[1] வெற்றிகொண்டு இன்னெருவனை வங்காள நவாப்பாக்கினுன். புதிய நவாப் வங்காள அரசிறையைச் சேகரிக்கும் உரிமையை பிரிட்டிஷாருக்கு வழங்கினுன். 1758-ம் ஆண்டில் பிரான்சியர் சென்னையைத் தாக்கினர். பிரிட்டிஷார் எதிர்த் தாக்குதல் புரிந்து வென்றனர். அத்துடன் மசூலிப் பட்டின யுத்தத்திலும் வன்டிவாஷ்[2] யுத்தத்திலும் பிரான்சியர் முறியடிக்கப்பட்டனர். இதன் பயனுக அவர்களுக்கு இந்தியாவில் இருந்த அதிகாரமும் செல்வாக்கும் அற்று விட்டன. புதுச்சேரி, சந்திரநாகூர் என்ற இரண்டு சிறு பிரதேசங்களை யொழிந்த ஏனைய இந்தியப் பிரதேசங்களிலிருந்து அவர்கள் விரட்டப்பட்டனர். ஐரோப்பாவில் ஏழாண்டு யுத்தம் முடிந்ததும், இந்தியாவில் பிரிட்டிஷாரே மிகச் செல்வாக்குப் பெற்ற ஐரோப்பிய சாகியத்தாராயினர்.

1792-ம் ஆண்டில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கு மிடையே மீண்டும் போர் ஏற்பட்டது. இலங்கையிலே கரையோர மாகாணங்களுக் கதிபதிகளாக இருந்த டச்சுக்காரர் பிரான்சியருடன் நேசமாக இருந்தனர். ஆனுல் அவர்களின் தலைவன் ஒல்லாந்தை விட்டு நீங்கி இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்திருந்தான். எனவே அவன் இங்கிலாந்துக்குச் சாதகமாக இருந்தான். இந்தியாவிலே தமக்கும் பிரான்சியருக்கும் யுத்தம் நிகழும் காலத்திலே தமக்கு இலங்கையின் திருக்கோணமலைத் துறைமுகம்

1. Battle of Plassey. 2. Wandiwash

அத்தியாவசியம் என்பதை பிரிட்டிஷார் கண்டனர். இத்துறைமுகமும் இலங்கையில் இருக்கும் ஏனைய துறை முகங்களும் பிரான்சியர் கைக்குப் போகக்கூடாது என்பது பிரிட்டிஷாரின் கொள்கை. இங்கிலாந்தில் இருந்த டச்சுத் தலைவன் பிரிட்டிஷார் திருக்கோணமலைக் குட் பிரவேசித்து அதனை உபயோகிக்கலாம் என்று அநுமதியளித்தான். ஆனால் அவனின் கட்டளையை ஏற்க மறுத்த இலங்கை டச்சுத் தேசாதிபதி திருக் கோணமலைக்கு பிரிட்டிஷார் வந்ததை எதிர்த்தான். இதன் காரணமாக பிரிட்டிஷார்க்கும் டச்சுக்காரர்க்கு மிடையே இலங்கையில் யுத்தம் மூண்டது. 1796-ம் ஆண்டில், பிரிட்டிஷார் திருக்கோணமலையைக் கைப்பற் றினர். இதற்குப்பின் கொழும்பும் அவர்கள் வசமாக இலங்கையில் டச்சுக்காரர் அதிகாரம் ஒழிந்தது. எனவே இலங்கைக்கும் பிரிட்டிஷார் அதிகாரிகளாயினர்.

வினாக்கள்

(அ) புது உலகமாய அமெரிக்காவிலே,
(ஆ) ஆசியாவிலே,

பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் அபிவிருத்தியான தன்மையைச் சுருக்கமாகத் தருக.

2. 18-ம் நூற்றுண்டு ஐரோப்பிய நாடுகள் தமக் கெனக் குடியேற்ற நாடுகள் இருக்க வேண்டும் என அவாவியதேன்? குடியேற்ற நாடுகளால் அவை அடைந்த இலாபம் என்ன?

விலை ரூபா 2/-